கடல் முத்து

முதலிய கதைகள்

அண்டோனியா பாகஸாரோ –
பிரான்ஸ்வா காப்பி –
ஸெல்மா லாகர் லெவ் –
யோஹன் போயர் –



தமிழில்:
க. நா. சுப்ரமண்யம்

கடல் முத்து

முதலிய கதைகள்

தமிழில்:

க. நா. சுப்ரமண்யம்

உள்ளடக்கம்

1. கடல் முத்து – அண்டோனியா பாகஸாரோ

2. அதிசயம் – பிரான்ஸ்வா காப்பி

3. அடிமைப் பெண் – ஸெல்மா லாகர் லெவ்

4. சுவர்க்கத்தில் காரி ஆஸென் – யோஹன் போயர்

அண்டோனியா பாகஸாரோ

இத்தாலியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே எழுதிய மிகச் சிறந்த ஆசிரியர்களுள் ஒருவர் அண்டோனியா பாகஸாரோ. அவர் கதைகளில் கவிதையும் கருத்தும் கற்பனையும் மிளிரும் என்பதற்கு இந்தக் ‘கடல் முத்து’ ஒரு சிறந்த உதாரணம்.

கடல் முத்து

அண்டோனியா பாகஸாரோ

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் எட்டாத் தொலைவிலுள்ள ஒரு தேசத்திலே ஒரு கவி அரசனாக ஆண்டு கொண்டிருந்தான். கடற்கரையிலே திரிந்துகொண்டே கவிதைகள் கவனம் செய்வது அவன் வழக்கம். இப்படிப் பாடிக்கொண்டிருக்கும் போது ஒருநாள் அவன் மிகவும் அழகான ஒரு கீதம் இசைத்தான். அந்தக் கீதம் காரணமாக அவன் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை அடக்க மாட்டாமல் கண்ணீர் விட்டான். அவன் கண்ணீர்த்துளிகள் கடலில் விழுந்து கடல் முத்துக்களாயின.

ஒரு முந்நூறு வருஷங்களுக்குமுன் இந்த முத்துக்களில் மிகவும் அழகான ஒரு முத்து ஒரு மீனவன் கையில் அகப்பட்டது. அது ஒரு மனித இதயம் போன்ற உருவம் பெற்று மிகவும் அழகாக இரு.தது அதை வெனிஸ் நகரத்து மன்னன் வாங்கி, தனது ராஜ்பத்தின் பிரபுக்களில் ஒருவரிடம் கொடுத்தான். அந்தப் பிரபு காண்டாரினா காண்டாரினி எனும் தன் சீமாட்டிக்கு அதை அளித்தான்.

காண்டாரினி சீமாட்டி மகா அழகி– ஐசுவரியமுள்ளவள் குணவதி. ஆனால் அவளுக்கு வாழ்விலே அமைதியோ இன்பமோ இல்லை. ஏனென்றால் அவளுக்குப் பிறந்த ஒரே குழந்தை அவளுக்கு மணமான மூன்றாவது வருஷம் இறந்துவிட்டது. இந்தக் கதையில் வருகிற சம்பவங்கள் எல்லாம் நடக்கக் கூடுமா என்று சந்தேகம் வரலாம்–ஆனால் உண்மையில் நடந்தவைதான். இப்போது நான் சொல்லப் போகிற இந்தக் கதை நடந்தபோது அந்தக் குழந்தை இறந்து பன்னிரண்டு வருஷங்களாகிவிட்டன. சீமாட்டிக்கோ அவள் கணவனுக்கோ கடவுள் அருளால் இன்னொரு குழந்தை பிறக்கும் என்கிற நம்பிக்கையே இல்லை. அதுவும் பெண்ணாகப் பிறக்கும் என்கிற நம்பிக்கையே சிறிதும் இல்லை .

ஒருநாள் அலங்காரப் படகில் ஆலயத்துக்குப் போன சீமாட்டி காண்டாரினா தெருவில் கால் வைத்துவுடன் ஒரு பிச்சைக்காரி தன் இரண்டு குழந்தைகளுடன் எதிர்ப்பட்டாள். மூவருமே கந்தைகள்தான்

அணிந்திருந்தார்கள். பிச்சை கேட்டார்கள். காண்டாரினா சீமாட்டி ஒரு முழுப் பவுனை எடுத்துத் தரவே, பிச்சைக்காரி நன்றியுடன், உணர்ச்சி மேலிடச் சொன்னாள்:

"சீமாட்டியே! கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார். உன்னையும் உன் ஜனங்களையும் ஆசீர்வதிப்பார். நமது தெய்வீக ராணி உனக்கு ஆனந்தத்தை அளிப்பாள்." சற்று நேரத்துக்கெல்லாம் சீமாட்டி காண்டாரினா சந்த ஜானிகோலா ஆலயத்தை அடைந்தாள். கல்வியைப் பற்றி ஒரு மதகுரு பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அவர் கார்ணீலியா என்கிற ஒரு ரோமாபுரித் தாயைப்பற்றிச் சொன்னார். என் குழந்தைகளே என் ஆபரணங்கள்" என்று சொன்னாளாம் அவள்.

உடனேயே சீமாட்டி காண்டாரினா தனக்குள் நினைத்துக் கொண்டாள். "என் கடல் முத்து போய்விட்டாலும் பாதக மில்லையே, என் பெண் மட்டும் இருந்தால்!" என்று எண்ணிக் கொண்டாள்.

ஆலயத்துப் பிரார்த்தனை முடிந்தவுடன் சீமாட்டி காண்டாரினா தனது அரண்மனைக்குத் திரும்பினாள். அலங்காரப் படகிலே வெனிஸ் நகரத்துக் கால்வாய்களிலே போகும்போது அவள் சற்றுக் கண்ணயர்ந்துவிட்டாள். கனவொன்று கண்டாள். அக்கனவிலே உருவமற்ற ஒரு குரல் சொல்லிற்று; 'அவளை நீ இழக்க விரும்பமாட்டாய். கவிதையும் இசையும் அவளை அணுகாமல் பார்த்துக்கொள். அவை அணுகினால் அவள் போய்விடுவாள்" என்றது அக்குரல் அதன் அர்த்தம்தான் சீமாட்டிக்குப் புரியவில்லை.

தன் மாளிகையை அடைந்தபோது தன் வேலையாட்கள் தங்களுக்குள் கூக்குரலிட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருப் பதைக் கண்டாள் அவள். அவளைக் கண்டதும் எல்லோரும் அவளைச் சூழ்ந்து கொண்டு ஒரே சமயத்தில் பேசினார்கள். அரண்மனை வாசல் கதவைத் திறந்து போட்டுவிட்டு அஜாக் கிரதையாக இருந்துவிட்டதாக ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டார்கள். யாரோ ஒருவர் கதவைத் திறந்துதான் வைத்திருக்கவேண்டும்; ஏனென்றால் உள் அறையில் யாரோ வந்து ஒரு பிறந்த குழந்தையை– பெண் குழந்தையைத் தொட்டிலில் கிடத்திவிட்டுப் போயிருந்தார்கள். குழந்தையின் அழுகுரல் கேட்டு, வேலைக்காரர்கள் தேடி அதைக் கண்டு பிடித்தனர். அது சீமாட்டியின் அறையிலே, பன்னிரண்டு

வருஷங்களாகக் காலியாகக் கிடந்த வெள்ளித் தொட்டிலிலே கிடந்தது. தனியாகக் கிடந்து அழுதுகொண்டிருந்தது.

சீமாட்டி காண்டாரினா ஆனந்தக் கூச்சலிட்டாள். எல்லோரையும் விலகச் சொல்லிக் கையைக் காட்டினாள். தன் அறைக்குள் பாய்ந்து ஓடினாள். தொட்டிலில் முத்து வெள்ளையாகப் பளபளத்துக் கொண்டு ஒரு சிறு குழந்தை கிடந்தது. ஆழ்ந்த கடலின் நிறம் போல நீலமாக இருந்தன அதன் கண்கள். காண்டாரினா உள்ளே வந்ததும், அந்தக் குழந்தை அழுவதை நிறுத்திவிட்டுத் தன் சின்னஞ்சிறு கைகளை அவள் பக்கம் நீட்டியது. தன் நகைகள்வைத்திருந்த பெட்டியைத் திறந்து பார்த்தாள் சீமாட்டி. வெனிஸ் மன்னர் தந்த அந்த முத்தைத் தவிர மற்றதெல்லாம் அப்படியே இருந்தது. அந்த முத்து ஒன்றை மட்டும்தான் காணவில்லை. கடவுளே நீ சிந்தனைகளைக் கேட்டு அறிந்துகொண்டு தனக்காக இந்த மாயத்தை நடத்தித் தந்திருக்கிறார் என்று புரிந்தகொண்டாள் சீமாட்டி காண்டாரினா. ஏழைப் பிச்சைக் காரியின் நன்றிகலந்த ஆசியைப் பலிக்கச் செய்துவிட்டார் கடவுள் என்று எண்ணி ஏற்றுக் கொண்டாள்.

தன்னுடைய இறந்த குழந்தையின் பட்டாடைகளை இந்தக் குழந்தைக்கு அணிவித்தாள் சீமாட்டி. அவள் ஆனந்தம் கரை கடந்ததாக இருந்தது. தன் கணவனுக்குச் சொல்லியனுப்பி னாள். அவன் வந்ததும் தன் கதை பூராவையும் சொன்னாள் பிச்சைக்காராயின் ஆசியையும், மதகுருவின் பிரசங்கத் தையும், தனது அந்தரங்க சிந்தனையையும், கடவுள் நிகழ்த்தியிருந்த அந்த அதிசயத்தையும் சொன்னான்.

பிரபு, கியோவன்னி காண்டாரினிக்கு இது ஒரு அதிசய மாகத் தோன்றவில்லை. யாரோ திருடன் உள்ளே புகுந்து முத்தைத் திருடிக் கொண்டு, அதற்குப் பதில் இந்தக் குழந்தையை விட்டுவிட்டுப் போயிருக்கவேண்டும் என்று தான் அவனுக்குத் தோன்றிற்று.ஆனால் தன் மனைவியின் ஆனந்தத்தை பார்க்க அவனுக்கும் ஆனந்தமாக இருந்தது. அந்தக் குழந்தையைத் தனது என்று தன் மனைவிக்காக ஏற்றுக்கொள்ள அவன் தயாராகவே இருந்தான்.

சந்த மார்க்கரெட்டின் விருந்து நாள் அன்று நடந்த காரியம் இது. ஆகவே அந்தக் குழந்தைக்கு 'மார்க்கரெட்' என்று பெயர் வைத்தார்கள். மார்க்கரெட்

என்றாலே முத்து என்றுதானே அர்த்தம்! ஆனால் குழந்தைக்குப் பேச்சுவரத் தொடங்கியதும், அது தன் பெயர் 'மல்காரி' என்று சொல்லிக் கொண்டது. அந்தப் பெயரை நிலைத்து விட்டது அதற்கு.

மல்காரி வளர்ந்து பெரியவளாகிக் கொண்டிருந்தான். பலசாலியாகவும் திடகாத்திரமானவளாகவும் வளர்ந்தாள். ஒரு விசித்திரமான முத்து வெள்ளை நிறமாக அவள் இருந்தாள் என்பதைத் தவிர மற்றப்படி அவளை வெனிஸ் நகரத்திலேயே மிகவும் அழகான பெண் என்றுதான் சொல்ல வேண்டும். காண்டாரினி மாளிகை வேலைக்காரிகளும், பொறாமைப் பிண்டங்களான வெனிஸ் சீமாட்டிகளும் அந்தப் பெண்ணின் உடம்பிலே நாடோடி ரத்தம் ஓடுகிறது என்றும், அதனால் தான் எப்படியோ ஒரு தினுசான நிறமாக இருக்கிறாள் என்றும் வம்பளந்தார்கள். ஆனால் மல்காரியின் முகத்தைப் பார்த்த யாரும் அவள் உடலில் நாடோடி ரத்தமோ, மற்றும் கீழ்க்குல மக்களின் பண்போ ஓடியது என்று சொல்ல மாட்டார்கள். அவள் முகத்திலே நாகரிகம் நிறைந்து கவிதை போல அமைதியும் அழகும் இருந்தது. அவள் குரல் வெகு இனிமையாக இருந்தது. இந்த வதந்தியெல்லாம் எவ்வளவு ஆதாரமற்றவை, நிஷ்பிர யோசனமானவை என்பதை ருசுப்பிக்க அவள் முகமும் குரலும் பயன்பட்டன.

உணர்ச்சி வசப்பட்ட குழந்தை அவள். வழக்கமாக அவள் உல்லாசமாகவேதான் இருப்பாள். சந்தோஷமும், இனிமை யும் தொனிக்க எப்போதும் கலகலவென்று சிரிப்பாள். ஆனால் அவள் காதில் விழ யாராவது திட்டினாலோ, அல்லது கொடிய வார்த்தைகளைச் சொன்னாலோ போதும் – அவள் முகம் இருண்டு கறுத்து விடும். அவள் துயரத்தில் ஆழ்ந்தவிடுவாள். கொடுமையான காரியம் ஏதாவது அவள் கண்ணில் பட்டு விட்டாலும், பிறருடைய துயரத்தையும் கஷ்டங்களையும் பற்றிப் பிறர் சொல்லக் கேட்டுவிட்டாலும் போதும் – அவள் சந்தோஷம் ஓடி மறைந்துவிடும். சிரிப்பையும் பேச்சையும் நிறுத்திவிட்டு மௌனமாகி விடுவாள். முக்கியமாக அவள் எதிரில் யாராவது ஒருவர் வந்து ஒரு பொய் சொல்லிவிடும் போது அவள் முகபாவம் சடக்கென்று மாறிவிடும்.

அவளுடைய நாலாவது வயதில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு கோடை நாள் இரவில் கால்வாயில் படகிலே போய் கொண்டிருந்த யாரோ ஒருவன்

சிதாரில் ஏதோ ஒருபாட்டை இசைத்துக்கொண்டே சென்றான். இடை இடையே அவன் குரலும் சேர்ந்து சிதாருடன் ஒலித்தது. மல்காரி தன் தாயா ருடன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தவள் குதித்தெழுந்து ஜன்னலண்டை போய் நின்றாள். பாட்டு தூரத்தில் மறைந்து தேயும் வரையில் அந்த ஜன்னலைவிட்டு நகர மறுத்து விட்டாள். பாட்டு தேய்ந்து போனவுடன் மூர்ச்சையாகத் தரையிலே விழுந்துவிட்டாள்.

மூர்ச்சை தெளிந்து சுயநினைவு பெற்றவுடன் மறுபடியும் ஜன்னலண்டை போய் அந்தப் பாட்டைக் கேட்க விரும்பி னாள் அவள். அது சாத்தியமில்லையே! உடனேயே அவளுக்கு ஜுரம் வந்து விட்டது; உடம்பு கொதித்தது. மூன்று நாட்கள் – இரவும் பகலும் – ஜன்னியில் பிதற்றினாள் அவள். தான் போக வேண்டும் என்றும், தான் வெனிஸ் நகரைச் சேர்ந்தவள் அல்ல வென்றும், தன் தேசத்தின் குரல் அழைக்கிறது, சீமாட்டிக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. மல்காரி, அம்மா! அம்மா! என்னை அழைத்துப் போய் விடு அம்மா! என்று அவளைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டுக்கொண்டே இருந்தாள்.

பின்னர்தான் கனவில் தான் அன்று கேட்ட அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தன சீமாட்டி காண்டாரி னாவுக்கு. கவிதையோ இசையோ அந்தக் குழந்தையின் காதில் படாமல் வைத்துக் கொள்வது என்பது வெனிஸ் நகரில் நடக்காத காரியம். ஆகவே வெனிஸ் நகரைவிட்டு வெளியேறி விடுவது என்று தீர்மானித்தாள் அவள். கிரேக்கத் தீவுகளில் ஒன்றான ஸைரா என்கிற தீவு அவள் கணவனுக்குச் சொந்தம் அதிலேயும் அவர்களுக்கு ஒரு அரண்மனை இருந்தது. ஆலிவ். ஆரஞ்சு, லாரல் மரங்கள் அடர்ந்த அத்தீவிலே, தோப்பைப் பார்த்துக் கொண்ட தோட்டக்காரக் குடியானவர் களைத் தவிர வேறு மனித சஞ்சாரமே கிடையாது. அங்குப் போய் விடலாம் என்று தீர்மானித்தாள் சீமாட்டி.

ஆனால் பிரபு காண்டாரினிக்கு இது ஒரு பைத்தியக்கார யோசனையாகப் பட்டது. தவிரவும் அவனால் வெனிஸ் நகரை விட்டுக் கிளம்புவதென்பது சாத்தியமில்லை. ஆனால் சீமாட்டி பிடிவாதம் பிடிக்கவே, முடிவில் தனியாக அவள் மட்டும் மல்காரியை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

ஸைராத் தீவிலுள்ளவர்கள் யாரும் பாடவோ, ஏதாவது வாத்தியத்தில் வாசிப்பதோ கூடாது என்று கடுமையான உத்தரவு போடப்பட்டது. ஆலயத்து மணிகள் அடிப்பதைக் கூடத் தடுத்துவிட்டாள். சீமாட்டி காண்டாரினா. ஏனென்றால் அந்த ஆலய மணிச் சப்தம் இசையாகவே மல்காரியின் காதில் விழுந்தது அவள் உள்ளத்தைப் பாதித்தது. காற்றும் கடலும் எழுப்பிய இசையிலே பின்னணியாக ஒலித்த ஆலய மணிகள் இசைபோலவேதான் இருந்தன.

ஆனால் அந்தத் தீவில் வாழ்க்கையில் பழைய உற்சாகமும் தெம்பும் ஆனந்தமும் இல்லாமல் இருந்தாள் மல்காரி. விளை யாடுவதே நின்றுவிட்டது. அவள் சிரிப்பதும்கூட அபூர்வ மாகிக் கொண்டிருந்தது. ஆனால் ஒரு திருப்தி மட்டும் இருந்தது அவளுக்கு. கடல் அலையின் ஓசை கேட்க நாள் பூராவும் கழிப்பதென்பது அவளுக்குத் திருப்திகரமாகவே இருந்தது போல இருந்தது. கடற்கரையிலே வெகு நேரம் நின்று ஏஜியக் கடல் குரல் தருவதையே கவனித்துக் கொண்டிருப்பாள் அவள்.

வயதாக ஆக அவளுக்குப் படிப்பதிலே ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. அரண்மனை வாசகசாலையில் மணிக்கணக்காக ஏதாவது புஸ்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பதை ஒரு நாள் அவள் தாயார் கண்டாள். அவள் வாசித்துக் கொண்டிருந்த கவிதை அவளுக்கு ஜ்ஏர வேகத்தைத் தந்துவிட்ட மாதிரி இருந்தது. அவள் உள்ளம் கவிதையின் உற்சாகத்துடன் கொந்தளித்தது. அவள் கண்கள் சுடரிட்டன. அவள் கன்னங்கள் கவிதை வேகத்தால் சிவந்திருந்தன. ஆகவே சீமாட்டி காண்டாரினா வாசகசாலையிலிருந்த அத்தனை கவிதைப் புஸ்தகங்களையும் அப்புறப்படுத்தி எரித்துவிட ஏற்பாடு செய்துவிட்டாள்.

பிரபு காண்டாரினி வருஷத்தில் ஒன்றிரண்டு தடவைகள் தான் ஸைரா தீவுக்கு வருவான். வந்தாலும் மூன்று நாட்களுக்கு மேல் தங்க மாட்டான். தன் மனைவியினுடைய பைத்தியக் காரத்தனம் என்று ஆரம்பத்தில் அவனுக்குக் கோபம் வந்தது. ஆனால் பின்னர் இது பழகிப்போய்விட்டது; தான் இதில் செய்யக் கூடியது எதுவுமில்லை என்று ஒதுங்கி விடுவான்.

தன் பெற்றோர் இருவருக்குமிடையே அன்பு குறைந்து விட்டது என்று கண்ட மல்காரிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தன்னால்தான்

இதெல்லாம் என்று அறிந்து மேலும் வருந்தினாள். பல தடவைகள் தன் தாயாரிடம் தன்னைத் திரும்பவும் வெனிஸ் நகரத்துக்கு அழைத்துப் போய்விடச் சொல்லிக் கேட்டாள். தன் பிறப்பின் ரகசியம் பற்றி அவளுக்கு இன்னமும் ஒன்றும் தெரியாது. ஏன் திடீரென்று வெனிஸ் நகரத்திலிருந்து வெளியேற நேர்ந்தது என்பது பற்றியும் அவளுக்கு ஒன்றும் தெரியாது. தன் உடல் நலம் காரணமாக, தன்னைத் திருப்திப்படுத்தவே தன் தாயார் தன் தகப்ப னாருடனும் சண்டை பிடித்துக் கொண்டு அந்த நிர்மானுஷ்ய மான தீவிலே தங்கியிருக்கிறாள் என்று எண்ணினாள் அவள். வேறு ஏதாவது பேசினால் இதெல்லாம் கேட்காதே என்று அவள் அம்மா கண்ணீர் விட்டு, முத்தங்கள் சொரிந்து கொஞ்சுவாள்.

ஒருநாள்–மல்காரிக்கு அப்போது பதின்மூன்று வயதாகி இருந்தது வேலையை விட்டுத் துரத்தப்பட்ட ஒரு வீட்டு வேலைக்காரி அந்தக் குடும்பத்தின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் உத்தேசத்துடன், முழுக் கதையையும் மல்காரி யிடமே சொல்லி விட்டாள். திருடர்களும் நாடோடிகளும் பிரபு கண்டாரினியின் மாளிகைக் கதவு திறந்தபோது உள்ளே நுழைந்து அவளைக் குழந்தையாகத் தொட்டிலில் போட்டு விட்டுப் போய்விட்டார்கள் என்று தனக்குத் தெரிந்த உண்மையை அந்த வேலைக்காரி மல்காரியிடம் சொன்னாள். மல்காரியின் உடல் ஒருதரம் நடுங்கிற்று. முத்தைவிட வெண்மையாயிற்று அவள் முகம். வேலைக்காரியிடம் உன்னை மன்னித்தேன், போ" என்று சொல்லிவிட்டு அவள் நேரே தன் தாயாரிடம் சென்றாள். நிமிர்ந்து ராணி போல நின்று கொண்டு, அழுத்தலாக, அதட்டலாக, முழுக் கதையையும் தனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டாள். அந்தக் கேள்விக்குப் பதில் வரும் வரையில் அசைய மாட்டேன் என்றாள்.

சீமாட்டி காண்டாரினா அவளிடம் ஒன்றையும் ஒளிக்காமல் சொன்னாள். அன்று நடந்த அதிசயத்தைச் சொன்னாள். அவளுக்கும் உடலும் உள்ளமும் நடுங்கின. மல்காரியின் அழகிய வெளுத்த முகத்திலே காலைக் கதிரவனின் பொன் னொளி போன்றதோர் ஒளி பரவிற்று. புது முகமாக மலர்ந்தது அது–அழகு பெற்றது. " அம்மா, எனக்கு தெரியும்". என்றாள் அவள். நான் சாதாரண நாடோடியின் மகள் அல்ல. நான் முத்துத்தான் – கடல் முத்துத்தான். ஆனால் அதை நீ யாருக்கும் சொல்லக்கூடாது.

காற்றுக்குத் தெரிந்தால் அது என்னை மாசு படுத்தி விடும். கடலுக்குத் தெரிந்தால் அது என்னைக் கூப்பிட்டுக் கொண்டு விடும். அது சரி அம்மா, ஆனால் இன்னொன்று சொல்லு நீ. ஏன் யார் பாடுவதும் என் காதில் விழாதவாறு தடுக்கிறாய்? ஏன் நான் கவிதை படிக்கக்கூடாது என்கிறாய்? எத்தனை அழகான கவிதைகளை எழுதியிருக் கிறார்கள்! அவற்றை நான் தெரிந்து கொள்ள முடிய வில்லையே!"

சீமாட்டி காண்டாரினா இதற்கு நேரடியான சரியான பதில் தரவில்லை. மல்காரியும் அதற்குமேல் வற்புறுத்தவில்லை. தன் தாயாரைக் கட்டித் தழுவி முத்தமிட்டு விட்டு அவள் காதில் ரகசியமாகச் சொன்னாள்;

"நான் வெனிஸ் நகரத்துக்குத் திரும்ப விரும்புகிறேன் அம்மா "

அதே தினத்தன்று மாலை மல்காரி சமுத்திரக் கரையண்டை போனாள். இரண்டு பெரிய கற்பாறைகளினால் தேக்கப்பட்ட குளம் போன்ற அமைதியான ஒரு பகுதியை அடைந்தாள். மிருதுவான, பளிச்சென்றிருந்த மணலில் கடல் தூங்கிக் கொண் டிருந்தது- தொட்டிலில் அமைதியாக உறங்கும் குழந்தை போல லாரல் மரங்களுக்கு பின் உயர்ந்து பெரிய பைன் மரங்கள் நிமிர்ந்து நின்றன. அடிக்கும் காற்று எல்லாம் அங்கு ஒரு நாதத்தை எழுப்பியது-யாழில் இசை வல்லுனரின் விரல் எழுப்பும் நாதம் போல.

இன்று போலத் தான் என்றும் கடலை நேசித்ததில்லை என்று மல்காரி நினைத்தாள். மணலிலே படுத்தாள். கடலலைகள் வந்து அவள் உடலை லேசாகத் தொட்டுவிட்டுச் சென்றன. மிருதுவாக அவளை தலை முதல் கால் வரையில் கடல் அலைகள் தழுவிக் குளிப்பாட்டின. கடல் வெத வெதப் பாக இருந்தது-அன்பு காட்டியது-மிருதுவாக இருந்தது. தான் நல்முத்தாக இருந்த காலத்தை எண்ணியபடியே மல்காரி அந்தக் கடலுடன் குசுகுசு வென்று அன்பு நிறைந்த உள்ளத் துடன் பேசினாள். தன் உள்ளத்தைத் திறந்து கொட்டினாள். கடலையே தன் தாயாக எண்ணிக் கொஞ்சினாள் கெஞ்சினாள். வெனிஸ் நகரில் அன்றொரு நாள் இசையமுதை அருந்தி அனுபவித்த அந்த ஆனந்தத்தைத் தான் மறுபடியும் அனுபவிக்க அருள வேண்டும் என்று கெஞ்சினாள். அதே அனுபவம் அன்று டாஸோவின் கவிதையில் க்ளோரிண்டா டான்க்ரெடி

என்பவர்களுடைய கதையைப் படிக்கும்போது மீண்டும் அவளுடைய தாக இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள்.

கடல் மிருதுவாகவே பதில் அளித்தது. இந்த அழகு அனுபவம் மட்டுமல்ல– இதே போன்ற பன்மடங்கு அழகான அனுபவங்களையும் தருவதாக வாக்களித்தது கடல். வானம் இருண்டது. ஆழ்கடலும் அதன் கீழ் இருண்டது. மல்காரிக்குத் தான் தூங்கிக் கொண்டிருந்ததும் விழித்துக் கொண்டிருந்ததும் கனவு கண்டதும் நிச்சயமாகத் தெரியவில்லை . மல்காரியின் கண்களுக்கெதிரில் தூரத்தில் நிச்சயமாகத் தெரியவில்லை . மல் காரியின் கண்களுக்கெதிரில் தூரத்திலிருந்து லக்ஷக்கணக்கான சிறு சுடர்கள் நகர்ந்து வருவது போல இருந்தது. அருகில் அந்தச் சுடர்கள் வந்ததும் தான் தெரிந்தது– ஒவ்வொரு சுடரும் ஒவ்வொரு பெண்ணின் முகம் என்று. ஆயிரக்கணக்கான பெண்களின் முகங்கள்– இருண்டவை. வெளுத்தவை, பள பளத்த கடல் மேலே அதிகமாகப் பளபளத்தன. சிறு சிறு கைகள், பல்லாயிரக்கணக்கானவை, கடல் நீரில் அளந்து தண்ணீர்த் திவலைகளைத் தெளிக்கச் செய்தன. அழகிய ஆபரணங்கள் போல வர்ண ஜாலத் திரளாக நீர்த்துளிகள் எழும்பி அடங்கின.

மல்காரி காத்திருந்த அந்தக் கடல் குளத்துக்கு அவர்கள் வந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் கடல் நீரிலே நீந்தி விளையாடியது பளிச்சென்று ஒளி நிறைந்து மல்காரியின் மனத்தையும் கண்களையும் உள்ளத்தையும் கவர்ந்தது. அவர்கள் அந்த இடத்தைத் தாண்டி செல்லும் போது திரும்பித் திரும்பி மல்காரியே உற்றுப் பார்த்தார்கள். ஆனால் அவர்களில் யாரும் நின்று அவளை நெருங்க வில்லை; அதாவது அந்தக் கடைசிப் பெண்ணைத் தவிர. அவள் கடல் அலைகளை விட்டு நகர்ந்து பாறைகள் வந்து கரைக்கு இரண்டொரு அடிகளுக்கப்பால் நின்றாள்.

"யார் நீ? என்று மல்காரி கேட்டாள்.

“கடல் கன்னிகள்."

"கடல் கன்னிகளா? அப்படியானால் உங்களால் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்ல இயலுமல்லவா?"

"ஆமாம்."

"என் எதிர்காலம் என்ன சொல்லு"

அந்தச் சிறு கடற்கன்னி அவளையே உறுத்துச் சிறிது நேரம் பார்த்தாள். பிறகு சொன்னாள்;

"நீ கவிதையும் இசையும் கூடிப் பிறந்தவள். நீ இசையையும் கவிதையையும் மீண்டும் சென்றடைவாய்."

கடற் கன்னியின் முகம் ஒரு குழந்தையினுடைய மென்மையான முகம். ஆனால் அவளுடைய கண்கள் முப்பது வயது ஸ்திரீயினுடையது போல இருந்தன. அழகும், துயரமும், ஆழமும் குடியிருந்தன அக்கண்களிலே.

"அழகிய கன்னியே, அருகில் வா, எனக்கொரு முத்தம் தா" என்றாள் மல்காரி.

"என்னால் வரமுடியாது. கடற்கன்னிகளாகிய நாங்கள் கரையை எட்டவே இயலாது."

"நாம் மறுபடியும் சந்திப்போமா?"

"நான் கடலைச் சேர்ந்தவள்" என்றாள் துயரக் கண்கள் உள்ள அந்தக் கடற்கன்னி. "நீ வானத்தை சேர்ந்தவள்"

போய் வருகிறேன் என்று விடைகூடப் பெற்றுக் கொள்ளாமல், அவசரமாகத் திரும்பி, தன் சகோதரிகளைப் பின்பற்றிப் பாறைக்குப் பின் மறைந்து விட்டாள் அந்தக் கடற்கன்னி.

மல்காரி வீடு திரும்பினாள். கடற் கன்னியைப் பற்றி அவள் பேசவில்லை . தனக்குக் கவிதையும் இசையும் தகாது என்று சீமாட்டி காண்டாரினா ஏன் தீர்மானித்திருந்தாள் என்பது பற்றி இனி விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை அவளுக்கு.

அன்று மாலைக்குப் பிறகு அவள் சிரித்ததை யாரும் கண்ட தில்லை. மேலும் மிருதுவானவளாகவும் பக்தி நிறைந்த வளாகவும் வளர்ந்து வந்தாள் அவள்.

தீவில் யாருக்காவது ஏதாவது கஷ்டம் வந்தாலும் ஏதாவது தேவைப்பட்டாலும், மல்காரி அவர்களைத் தேடிக்கொண்டு போய்

தன்னாலானதைச் செய்வாள். தன் அனுதாபம், உதவி, இரக்கம் முதலியவற்றால் அவர்களைத் தேற்றுவாள். அவர் களுடைய துயரில் அவளும் பங்கு கொண்டாள். அவள் அந்த ஏழைகளுடைய குடிசைகளை மட்டும் தான் அடைந்தாள் என்பதில்லை. அவர்களுடைய உள்ளங்களையும் ஆக்கிர மித்துக் கொண்டாள். எங்கு அவள் போய்ச் சேர்ந்தாலும் அங்கே அவளால் ஒளி பிறந்தது ஆறுதல் தோன்றியது – கஷ்டம் விலகியது, லேசாயிற்று.

மாலை நேரங்களில் அவள் அடிக்கடி அந்தக் கடற்குளத்தை நாடிப்போவாள். ஆனால் அதற்குப்பிறகு அந்தக் கடற் கன்னிகள் ஒருநாளும் அவள் கண்களுக்குப் படவேயில்லை.

அவளுக்கு வயது பதினைந்து ஆகும்போதே, பதினெட்டு வயது என்று சொல்லும்படி அவள் வளர்ந்துவிட்டாள். அழகான முகமும், உயரமும், உடல் வளர்த்தியுமாக அவள் பெரியவளாகி விட்டாள் உடனே அவளுக்கென்று ஒரு தலைவனைத் தேடி மணம் செய்து வைப்பது நல்லது – இன்னும் சிலநாள் காத்திருக்கலாமா என்று யோசிக்கத் தொடங்கினாள் சீமாட்டி காண்டாரினா.

பிரபு கியோவன்னி காண்டாரினி அந்தத் தீவில் அவர்களை நாடிவந்தே இப்போது இரண்டு ஆண்டுகளுக்கும் அதிகமாகி விட்டன. அவன் கடிதம் எழுதுவதும் அபூர்வம்தான். இரண்டு மாதத்துக்கொருதரம் எழுதினால் பெரிது.அந்தக் கடிதம்கூடச் சமயத்தில் வரவில்லை. ஸ்மிர்ணா போய்க் கொண்டிருந்த வியாபாரக் கப்பல் –காண்டாரினி பிரபுவின் சிநேகிதர் ஒருவருடையது– அந்தத் தீவில் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றது.

கடிதம் வரவில்லை. கப்பலிலிருந்து செய்தி வந்தது. துக்கமான செய்தி, வெனிஸ் நகரத்திலே பிளேக் வியாதி அலை அலையாக அடித்துப் பீடித்துக்கொண்டிருந்தது.

இந்தச் செய்தி கேட்ட சீமாட்டி காண்டாரினா துடித்தாள். தன் கணவனைப்பற்றி எப்படியோ என்னவோ என்று கவலை யுற்றாள். அவருக்கும் பிளேக் பற்றிருக்கலாம் – அவரைக் கவனித்துக் கொள்ளத் தானும் கூட அங்கில்லையே என்று தவித்தாள். ஆனால் இதைவிடப்

பெரிய தவிப்பைத் தந்தது மல்காரியின் அமைதியான தீர்மானம் . வெனிஸ் நகரத்தில் அவர்களுடைய சேவை தேவைப்பட்டது. அது கடமை என்றாள் அவள். அந்தக் கடமையைச் செய்யத் தவறக் கூடாது என்றாள் மல்காரி.

சீமாட்டி காண்டாரினாவும் சம்மதித்தாள். கடவுளின் சித்தத்தை எதிர்த்து யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்கிற மானோபாவத்துடன் சம்மதித்தாள். இரண்டு வாரங்களுக் கெல்லாம் அவளும் அவள் பெண்ணும் வெனிஸ் நகரத்தில், காண்டாரினி மாளிகையைச் சென்றடைந்தனர். ஆனால் அவர்கள் போய்ச் சேருவதற்கு முந்திய தினம் பிளேக் நோயுற்றுப் பிரபு கியோவன்னி காண்டாரினி இறந்து விட்டான்.

சீமாட்டி காண்டாரினாவின் உள்ளம் முறிந்துவிட்டது. பிழியப் பிழிய அழுதாள். உடனேயே வெனிஸ் நகரை விட்டுக் கிளம்பி விடலாம் என்றாள் சீமாட்டி, மல்காரியிடம். ஆனால் அந்தப்பெண் அழவுமில்லை; குறை கூறவுமில்லை. குடும்பத்தில் உதவியே கிட்டாமல் தன் தகப்பன் இறந்ததற்குப் பொறுப்புத் தங்களுடையது தான் என்றும், அந்தப் பாபத்துக்கு உரியபடிப் பிராயச்சித்தம் செய்யத் தாங்கள் தயாராக இருக்கவேண்டும் என்றும் அவள் சொன்னாள். தன்னைப் பற்றிய வரையில் பிளேக் நோயால் அவதிப்படுகிறவர்களுக்குச் சிகிச்சை செய்யப்போவது என்று அவள் தீர்மானித்து விட்டதாகச் சொன்னாள்.

சீமாட்டி காண்டாரினாவுக்குத் தைரியம் போய்விட்டது. ஆனால் தன் பெண்ணை எதிர்த்து எதுவும் சொல்லமுடியாது; சொல்ல வேண்டும் என்றும் தோன்றவில்லை. ஏனென்றால் மல்காரி ஒரு ராணி மாதிரி பேசினாள்– கடவுளால் இயக்கப் பெற்றவள் போலப் பேசினாள்.

மல்காரி உடனேயே தன் சேவையைத் தொடங்கி விட்டாள். வியாதி வந்தவர்களை அவர்களுடைய உறவினர்களே கை விட்டு விட்டுப் போய்விட்டார்கள். ஏனென்றால் தங்களுக்கும் பிளேக் வந்து விடுமோ என்று பயம் அவர்களுக்கு. வியாதியஸ் தர்கள் தெரு ஓரங்களிலே கிடந்து உயிர்விட்டுக் கொண்டிருந் தார்கள்.

இனிமையான தன் குரலால் பேசி, அழகான தன் முகத்தில் பரிவு தோன்ற, தன் மென்மையான உடலால் மல்காரி வியாதியஸ்தர்களுக்குச் சிசுரூஷை

செய்யத் தொடங்கினாள். எந்தக் காரியத்தையும் அலட்சியம் செய்யாமல் செய்ய முனைந் தாள் அவள். ஏழைகளும், பணக்காரர்களும் அவளை ஒரு முகமாகப் போற்றினார்கள்– பாராட்டினார்கள் புகழ்ந்தார்கள்; ஆசீர்வாதித்தார்கள். அவளுக்குத் தோட்டத்துத் தேவி என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

இப்படி அவள் கையால் சிசுரூஷை செய்து காப்பாற்றப் பட்டவர்களிலே ஒரு வாலிபக் கலைஞனும் இருந்தான். அவன் ஒரு அன்னிய நாட்டு வாலிபன்– இசையிலே அவனுக் குள்ள ஆசையினாலே வடக்கேயிருந்த தன் வீடு வாசலைத் துறந்துவிட்டு இத்தாலிக்கு வந்திருந்தான்– கலையைப் போற்றி வளர்க்கிற உத்தேசத்துடன் வந்திருந்தான். அவன் ஏழை, அழகன். கம்பீரமான வாலிபன். உடல் தேறினவுடனேயே அவன் முழு மனத்துடன் மல்காரியிடம் காதல் கொண்டு விட்டான். ஆனால் அவன் அதைச் சொல்லுமுன் அவனை வந்து சந்திப்பதை நிறுத்திவிட்டாள் அவள். இது காதலுக்குக் காலமல்ல. அவனுக்கு உடம்பு சரியாகிவிட்டது என்று வேறு ஒரு நோயாளியைத் தேடிக்கொண்டு போய்விட்டாள். அவளும் அவனை நேசித்திருக்கலாம். ஆனால் அதைப்பற்றி யோசிக்கத் தயங்கவில்லை அவள்.

பிளேக் நோய் ஓய்ந்து எல்லாம் ஆனபிறகும் அவனைப் பற்றி அவள் அடிக்கடி சிந்தித்தாள். அதிகமாகவே சிந்தித்தாள். ஆனால் அவனை அவள் மறுபடியும் சந்திக்கவேயில்லை.

தேசத்துச் சட்ட சபை மல்காரியைக் கௌரவித்தது. அதே சமயம் வெனிஸ் மன்னன் அவளைத் தானே கல்யாணம் செய்து கொள்வதாகவும் சொன்னான்.

தன் பயத்தையும் மறந்துவிட்டு சீமாட்டி காண்டாரினா வெனிஸ் மன்னன் கோரியதை மறுப்பது தவறு என்று எண்ணினாள். மல்காரிக்கே இஷ்டமில்லை என்பது தெளி வாகத் தெரிந்தும் வற்புறுத்த முயன்றாள். ஆனால் மல்காரி பிடிவாதமாகவே மறுத்துவிட்டாள். விளையாட்டாக அரசர் ஒவ்வொரு ஏழை பெண்ணுக்கும் சீதனம் தந்து ஊர்ப் பிச்சைக் காரர்கள் ஆயுள் பூராவும் கவலைப்படாமல் சாப்பிடுவதற்கும் ஏற்பாடு செய்வதாக இருந்தால், தன் மனத்தை மாற்றிக் கொண்டு, வெனிஸ் மன்னனை

மணக்கச் சம்மதித்தாலும் சம்மதிக்கலாம் என்று சொன்னாள். அதுமட்டும் போதாது. காம்பனீலே என்கிற பிரதேசத்தை அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதை மார்க்கோச் சதுரத்திலிருந்து அகற்றி விடவும் மன்னன் சம்மதிக்கவேண்டும் என்றாள் அவள், இதெல்லாம் நடக்காத காரியங்கள் என்கிற தைரியத்தில். இப்படியும் நடத்தினால் அவனை மணக்கச் சம்மதிப்பேன் என்றாள்.

வெனிஸ் மன்னனோ அவள் சொன்ன நிபந்தனைகளை அப்படியே ஒப்புக்கொண்டு விட்டான். முதல் இரண்டு நிபந்தனைகளயும் உடனே நிறைவேற்றத் தயாராக இருந்தான். திருமணம் முடிந்து மூன்று வருஷங்களுக்குள் மூன்றாவது நிபந்தனைகளையும் நிறைவேற்றி விடுதாகக் கூறினான் அவன்.

மல்காரி திடுக்கிட்டாள். சோகத்தில் ஆழ்ந்தாள். அவள் தன் வார்த்தையைக் காப்பாற்றாவிட்டால், ஏழை மக்கள் பலர் இப்போது வருந்த நேரிடும். அவர்களுக்குக் கிடைத்த உணவை அவர்களிடம்மிருந்து தட்டிப் பறிக்கிற மாதிரியாகி விடும். வயிற்றில் கிடைத்த உணவை பறிப்பதுபோல ஆகிவிடும். ஆயிரக்கணக்கான மக்கள் கஷ்டப்படுவார்கள் – அவளை திட்டுவார்கள். ஆனால் அந்த மன்னனை தன் மணாளனாக ஏற்றுக்கொள்வதும் அப்படி மனத்துக்கந்த காரியமாக இல்லை. ஆனாலும் தன் சொந்தக் கருத்தைப் பிறருக்காகத் தியாகம் செய்வதுதான் சிறந்தது என்றும், தியாகம் செய்யவே மனிதர்கள் பிறக்கிறார்கள் என்றும் தீர்மானமாக இருந்தாள் அவள். தியாகம் செய்வதே சரியென்று தீர்மானித்தாள். தியாகம் செய்தவள்– சம்மதித்து விட்டாள்.

அந்தக் கெட்ட நாளை எவ்வளவு தள்ளிப் போட முடியமோ அவ்வளவு தள்ளிப்போடலாமே என்று திருமணச் சடங்கு ஸைராத் மன்னன் நடைபெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். மன்னன் இதற்கு சம்மதித்தான். ஆகவே மணப்பெண்ணும் மணப்பிள்ளையும் தேசத்தின் கப்பல்கள் இரண்டில், பெற்றோர்களும் உற்றவர்களும் தொடர்ந்து வரக் கிளம்பினார்கள். அடிமைகள், வேலைக் காரர்கள் என்று ஒரு பட்டாளமே உடன் வந்தது.

பௌர்ணமி தினம். ஆகஸ்டு மாதம். பிராயணத்தின் இரண்டாவது இரவில் ஒரு மணிக்கு மல்காரி தனியே கப்பல் தளத்தில் பூரண சந்திரனை

அனுபவிப்பதற்குக் கிளம்பினாள். தனியாக வந்தாள். காற்று மனோகரமாக இருந்தது. மதி அழகாக இருந்தது. கோடை இரவு அழகாக மனத்துக்கு உல்லாசம் தருவதாக இருந்தது. கப்பல் முகப்பின் ஓரத்தில், கடலைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரம் கழித்துக் கப்பல் மாலுமிகளில் ஒருவன் அவளை அணுகிப் பேச விரும்பினான் என்றும், பயத்தால் தயங்கிப் பின்னிட்டு நின்றான் என்றும் கவனித்தாள்.

மிருதுவாகவே தன்னிடம் அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள். அவன் அணுகி வந்தான். பிறகுதான் தெரிந்தது – அவன்தான் அந்த வாலிப இசைக் கலைஞன். நோய்வாய்ப்பட்டு அவளால் காப்பாற்றப்பட்டு அவளிடம் காதல் கொண்ட வாலிபன் என்று தெரிந்தது. இதை அறிந்த மல்காரி திடுக்கிட்டாள், குழப்பமடைந்தாள், அமைதியிழந் தாள். தன் கப்பலிலே அவன் அப்படி மாறுவேடத்தில் வந்திருப்பது எதற்காக என்று மட்டும் அவள் கேட்கவில்லை. அந்த நாட்களில் அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமல் திடுதிடுப் பென்று மறைந்துவிட்டது பற்றித் தான் துயரமுற்ற தாக மட்டும் அவன் சொன்னான். அவள் கருணையுடன் தனக்குச் சிசுரூஷை செய்ததற்கெல்லாம் நன்றி தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றித் தனக்குப் பிரமாதமான சந்தோஷம் என்றான்.

மல்காரியின் கன்னங்களிலே அவள் வாழ்நாளிலே முதல் தடவையாக ஒரு லேசான சிவப்புப் படர்ந்தது. ஆனால் அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.இந்த விஷயம் பற்றிய பேச்சு, தானாக ஓய்ந்துவிடும் என்று எண்ணினாள்.

அவள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிற மாதிரியில், தன் தேசம், தன் வாழ்நாட்களில் தன் அனுபவங்கள், தன் லட்சியங்கள் எல்லாவற்றையும் பற்றி அவளிடம் எடுத்து சொன்னான். வடக்கே வெகு தொலைவிலுள்ள ஒரு தேசம் அவனுடையது. கடல்சூழ்ந்ததேசம். கோடையிலே புயல் களும், மாரியிலே பனிக் குளிரும் வீசிக் கட்டிப் போடும் அத்தேசத்து மக்களை. கற்பாறைகளும், ஏரிகளும், பர்ச் மரங்களும் நிறைந்த, அதிகவளமில்லாததுமான தேசம் அவனுடையது. பஞ்சம் வந்தால் மரத்தின் பட்டைகளால் ரொட்டி சுட்டுத் தின்பார்கள். மக்கள் நல்லவர்கள் – ஏழைகள் மீனவர்கள். பைன் மரங்களைப் படகாகக் குடைந்து கடலில்

செலுத்திக்கொண்டு மீன் பிடிக்க போவார்கள். வேடுவர்கள் காட்டு வாத்துக்களைத் துரத்திக் கொண்டு கடற்கரை ஓரமாக ஓடுவார்கள். வேகமாக போகும் ஐஸ் வண்டிகளிலே ஏறிக் குள்ள நரிகளையும் ஓநாய்களையும் கரடிகளையும் வேட்டை யாடுவார்கள். "பொன்னோ பணமோ எங்கள் தேசத்திலே அதிகம் கிடையாது. ஏழைகள்தான் நாங்கள்" என்றான் வாலிபன். "ஆனால் கவிதை என்றும் ஐசுவரியமும், இசை என்னும் ஐசுவரியமும் நிரம்பிய நாடு எங்களுடையது

"அப்படியா? ஏன் அப்படி சொல்லுகிறாய் நீ?" என்று கூவினாள் மல்காரி.

உடனே அந்த வாலிபன் தனது தேசத்து மஹா புராணங் களையும் அவற்றின் கதைகளையும்பற்றிச் சொன்னான். எழுத்தறிவுள்ள குடியானவனும், கூலியும் விரும்பிப் பாடி அனுபவிக்கும் பாட்டுக்கள், கதைகள் அவை என்றான். மாரிக் காலத்திலே கணப்பைச் சுற்றி உட்கார்ந்து பாடுவார்கள் அவர்கள். நேசமும் வெறுப்பும் மாறி மாறி வரும் கதைகள் போரும் அமைதியும் மாறி மாறி வரும் கதைகள். அழகான பல பகுதிகள் நிரம்பிய காவியம் அது. கடைசியாக அவன் ஒரு கவி அரசனைப் பற்றியும் சொன்னான்–முத்தாய்ப்பு வைத்த கவிதை அது. கிழக் கவி அரசன் பாடிக் கண்ணீ ர் உகுத்தான் கடற் கரையிலே; அந்தக் கண்ணீர் துளிகள் கடலில் விழுந்து முத்துக்களாயின என்றான் வாலிபன்.

மல்காரி சந்திரனின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பூரண சந்திரனின் கிரணங்கள் அந்த வாலிபனின் முகத்திவே விழுந்தன. கண்களைப் பரக்கத் திறந்துகொண்டு உற்சாகத்துடன் முழு ஈடுபாட்டுடன் அவன் சொன்ன கதைகளைக் கேட்டாள் அவள். தன் கைகளால் தன் மார்பை பிடித்து அமுக்கிக் கொண்டாள். அவள் இதயத்திலே அன்பும் துயரமும் நிறைந்திருந்தன.

"ஏனோ நான் இதற்குமுன் உன்னைச் சந்திக்கவில்லை!" என்றாள் ரகசியமாக, குசுகுசுவென்று, கதை முடிந்ததும்.

பேசியவுடனேயே தான் செய்துவிட்டது தெரிந்துபோய் விட்டது அவளுக்கு. அப்படிப் பேசியது தவறு என்று தெரிந்து விட்டது. திரும்பி மெளனமாகக் கடலைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். திடீரென்று கடலில்

அதிக தூரத்திலில்லாமல் வெள்ளிக் கடற் பெண்கள் தன்னை நெருங்கியணுகிவருவதை உணர்ந்தாள். கடற் கன்னிகள் அவர்கள் வெண்மையாகவும் கருப்பாகவும் உள்ள தலைகளை உடையவர்களாக இருந்தனர்.

கப்பலை திரும்பிப் பார்த்த அந்த ஒரு கடற்கன்னி அன்று தன்னுடன் பேசியவள்தான் என்று அவளால் இனங் கண்டு கொள்ள முடிந்தது. அவள் நிமிர்ந்து தன்னைப் பார்த்ததையும் கவனித்தாள். இருவர் கண்களும் சந்தித்தன. கடற்கன்னி தன்னிடம் என்னவோ சொல்ல விரும்பினாள் என்பது தெரிகிறமாதிரி இருந்தது.

அந்தக் கிழக் கவியரசனின் பாட்டை எனக்காகப் பாடு என்றாள் மல்காரி– தன் எதிரில் இருந்த வாலிபனைப் பார்த்து.

அவன் போய்த் தன்னுடைய இத்தாலிய வயலினை எடுத்து வந்தான்.

அவன் வந்ததும், "நன்றி" என்றாள் மல்காரி. “ஒரு நிமிஷம் இரு. யாராவது வந்தாலும் அவர்கள் கண்களில் பட நான் விரும்பவில்லை, யார் கண்ணிலும் படவே மாட்டேன்."

கப்பலில் தளத்தின் ஓரத்திலிருந்து பீரங்கிக்கும் படகின் மரத்துக்கும் இடையே நழுவி நின்றாள்.

தேசீயவாதி அவ்வாலிபன். கலைஞன், காதலன். கேட்க வேண்டுமா? தெய்வீகமான கீதம் இசைத்தான் அவன். அவன் உள்ளமே இசையாக உருகி ஓடியதுபோல இருந்தது. அந்தக் கீதத்திலே.

டோல்பிக்மீன்கள் கீதத்தைக் கேட்டு மயங்கிக் கப்பலைத் தொடர்ந்தன. மாயமான கீதத்தை கேட்கக் கப்பலிலிருந் தவர்கள், உயர் குலத்தோரும் இழிகுலத்தோரும் மாலுமிகளும் வீரர்களும், வந்து கூடினர். வேலைக்காரர்களும் யசமானவர் களும் கட்டுண்டு நின்றனர். வெகு நேரம் அந்த வாலிபன் அவர்கள் யாரும் வந்திருப்பதைக் கவனிக்காமலே பாடினான். அங்குக் கூட்டம் வந்து கூடிவிட்டது என்று கண்டதும் அவன் சட்டென்று பாட்டை நிறுத்திவிட்டான். மல்காரியிடம் விடை பெற்றுக்கொண்டு இசையை நிறுத்திவிட முயன்றான். ஆனால்

மல்காரியைக் காணவில்லை. ஒரே ஒரு கைக் குட்டைதான் கண்ணீரால் ஈரமாகிக் கிடந்தது கப்பல்தள ஓரத்திலே.

வெனிஸ் மன்னனை மணக்க விருப்பமில்லாத கன்னி கடலிலே விழுந்துவிட்டாள் என்றுதான் ஜனங்கள் எண்ணினார்கள்.

சீமாட்டி காண்டாரினி மனமுடைந்த இறந்து போனாள். ஏட்ரியாடிக் கடலுக்கடியிலே தன் பெண் மீண்டும் ஒரு முத்தாகிவிட்டாள் என்று கண்ட பின்னரும் அவளால் எப்படி உயிரை வைத்துக்கொண்டிருக்க முடியும்? ஆனால் நமக்குத் தெரியுமே – இந்த மாதிரித் துயரமான அசட்டுச் சிந்தனை களுக்கு நாம் இடந்தர வேண்டியதில்லையே! ஒரு கவியின் ஆன்மாவும் கண்ணீரும் சேர்ந்து சிருஷ்டித்த முத்து அது என்பதுதான் நமக்குத் தெரியுமே! அதனால் தான் கண்ணீரால் நனைந்த ஒரு சிறு கைக்குட்டையைத் தவிர மல்காரி இருந்த இடத்தில் வேறு ஒன்றும் இல்லை என்பதும் நமக்குத் தெரியும் அந்தச் சிறு கடற்கன்னி, துயரம் நிறைந்தவள், வந்து சொன்னதும் தெரியும்.

நான் கடலைச் சேர்ந்தவள். நீ வானத்தைச் சேர்ந்தவள் என்று சொன்னாளே அந்தக் கடற்கன்னி!

பிரான்ஸ்வா காப்பி

பிரான்சு தேசத்தில் எப்போதும் நல்ல கதாசிரியர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே சிறப்பாகச் சொல்லக்கூடியவர் பலர் இருந்தனர். அவர்களில் கதை அம்சமும் உணர்ச்சிகளை எழுப்பி அடக்குவதில் திறமும் பெற்றவர் என்று பிரான்ஸ்வா காப்பி என்கிற கதாசிரியரைச் சொல்லுவார்கள். அவர் எழுதிய சிறந்த சிறுகதைகளில் ‘அதிசயம்’ என்பது ஒன்று.

அதிசயம்

பிரான்ஸ்வா காப்பி

கிறிஸ்துமஸுக்கு முந்திய தினம் காலையில் முக்கியமாகச் சொல்லவேண்டிய இரண்டு சம்பவங்கள் நடந்தன. இரண்டும் ஒரே சமயத்தில் நடந்தன என்பது விஷேசம் தான். சூரியன் உதித்தான். அதே சமயம் ழீன் பாப்டிஸ்டே கோதெ ப்ராயின் முக்கியத்துவத்தையும் நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. லக்ஷப் பிரபு 'அவர். பாங்கர். கடன் பாங்கியின் முக்கிய டிரக்டர். பல பெரிய கம்பெனிகளின் அதிகாரி. நகரத்து மேயர், அரசாங்க சபை அங்கத்தினர். கௌரவ லீஜன் பதக்கம் பெற்றவர். சூரியனுக்குத் தன்னைப் பற்றியே என்ன அபிப்பிராயமோ – யாரும் கண்டு சொல்லிவிட முடியாது. ஆனால் அது ழீன் பாப்டிஸ்டே கோதெ ப்ராய் தன்னைப் பற்றிக் கொண்டிருக்கிற அபிப்பிராயத்துக்குச் சற்றும் மேம் பட்டதாக இருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம். ஆகவே தான் சூரியனை அன்று காலையில் எட்டடிக்கக் கால்மணி இருக்கும்போது சேர்ந்தாப் போல எழுந்தார்கள் என்று சொல்லுகிறோம் – சொல்லும் அதிகாரம் நாம் பெற்றிருக்கி றோம்.

இந்த இரண்டு பெரிய லோக சக்திகளும் எழுந்த விதமும் ஒரே மாதிரியானதல்ல என்பதையும் சொல்லி விடுகிறேன். பழம் பெரும் புள்ளியான சூரியன் பலவிதமான அழகான காரியங் களைச் செய்து கொண்டே எழுந்தான். மால்ஸ் ஹெர்ப் வீதியின் மரங்களிலே இரவில் விழுந்த பனி பூராவும் உறைந்து போயிருந்தது. அந்தப் பனியைப் பவழக் கொத்து களாகச் செய்து மாயவாதியான சூரியன் ஆனந்தித்தான். அழகான பவழப் பூக்களை மட்டும் அல்லாமல் அவன் அன்றாடங் காய்ச்சிகளான ஏழைகள் மேலும் பக்ஷபாத மில்லாமல் தன் கிரணங்களை அள்ளி வீசினான் அவர்கள் தங்கள் தினசரி உணவிற்காக அவ்வளவு அதிகாலையிலேயே எழுந்திருந்து தங்கள் அலுவல்களில் ஈடுபடப் போய்க் கொண்டிருந்தார்கள். பாவம்! அந்த ஏழைக் குமாஸ்தா நேரமாகிவிடப் போகிறதே என்று வேகமாகத் தன்னுடைய மெல்லிய வெளிக் கோட்டை இழுத்து விட்டுக்

கொண்டு போய்க் கொண்டிருந்தான். அவனைப் பார்த்துப் புன்சிரிப்புக் காட்டிய அச் சூரியன் குளிர் நடுங்கப் போதாத ஆடை களுடன், போய்க் கொண்டிருந்த தையற்காரியையும் பார்த்துச் சிரித்தான். கையில் அரை ரொட்டித் துண்டுடன் கிளம்பியிருந்த கூலிக்காரன், சீட்டுகளை ஓட்டை போட்டுத் தந்த கண்டக்டர், வறுத்த செஸ்ட்வுட் கொட்டைகள் விற்றுக் கொண்டிருந்த சில்லரை வியாபாரி எல்லோரையும் பார்த்துப் புன்சிரிப்புக் காட்டி ஒளிச் சிமிட்டுச் சிமிட்டினான் சூரியன். சுருக்கமாகச் சொன்னால் சூரியன் தோன்றியது பற்றி உலகில் உள்ள எல்லோருக்குமே பரமானந்தம் தான்.

ழீன் பாப்டிஸ்டெ கொதெஃப்ராய் வேறு விதமான மனப்பான்மையுடன் தன் படுக்கையை விட்டு எழுந்தார். முந்திய இரவு அவருக்கு விவசாய மந்திரியோடு விருந்து நடந்திருந்தது. விருந்து அமர்க்களம்தான். நல்ல கனமான விருந்து. நாற்பத்தி ஏழு வயதான பாங்கருடைய வயிற்றுக்குத் தான் ஒத்துக் கொள்ளவில்லை அத்தனை புஷ்டியான சாமான்கள். எரிச்சலும் வலியும் வயிற்றில் இருந்தன. ஆகவே தன்னுடைய சொந்த வேலைக்காரனைக் கூப்பிட அவர் மணி அடித்ததே ஆத்திரமும் எரிச்சலும் நிறைந்த மாதிரியாகத் தான் இருந்தது. தன் யசமானர் க்ஷவரம் செய்து கொள்வதற்குச் சுடு தண்ணீர் எடுத்து வரப்போன வேலைக்காரன் காரிலிஸ் சமையலறையில் வேலை செய்பவளிடம் சொன்னான்.

"ஆரம்பித்தாகி விட்டது! மறுபடியும் இந்தக் குரங்குக்குக் கோபமும் ஆத்திரமும் எரிச்சலும் தான். இன்னொரு நாள் அமர்க்களம் நடக்க போகிறது–பாவம் ஜெர்ரூட்!'' என்றான்.

பிறகு மெதுவாகச் சப்தம் செய்யாமல் தன் யசமானரின் அறைக்குள் நடந்து சென்று சுடு தண்ணீரை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தான். ஜன்னல் திரைகளைத் திறந்துவிட்டான். கணப்பை மூட்டினான். ஏதோ மதாலயத்தில் வந்து மதச் சடங்குகள் செய்யப் போகும் பிரதான குருவுக் காகக் காரியங்கள் செய்து வைக்கும் சிஷ்யனைப் போலக் காலைக் கடன்களுக்குத் தேவையானதையெல்லாம் அவன் சித்தப் படுத்தனான். அவசியமானதையெல்லாம் தயார் செய்தான்.

"காலை நேரம் எப்படியிருக்கிறது" என்று கேட்டார் கொதெஃப் ராய் அதட்டலாக, பஞ்சு தைத்த உள் சட்டையை இழுத்து ஏற்கனவே பெரிதாகத் தனியாகத் தெரிந்த பருத்த தொந்தியை மூடிக் கொண்டார்.

"குளிராகத் தான் இருக்கிறது ஐயா!'' என்றான் கார்லிஸ் பணிவாக, ஆறு மணிக்கு உஷ்ணமானி சைபருக்கு மேல் ஏழு டிக்ரி என்று காட்டியது. ஆனால் நீங்களே பார்த்தால் தெரியும்– வானம் நிர்மலமாக இருக்கிறது. நேர்த்தியான பொழுதாகத் தான் இருக்கும் காலைப் பொழுது என்று தோன்றுகிறது."

க்ஷவரக் கத்தியைத் தீட்டிக் கொண்டே கொதெஃப்ராய் ஜன்னல்களில் ஒன்றை அணுகி சாளரத்து வெளித் திரையை விலக்கித் தெருவைப் பார்த்தார். தெரு பளிச்சென்று சூரிய ஒளியிலே முழுகிக் கிடந்தது. முகத்தைச் சுளித்துக் கொண்டார் அவர்–அதாவது புன்சிரிப்புச் சிரித்தார் என்று சொல்ல வேண்டும்.

முதுகு நிமிர, சரியாக மிலிடரிக் கட்டை மாதிரித்தான் பிறர் எதிரில் நடந்து கொள்ள வேண்டும் என்கிற கொள்கை சரிதான். அதுவும் வேலைக்காரர்கள் எதிரில் எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிப்படக் காட்டிக்கொள்ளக் கூடாது என்பது மிகவும் சரியான விஷயம் தான். ஆனால் டிசம்பர் மாத மத்தியில் பளிச்சென்று பிரகாசிக்கும் விஷமக்காரச் சூரியனைப் பார்த்தால் யாருக்குத் தான் உற்சாகமாக இராது? அந்த உற்சாகத்தையும் உள்ள நிறைவையும் எப்படி மறைத்து வைத்துக் கொள்ள முடியும்? முன்னர் சொன்னது போல கொதெஃப்ராய் தன் முகத்தைச் சுளித்துக் கொண்டார் – அதாவது தன் வேலைக்காரன் எதிரில் தனக்குத் தானே புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டார். பணக்காரரான அந்த பாங்கர் கொதெஃப்ராயின் சிரிப்புக்கும் அந்த அச்சுக் கோக்கும் பையன்–அதோ தெரு ஓரத்தில் நொண்டிக் குதித்துச் சறுக் கலடித்துத் தன் ஆனந்தத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறானே அந்தப் பையனின் ஆனந்தத்துக்கும் அதே சூரியன் தான் காரணம். இருவருடைய மனோபாவமும் ஒரே மாதிரியானது தான் என்று யாராவது சொன்னால் பாங்கர் சண்டைக்கே வந்து விடுவார். அவருக்கு அது எப்படி ஒரே மாதிரியான ஆனந்த மாக இருக்க முடியும் என்று தெரியாது– ஆத்திர மடைந்து விடுவார். ஆனால் உண்மை

என்னவோ அதுதான். அரசியல் உலகிலும் பொருளாதார உலகிலும் பெரும் பதவி வகித்த இந்த படே ஆசாமியும் கூட ஒரு நிமிஷம் தெருவோடு போகிற வர்களைக் கவனித்து ஆனந்தமுறும் குழந்தைப் பிள்ளைத்தன மான காரியத்தைச் செய்வதில்தான் ஈடுபட்டிருந்தார்! கனமான பல பண விஷயங்களைத் தன் மனத்தினின்றும் இறக்கி வைத்து விட்டு, ஒரு நிமிஷம் தெருவோடு போகிறவர் களைக் கவனித்து ஆனந்தமுறும் குழந்தைப் பிள்ளைத்தனமான காரியத்தைச் செய்வதில்தான் ஈடுபட்டிருக்கிறார் ! கனமான பல பண விஷயங்களைத் தன் மனத்தினின்றும் இறக்கி வைத்து விட்டு, ஒரு நிமிஷம் தெருவோடு உருண்டு கொண்டிருந்த வாகனங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தார் அவர். வெறும் வேடிக்கை பார்த்தார் என்று சொன்னால் அது மிகையே யாகாது.

ஆனால் வாசகர்களே, சொல்லிவிடுகிறேன். நீங்கள் அதைரியப்பட வேண்டிய அவசியமேயில்லை. கொதெஃப் ராய் தப்பான காரியம் எதையும் செய்துவிட மாட்டார். புன்சிரிப்பு, மனநிறைவு என்கிற அவருடைய பலஹீனம் ஒரு நிமிஷத் துக்கும் அதிகமாக நீடிக்கவில்லை. வேலை வெட்டி யற்றவர்கள், முக்கியஸ்தர்கள் அல்லாதவர்கள், சோம்பேறிகள் வேண்டு மானால் காலத்தைப் போக்கலாம் – எதுவும் செய்யாமல் இருக்கலாம். பெண்கள், குழந்தைகள், கவிகள், காலிப்பயல்கள், சோதாக்கள் இவர்களுக்குச் சரி. ஆனால் இந்தக் காரியம் கொதெஃப்ராய்க்கு ஒத்து வருமா? அவருக்குச் . செய்வதற்குக் காரியம் நிறையவே இருந்தது. அன்றைத் தினம் கடமை அதிகமாகவே இருந்தது. எட்டரை மணிமுதல் பத்து மணி வரையில் ஒரு மீடிங் இருந்தது அவருக்கு. அவரைப் போலவே தோற்றமளித்த பல கனவான்களை அவர் சந்தித்துப் பேச வேண்டயதாக இருந்தது. அவர்கள் எல்லோரும் குட்டி கொதெஃப்ராய்கள். அவரைப் போலவே அவர்களும் கவலை யால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களும் சூரியனுடன் எழுந்தவர்கள்தான். நாகரிகமானவர்கள்தான். அவர்கள் எல்லோருக்குமே ஒரே ஒரு லட்சியம்தான் உண்டு. அந்த லட்சியம் என்ன? பணம் பண்ணுவதுதான்.

அந்தக் கூட்டம் முடிந்தவுடனே சீக்கிரமே சாப்பாட்டை முடித்துக்கொண்டு கொதெஃப்ராய் தன் வண்டியில் ஏறிக் கொண்டு பங்கு மார்க்கெட்டுக்கு

செல்ல வேண்டும். அங்கு வேறு கனவான்களைச் சந்தித்து அவர்களுடனும் அவர் இரண் டொரு வார்த்தை பேச வேண்டும். அவர்களும் சூரியனுடன் எழுந்தவர்கள்தான். அவர்களிடையே ஒரு துளிக்கூடக் கற்பனை என்பதே கிடையாது. அவர்கள் பேச்செல்லாம் ஒரு விஷயம் – பணத்தைப்பற்றித்தான் இருக்கும்.

அங்கிருந்து ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் வேறு ஒரு நண்பர்களின் கூட்டத்துக்குத் தலைமை தாங்க கொதெஃப்ராய் ஓட வேண்டும். இரக்கமோ கருணையோ சிறிதுமற்ற கூட்டம் அது–மறுபடியும் கொதெஃப்ராய் போன்றவர்களாலான சபைதான் அது. பச்சை வெல்வெட்டு விரித்த மேஜையைச் சுற்றி உட்கார்ந்து பேசுவார்கள் அந்த நண்பர்கள். பல காகிதங்கள், நிறைந்த மைப்புட்டிகள் எல்லாம் இருக்கும். பேச்சு மீண்டும் பணம் பண்ணுவது பற்றித்தான் நடக்கும். எந்தெந்தவிதங்களில் பணம் பண்ணலாகும் என்று விவாதம் நடக்கும்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு அவர் அரசியல் சபை அங்கத்தினராதலால் எத்தனையோ கமிட்டிக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். இந்தக் கமிட்டி கூட்டங்கள் எல்லாம் பச்சை நிற வெல்வெட்டுப் போட்ட மேஜைகள் மேல் பேனாக்களும் காகிதங்களும், நிறைந்த மைக்கூடுகளும் உள்ள அறைகளில் தான் நடக்கும். தன்னைப் போலவே தயவு தாட்சண்யம் அநுதாபம் ஈவு இரக்கம் என்பதில்லாத மனிதர்களைத்தான் அந்தக் கூட்டங்களிலே அவர் சந்திப்பார். எந்தச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதைப் பணம் பண்ணத் தயங்காதவர்கள்தான் அவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் சில மணி நேரம் பணம் பண்ணுகிற காரியத்தை மறந்து விட்டுத் தங்களுடைய பொன்னான நேரத்தைத் தங்கள் தேசத்துக்கென்று செலவிடத் தயாராக இருந்தனர். பிரான்சு தேசம் செழிக்க அவர்கள் தங்கள் நேரத்தைச் செலவிடத் தயாராக இருந்தனர்.

முகவாய்க்கட்டையைச் சுற்றி வளர்ந்திருந்த தன் தாடியைக் காப்பாற்றிக்கொண்டு ஜாக்கிரதையாக க்ஷவரம் செய்து கொண்டானதும் நேர்த்தியான துணிகளை எடுத்து அணிந்து கொண்டார். நேர்த்தியான அவருக்கு வயது ஐம்பதாகப் போகிறது என்றாலும் அவர் வாலிப புருஷராக இருக்கவே முயன்றார் என்பதைக் காட்டியது. பிறர் தன்னைக் கண்டு

பொறாமைப்படவேண்டும் என்று விரும்பினார் அவர். அவர் தாடி காரணமாக அவரைக் குடும்பஸ்தர் என்றும் பொறுப் புள்ளவர் என்றும் பிரதிநிதிகளைத் தேர்தெடுக்கும் மக்களும் பொதுவாக முட்டாள்களும் நினைத்தார்கள். பின்னர் தன் முன் அறைக்கு வந்தார். அங்கே அவரை வந்து காணக் காத்திருந்த மனிதர்களை ஒருவர்பின் ஒருவராகச் சந்தித்து பேசினார். அவர்கள் எல்லோருக்குமே ஒரே சிந்தனைதான்– தங்களிடம் இருந்த பணத்தைக் குட்டிபோட வைப்பது என்பதுதான் அந்த யோசனை. எதிர் காலத்தில் பணம் பண்ணுவதற்கான திட்டங்களைப் பற்றி இந்தக் கனவான்கள் விவாதித்தனர். எல்லாத் திட்டங்களுமே முக்கியமானவை தான். அவற்றில் முக்கியமானது ஏதோ ஒரு பாலைவனத்தில் ரெயில் பாதை போடுவதுதான். இன்னொரு முக்கியமான திட்டம் பாரிஸின் சுற்றுப் புறத்திலே ஒரு பெரிய தொழிற் சாலை நிறுவுவது தான். மூன்றாவதாகத் தென் அமெரிக்க ராஜ்யங்களில் ஒன்றில் ஒரு சுரங்கம் தோண்டுவதுதான். அந்த ரெயில்வேயில் பிரயாணிகள் வருவார்களா என்றோ , அதில் ஏதாவது சாமான்கள் ஏற்றிச் செல்லுமா என்றோ, அல்லது பெரிய தொழிற்சாலையில் இரவுக் குல்லாய்கள் தயாராகுமா அல்லது மது வடிக்கப்படுமா என்றோ . அல்லது அந்தச் சுரங்கத்தில் தங்கம் தோண்டியெடுப்பார்களா, மட்டமான செம்பு எடுப்பார்களா என்றோ அங்கு கூடியிருந்தவர்கள் யாரும் கவலைப்படவில்லை. பங்கு மார்க்கெட்டில் விளம் பரம் செய்தவுடன் வரக்கூடிய லாபத்தைப் பற்றி மட்டுமே கொதெஃப்ராயைப் பார்க்க வந்தவர்கள் பேசினார்கள். வேறு ஒன்றிலும் அவர்கள் மனம் செல்லவில்லை , ஒரே வாரத்தில் லட்சக் கணக்கில் லாபமடைய அவர்கள் வழி காண விரும்பினர். அழகாக அச்சிட்டிருந்த காகிதத்தின் விலை முடிவில் கால் காசு கூடப் பெறாது. ஆனால் அதனால் அவர்களுக்குக் கிடைக்ககூடிய லாபம் மட்டும் ஒரே வாரத்தில், லட்சக் கணக்கில், கிடைத்திருக்கும். அதற்குமேல் அவர்களுக்கு அதுபற்றி யாதொரு கவலையுமில்லை.

இந்த சம்பாஷணைகளில் புள்ளி விவரங்கள் படி அடிப்பட்டன. சரியாகப் பத்து மணி வரையில் நடந்தன இந்த சம்பாஷைணைகள். கடன் பாங்கின் டிரெக்டர் நாணயஸ்தர் வியாபார உலகில், பண உலகில் அவரைவிட நாணயஸ்தர் யாரையும் காண இயலாது. கடைசி விருந்தாளியுடன் பேசிக்கொண்டே வாசல்படி வரையில் மரியாதையாகக் கொண்டுபோய்

விட்டுவிட்டுவருவார். இந்தக் கடைசி ஆசாமி பெரும் பணக்காரன். மகா அயோக்கியன். ஆனால் பொது ஜனங்களிடையே அவனுக்கு நல்ல பெயர்தான்; வியா பாரத்திலே, காரணமில்லாமலே, நாணயஸ்தன் என்று பெயர் பெற்றவன். இன்னும் கொஞ்சம் சின்னவனாகவும் ஏழை யாகவும் இருந்திருந்தால் அவன் சர்க்காரின் விருந்தாளியாக அந்தப் பெரிய கட்டிடங்கள் ஏதாவதொன்றில் இடம் பெற்றிருப்பான். அவன் நாணயஸ்தனாக இருப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாத இடத்திலே ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அடைத்து வைத்திருப்பார்கள் நீதிபதிகள். அவன் பெரியவன்தான். ஆனால் தயை தாட்சயண்யமில்லாமலே அவனை வெளியே கொண்டுபோய் விட்டார் கொதெஃப்ராய். பதினொரு மணிக்கு அவர் பங்கு மார்க்கெட்டில் இருக்க வேண்டியது அவசியம். ஆகவே அவனை அனுப்பிவிட்டு அவர் தன் சாப்பாட்டு அறைக்குள் புகுந்தார்.

ஜோராக அதிகப் பணச் செலவில் அலங்கரிக்கப்பட்டிருந்த அறை அது. ஒரு பெரிய ஆலயத்துக்குப் போதுமான ஆசனங் கள் முதலிய மர சாமான்கள் அவ்வறையிலே இருந்தன. அதனா லென்ன? கொதெஃப்ராயின் வயிற்றுவலியும் அஜீரணமும் அதிகரித்த மாதிரி இருந்ததே தவிரக் குறைய வில்லை. சோடா பைகார்பனெட் ஒரு டோஸ் சாப்பிட்டார் எனினும் வயிற்றுவலி அடங்கவில்லை. வயிற்று வலிக் காரனுடைய உணவைத்தான் அவர் வயிறு ஏற்றுக் கொண்டது; அதற்குமேல் அவரால் சாப்பிட இயலவில்லை. பட்லருக்கு ஏராளமான சம்பளம் தந்தார் அவர். எல்லாம் அமர்க்களமாகவே தான் இருந்தது. ஆனால் வேகவிட்ட இரண்டு முட்டைகளையும், மாமிசத்துண்டு ஒன்றில் சிறு பகுதியையும் தவிர அவரால் வேறு எதுவும் சாப்பிட முடிய வில்லை. ஒரு சிறு துண்டுப் பாலேடைதான் சாப்பிட்டார். இரண்டு காசுக்கு அகப்படக் கூடியதற்கு மேல் அவரால் சாப்பிட முடியவில்லை . பின்னர் கதவு திறந்தது. ஆடம்பரமாக உடை அணிந்த, ஆனால் அழகான ஒரு சிறு பையன் உள்ளே வந்தான். குழந்தை ராவுலுக்கு வயது நான்கு. இந்தப் பெரும் பணக்காரருடைய ஒரே மகன் அவன். அவனுடைய ஜெர்மன் தாதி பின் தொடர அவன் உள்ளே வந்தான். தன் தகப்பனாரை அணுகினான்.

இதே நேரத்தில் தினப்படி நடக்கிற காரியம் இது. சரியாகப் பதினொன்று அடிக்கக் கால்மணி நேரம் இருக்கும்போது நடக்கும். வாசலிலே வண்டி காத்திருக்கும். தகப்பனாராக இருக்க கொதெஃப்ராய்க்கு இருந்த நேரம் அந்தக் கால்மணி தான். அவர் தன் மகனை நேசிக்கவில்லை என்பதில்லை. அந்தத் தன் மகனிடம் உயிரையே தான் வைத்திருந்தார் அவர். அவருக்கே உரியமுறையில் அவனிடம் ஏராளமான பிரியம் வைத்திருந்தார் அவர். ஆனால் பணம் சம்பாதிக்கிற தொழில் என்றால் வேறு எதற்கு நேரம் இருக்கும்? அத் தொழில் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே!

கொதெஃப்ராய்க்கு நாற்பத்திரண்டு வயது நடந்து கொண்டிருக்கும்போது, உலகத்தில் அடைய வேண்டிய பாக்கியங்களை யெல்லாம் அடைந்து நாகரிக புருஷன் என்றும், பழம் பெருச்சாளி என்றும் பெயர் பெற்ற பிறகு, அவர் தன்னுடைய கிளப் தோழர்கள் ஒருவருடைய பெண்ணிடம் காதல் கொண்டு விட்டார். அதாவது காதல் கொண்டதாக எண்ணிக் கொண்டார். அந்தத் தோழர் ஒரு பிரபு, நியூஃபாண்டேன் பிரபு என்று பெயர் அவருக்கு. பண்டைக் காலத்துப் பெரிய குடும்பத்திலுதித்தவர்–ஆனால் இன்று அவர் சீட்டாட்டம் கூட நாணயமானது என்று நிச்சய மாகச் சொல்ல முடியாது. கிளப்பிலிருந்து அவரை வெளி யேற்றி விடாமல் பார்த்துக் கொண்டது கொதெஃப்ராய் தான் இல்லாவிட்டால் அவமானப்படுத்தி அவரை அனுப்பி யிருப்பார்கள். தன் கடன்களைத் தீர்த்து விடக் கூடிய ஒரு பணக்காரருக்கு மாமனார் ஆவதற்கு அந்த அயோக்கியக் கிழவருக்கு ஆக்ஷேபம் என்ன? எந்த விதமான மனக் கஷ்டமும் இல்லாமல் தன் பெண்ணை கொதெஃப்ராய்க்குத் தந்து விட்டார் அவர். பாவம்! பதினேழு வயதுக் குழந்தை அவள். அவளைக் கான்வெண்டிலிருந்து அழைத்து வந்து அந்த நாகரிகப் பணக்காரனுக்குக் கலியாணம் செய்து வைத்து விட்டார்கள். அந்தப் பெண் இனிமையானவள், அழகி. ஆனால் எதிர் ஜாமீனாக அவளுடன் தர அவள் தகப்பனிடம் சொத்து ஒன்றும் இல்லை. பிரபுக்கள் குடும்பத்துத் தோரணைகள், பழக்க வழக்கங்கள், மனப்பான்மை இவற்று டன் கன்னிப் பருவத்துக் கனவுகள்தான் அவளுக்கிருந்த ஆஸ்தி. கொதெஃப்ராய் போன்ற புருஷன் அவளுக்கு இத்தனை சுலபமாகக் கிடைத்தது அவள் அதிருஷ்டம்தான் என்று எண்ணினான் அவள் தகப்பன்.

கொதெஃப்ராய் அண்டெலிஸ் பிராந்தியத்தில் [அதாவது தாழ்ந்த குடும்பத்தில்] பிறந்தவன். அவன் தகப்பன் ஒரு கஞ்சன்! வக்கீல் தொழில் பண்ணிப் பிழைத்தவன். அவன் சாதாரணத் தெரு வாசிகளின் பழக்க வழக்கங்களும் அநாகரிகங் களும் உள்ளவன். பணத்துடன் பிரபுத்வமும், மேன் மக்களின் குணங்களும் வந்து விடுவமா என்ன? அவருடைய நாஸூக் கின்மையும், முரட்டுத்தனமும் அவர் மனைவிக்கு மிகவும் அருவெருப்பாக இருந்தன. அவளுடைய மிகவும் மென்மை யான உள்ளத்தைத் தன் காலடியில் போட்டு மிதிப்பவன் போல மிதித்தான் அவன். எப்படி முடியுமோ இதெல்லாம் என்று சந்தேகம் தோன்றுகிற நேரத்திலே அதிருஷ்ட வசமா மாடம் கொதெஃப்ராய் தன்னுடைய முதல் குழந்தையைப் பெற்று விட்டு, அந்தப் பிரசவத்தின் அதிர்ச்சி தாங்காமல் இறந்து விட்டாள். இறந்துபோன தன் மனைவியைப் பற்றிப் பேசுகிறபோது கவிதை தான் பொழிவார் பாங்கர்—ஆனால் அவள் இன்னும் ஒரு ஆறு மாதம் மட்டும் உயிருடனிருந் திருந்தால் விவாகரத்துத்தான் கோரி யிருக்க வேண்டும் – அது தவிர்க்க முடியாதது. ஆனால் தன் பிள்ளையிடம் ஏராளமான அன்பு வைத்திருந்தார் கொதெஃப்ராய். இதற்குப் பல காரணங்கள் உண்டு— அவன் ஒரே பிள்ளை. கொதெஃப்ராய் நியூஃபாண்டேன் என்கிற இரண்டு குடும்பங்களின் கொழுந்து அவன். எல்லாவற்றுக்கும் மேலாக அவன் பல லக்ஷங்களுக்கு வாரிசாகப் பிறந்தவன். கொதெஃப்ராயின் அன்பிலே இதுதான் பெரிய காரணமாகச் சொல்ல வேண்டும்.

ஆகவே பையனுக்குத் தங்கக் கிலுகிலுப்பைகளும், வேறு விலையுயர்ந்த பல விளையாட்டுச் சாமான்களும் கிடைத்தன. ராஜகுமாரன் போல வளர்க்கப்பட்டான் அவன். ஆனால் அவன் தகப்பனாருக்கு ஏராளமான தொல்லைகள் – தன்னுடைய விலை யுயர்ந்த பொழுதில் ஒரு கால் மணிக்கு மேல் தன் மகனுக்கு அவரால் என்றும் அளிக்க முடிந்ததில்லை. என்றுமே பாலேடை சாப்பிடும் போதுதான் தன் பிள்ளையைச் சந்திப்பார். மற்ற பொழுதெல்லாம் அந்தக் குழந்தையை வேலைக்காரர்கள் தான் கவனித்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது.

"குட்மார்னிங், ராவுல்"

"குட்மார்னிங், அப்பா."

கம்பெனி டைரக்டர் தன் சாப்பாட்டுக் குட்டையை அப்புறப்படுத்தி விட்டு தன் இடது முழுங்கால் மேல் ராவுலை ஏற்றி வைத்துக் கொண்டு குழந்தையின் தலையைத் தன் பெரிய கைகளால் பிடித்து தடவி விட்டார்; தலை மயிரைக் கோதினார்; பையனை முத்தமிட்டு அவனுடன் விளையாடும் போது தன் பணத்தைப் பற்றியே பூராவும் மறந்து விட்டார். அன்று நடக்கவிருந்த பெரிய பாங்கிக் கூட்டத்தையும் மறந்து விட்டார். அந்தக் கூட்டத்தினால், அதன் முடிவாக, அவர் இன்னும் சில லக்ஷங்கள் சம்பாதித்து இன்னும் செல்வாக்குப் பெற முடியும் என்பதையும் அவர் அடியோடு மறந்து விட்டார்.

சிறுவன் ராவுல் திடீரென்று கேட்டான்; "அப்பா! இன்று தாத்தா கிறிஸ்துமஸ் எனக்கு என்று என் பூட்ஸில் ஏதாவது வைப்பாரா மாட்டாரா?"

‘‘நீ நல்லவனாக இருக்க வேண்டும். இருந்தால் ஏதாவது வைப்பார் என்று தகப்பன் பதிலளித்தார். அவர் நாஸ்திகர், ஆலயங்களுக்குப் போகாதவர், எந்த சபையில் யார் நாஸ்திகம் பேசினாலும் முதலில் அவரை ஆதரிப்பவர் கொதெஃப்ராய் தான் என்பது பிரசித்தம். ஆலய ஆதிகாரிகளை எதிர்த்துச் செய்யப்படும் எச் சீர்திருத்தத்துக்கும் அவருடைய முதல் வோட்டுக் கிடைத்துவிடும். அப்படிப்பட்டவர் தன் பையனுக்கு இப்படிப் பதில் சொன்னார் என்பது கவனிக்க வேண்டிய விஷயம். மாலையில் வரும்போது பையனுக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வர வேண்டும் என்று மனத்தில் இறுத்திக் கொண்டார். மாலை

பையனின் தாதி பக்கம் திரும்பிக் கேட்டார்.

"என்ன மாம்ஸெல் பெர்த்தா? பையனுடைய காரியங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா? உனக்குத் திருப்தி தருகின்றனவா?

இப்படிக் கேட்டவுடன் பெர்த்தாவின் முகம் ப்யோனி புஷ்பம் போலச் சிவந்தது. ஏதோ அவர் தகாத கேள்வியைக் கேட்டு விட்டார் என்பது போலத் தடுமாறினாள். ஒரு முட்டாள்தனமான சிரிப்புடன் அவருடைய பிள்ளையின் நடத்தையைப் பற்றி அவரிடம் சொன்னாள் சரியாக இருக்கிறது என்று, அது கொதெஃப்ராய்க்குத் திருப்தி அளித்தது போலத்தான் இருந்தது.

"இன்று நேர்த்தியாக இருக்கிறது" என்றார் லக்ஷப் பிரபு. "ஆனால் குளிருகிறது. ராவுலை மொன்கோ தோட்டத்துக்கு அழைத்துப் போவதானால் கனமான சட்டையாய் போட்டு நன்கு போர்த்தி அழைத்துப் போ. ஜாக்கிரதை" என்றார்.

இந்த முக்கியமான விஷயம் பற்றி கொதெஃப்ராயின் சந்தேகங்கள் மாம்ஸெல் பெர்த்தாவின் இன்னொரு அசட்டுச் சிரிப்பைப் பார்த்ததும் தீர்ந்து விட்ட மாதிரி இருந்தது. தன் பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டு விட்டு, அறையை விட்டு அவசரமாக வெளியேறி, கூடத்தில் மேல் கம்பிளிக் கோட்டை வேலைக்காரன் அணிந்துவிட, வந்து அதே வேலைக்காரன் திறந்து விட்ட வண்டிக் கதவைத் தாண்டி ஏறி உட்கார்ந்து கொண்டார். கார்லிஸ் என்கிற வேலைக்காரன் வண்டிக் கதவைச் சாத்தினான். பின்னர் அவன் எதிர் வீட்டுச் சீமாட்டியின் வண்டிக்காரனோடு குடிக்கும் விடுதிக்குப் போய், அங்கு குடித்து விட்டு காசுக்கு ஒரு ஆட்டம் பில்லியர்ட்ஸ் ஆடுவான்.

கொதெஃப்ராயின் வண்டிக் குதிரை ஜோரான குதிரை. அதனுடைய உண்மை விலையைவிட ஒரு ஆயிரம் ப்ராங்குகள் அதிகமாகத் தந்து அவர் வாங்கி இருந்தார். அவருடைய வண்டிக்காரனுக்குப் பிரமாதமான ஒரு விருந்தைச் செய்து வைத்து, குதிரைத் தரகன் தந்த அதிகப் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டான் என்று சொல்வது மிகையேயாகாது. அந்தப் பழுப்புக் குதிரை ஜோரான குதிரைதான். நன்றாக ஓடும். அன்று இருந்த ஏராளமான வேலைகளையும், போக வேண்டிய இடங்களுக்கெல்லாம் உரிய காலத்தில் போய் தன் காரியங்களை யெல்லாம் வெற்றிகரமாகப் பார்த்து முடித்தார் கொதெஃப்ராய். பங்கு மார்க்கட்டிலும், பல டிரெக்டர் கூட்டங்களிலும் சரியான சமயத்துக்கு வந்து செய்ய வேண்டியதைச் செய்து விட்டார் அவர். பிறகு மாலையில் மந்திரி சபையை ஆதரித்து வோட்டுச் செய்து நாட்டு மந்திரி சபை கவிழ இருந்தது என்கிற வதந்தியைத் தோற்கடித்தார். அவர் மந்திரி சபையை ஆதரித்து வோட்டளித்ததற்குக் காரணமுண்டு- அவர் கேட்ட சலுகை களையெல்லாம் தந்து அவரை இன்னும் பணக்கார ராக்கி விடுவதாக மந்திரி சபை ரகசியத்தில் அவரிடம் ஒப்புக் கொண்டு விட்டது. பாங்கராயிற்றே-லாபமில்லாமல் ஒரு காரியம் செய்வாரா அவர்?

தனக்கும் தன் தேசத்துக்கும் தன் கடமையை இப்படி முறைப்படி நிறைவேற்றிவிட்டுத் திரும்பும்போது கொதெஃப் ராய்க்குத் தான் தன் மகனிடம் காலையில் சொன்னது நினைவுக்கு வந்தது. வண்டிக் காரனிடம் ஒரு விளையாட்டுச் சாமான் கடை விலாசத்தைச் சொன்னார். அங்கு அவர் பல சாமான்களை வாங்கி வண்டியில் எடுத்து வைக்கச் சொன்னார்– ஒரு விசித்திரமான ஆடும் குதிரையொன்று வாங்கினார். அதில் இரு காதிலும் இரு மட்டைகள் சொருகி இருந்தன. ஈயத்தலான போர்வீரர்கள் ஒன்று கூட ஒன்று வாங்கினார்– பெட்டியில் வைத்திருந்தது அது. சப்பை கலரும் கறுப்புத் தலைப்பாகையுமாக பீடர் காலத்து ருஷ்யப் போர் வீரர்கள் மாதிரி இருந்தது அக்கோஷ்டி. இதேபோல விலை யுயர்ந்த பளபளவென்று விளையாட்டுச் சாமான்கள் இன்னும் பலவும் வாங்கினார். சுகமாக வண்டி மெத்தையிலே சாய்ந்துகொண்டு வீடு திரும்பும் போது கொதெஃப்ராய் கனவுகளில் ஈடுபட்டார். தகப்பன் அல்லவா? இப் பெருமையுடன் தன் மகனுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கனவுகள் கண்டார். திட்டங்கள் போட்டார்.

பெரியவனான பின் அந்தப் பையனுக்கு ஒரு ராஜ குமாரனின் கல்வி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று திட்டமிட்டார். அவன்தான் ராஜகுமாரன். இந்த உலகத்தில் இன்று ராஜாகுமாரன் யார்? பணம் உள்ளவன்தான்–மூன்று கோடி பிராங்குகள் காத்திருக்கும் பையனுக்கு– அவன்தானே ராஜாகுமாரன்?

நாட்டுப்புறத்து வக்கீலின் மகனாகப் பிறந்து பணம் சம்பாதித்து மரிக்னான் சண்டையிலே உயிரிழந்த பழம் பெரும் பிரபுக்கள் வம்சத்திலே கல்யாணம் செய்துகொள்ள முடிந்தது அவரால் – அது எதனால்? பணத்தினால்தானே? அவர் தகப்பனார் பாரிஸ் நகரத்துக்கு வந்தால் மிகவும் மலிவான ஹோட்டல் எது என்று விசாரித்து அங்கு போய்தான் சாப்பிடுவார். ஒரு தரம் வெள்ளைச் சட்டையோ டையோ கட்டிக்கொண்டால், ஏதோ கல்யாணத்துக்குப் போகிற மாதிரி இருக்கிறதே என்பாராம். அப்படிப்பட்ட வருடைய பிள்ளை யாகப் பிறந்த தன்னாலேயே பெரும் ஆஸ்தியைச் சேர்த்துவிட முடிந்ததே! தன் மகனுக்கு எதுதான் சாத்தியமாகாது? சிறுவன் ராவுல் மிகவும் முக்கியஸ் தனாகலாமே!

தன் பையனை எண்ணி கொதெஃப்ராய், ஆகாயக் கோட்டைகள் பல கட்டினார். கிறிஸ்துமஸ் என்பதே ஒரு ஏழைச் சிறுவன் ஒரு தொழுவத்திலே பிறந்தவன். அங்கே கூட அவன் பெற்றோருக்கு இடம் கிடைத்தது. தர்மத்திற்காகத் தான்– காசு பணம் இருந்து கொடுத்தல்ல என்பதை கொதெஃப்ராய் மறந்து விட்டார்.

பாதிக் கனவிலே வீடு வந்துவிட்டது. வண்டிக்காரன் கதவு திற என்று கத்தினான். மாளிகை வாசலில் கொண்டு போய் வண்டியை நிறுத்தினான். இரவுச் சாப்பாட்டுக்கான ஆடை மாற்றிக் கொள்ள மட்டுமே போதுமான பொழுது இருந்தது என்று எண்ணினார் கொதெஃப்ராய். ஆனால் முன் கூடத்துக்குள் அவர் போனபோது வேலைக்காரர்கள் எல்லோரும் அவர் முன் பயத்தால் நடுங்கிக் கொண்டு குழுமியிருப்பதைக் கண்டார். ஒரே குழப்பமாகவும் அமர்க்களமாகவும் இருந்தது அங்கே. ஒரு மூலையில் ஒரு நாற்காலியில் குந்திப் மூடிக் கொண்டு அழுதுகொண்டிருந்தாள். பாங்கனை கண்டவுடன் அவள் இன்னும் அதிகமாக விசித்து விசித்து உர்மக்க அழத்தொடங்கினாள். ஏதோ துரதிருஷ்டம் வந்துவிட்டது என்று தீர்மானித்து பயந்து போனார் கொதெஃப்ராய்.

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? என்ன தவறு நடந்து விட்டது? என்னத்தைக் காணோம்? என்ன நடந்தது?" என்று பதறினார் அவர்.

கார்லிஸ் என்கிற வேலைக்காரன், வேலைக்காரர்களுக்கு உள்ள எல்லா குணாதிசயங்களும் படைத்தவன். திருட்டுத் தனமும் துஷ்டத்தனமும் போக்கிரித்தனமும் மிக்கவன். அவன் பரிதபாமான பார்வையுடன் வாய் குழற "ஐயா, ராவுல்.....''

"என் குழந்தைக்கு என்ன?"

"காணாமற் போய்விட்டான் ஐயா. அந்த அசட்டு ஜெர்மன் ஸ்திரீ செய்த காரியம் இது. இன்று மாலை நாலு மணி முதல் பையனைக் காணவில்லை."

ஏதோ வந்து மோதி இடித்துத் தள்ளியது போல அத்தகப்பன் இரண்டடி தடுமாறிப் பின்னிட்டான். அவர் காலடியில் விழுந்து அந்த ஜெர்மன் தாதி கதறினாள். "மன்னிக்க வேண்டும்;." மன்னிக்க வேண்டும் என்று

கதறினாள். அதற்கு மேல் எதுவும் சொல்ல அவளுக்குத் தெரியவில்லை. வேலைக் காரர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் குழப்பமாக பேசினார்கள்.

"மொன்கோ தோட்டத்துக்கு பெர்த்தா போகவே இல்லை. கோட்டை கொத்தளங்களைத் தாண்டு முன்னரே பையனை அவள் நழுவ விட்டுவிட்டாள். எங்கும் தேடிப் பார்த்து விட்டோம் ஐயா. தங்கள் காரியாலயத்துக்கும் போய்ப் பார்த்தோம். சட்ட சபைக்கும் போய்ப் பார்த்தோம். அங்கிருந்த நீங்கள் கிளம்பிவிட்டதாகத் தெரிய வந்தது. கோட்டை கொத்தளங்களுக்கு அப்பால் இந்த ஜெர்மன் பெண்ணுக்கு ஒரு காதலன் இருக்கிறான்–அது தெரியாது இன்றுவரையில் நமக்கெல்லாம். வெட்கப்பட வேண்டிய விஷயம் இது. நாடோடிகளும், கூத்தாடிகளும் கூடிக் கும்மாளிடும் இடம் இது. குழந்தையை யாராவது திருடிப் போய்விட்டார்களோ என்னவோ? ஆமாம் ஐயா! உடனேயே போலீஸுக்குத் தெரிவித்து விட்டோம். எங்க ளால் எப்படி இதை முன்கூட்டியே அறிந்து கொண்டிருக்க முடியும்? அவள் யாராவது ஒரு பிரஷ்ய ஒற்றனிடம் கூடிக் குலாவப் போயிருப்பாள் என்று நாங்கள் நினைக்கக் கூடுமோ? நம் நாட்டுக்கு எதிரிகள்தானே ஜெர்மன்கள்...?"

அவர் மகன் தொலைந்துவிட்டானா? தலைக்குள் ரத்தம் வெண்மையாக பாய்ந்து ஏறியது போல ஒரு உணர்ச்சி ஏற்பட்டது கொதெஃப்ராய்க்கு. அவர் அந்த ஜெர்மன் தாதியைப் பாய்ந்து பிடித்துக் கொண்டு உலுக்கினார். கோபமாக ஆத்திரமாக உலுக்கினார்!

"துரதிருஷ்டம் பிடித்த பெண்ணே! அவனை எங்கே விட்டாய் நீ? உன்னை உலுக்கியே நொறுக்கி விடுவேன் உண்மையைச் சொல். காதில் விழுந்ததா? உண்மையைச் சொல்.

ஆனால் அந்தத் துரதிருஷ்டம் பிடித்த பெண்ணால் அழத்தான் முடிந்தது. மன்னித்து விடு என்பதற்கு மேல் ஒன்றும் அவளால் சொல்ல முடியவில்லை.

பாங்கர் அமைதியாக இருக்க முயன்றார். ஆனால் அப்படியிருக்க முடியவில்லை. தன் பையனை யார் திருடிப் போகத் துணிவார்கள்? யாரும் துணிய மாட்டார்கள். யாராவது அவனை கண்டு பிடித்துக் கொணர்ந்து

சேர்த்து விடுவார்கள். அதுபற்றிச் சந்தேகத்துக்கிடம் ஏது? பணத்தை தண்ணீர்போல அவரால் வாரி இறைக்க முடியுமே! பாரிஸ் நகரத்துப் போலீஸ்காரர்கள் எல்லோரையும் கூட்டிவிட மாட்டாரா? ஒரு விநாடி வீணாகக் கூடாது-கூடாது. உடனேயே செய்ய வேண்டியதை அவர் செய்வார்.

"கார்லிஸ்! வண்டிக் குதிரையை அவிழ்க்க வேண்டாம். நான் உடனேயே போலீஸ் தலைவரை தேடிப் போகிறேன். இந்தப் பெண் தப்பி ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

இதயம் பட்பட்டென்று உடைந்து உதிர்ந்துவிடும் போல இருந்தது கொதெஃப்ராய்க்கு. அவர் தலைமயிர்கூடக் கலைந்து விட்டது. வண்டிக்குள்ளே தட்டு தடுமாறி ஏறிக் கொண்டார். வண்டிக்காரனும் வண்டியை வேகமாக ஓட்டினான். என்ன கேலி இது? வண்டிப் பூராவும் அந்தக் காணாமற் போய்விட்ட பையனுக்காக அவர் வாங்கிய விளை யாட்டு சாமான்கள் நிறைந்திருந்தன. தெரு விளக்குகள் அவற்றில் பட்டுப் பள பளக்க செய்தன. மறுநாள் கிறிஸ்துமஸ் - அதாவது தொட்டிலில் கிடக்கும்போதே ஞானிகளும் மகான்களும் வந்து வணங்கிச் சென்ற அந்தத் தெய்வீகக் குழந்தையின் பிறந்த தினம் மறுநாள் காலையில். ஏழை எளியவர்களுக்காக வந்து அவதரித்த குழந்தை அது; இடையர்களின் நண்பன்;

"பாவம்! ஐயோ என் மகன் ராவுல்? கண்ணே ? எங்கேயடா இருக்கிறாய் நீ? என்று கூறிக்கொண்டே வண்டி மெத்தையில் நகங்கள் பதியக் கைகளை ஊன்றிக்கொண்டு சொல்ல முடியாத துயரத்துக்கு ஆளானவராக இருந்தார் தகப்பனார் கொதெஃப் ராய். அந்த நிமிஷம் அவருடைய பணம், பதவி, பட்டங்கள், சட்டசபை அங்கத்தினர் ஹோதா, அவருடைய லக்ஷங்கள், நண்பர்கள், எல்லாமே பயனற்றவை என்று தோன்றின அவருக்கு. அவர் மனசிலே ஒரே ஒரு சிந்தனை மட்டுமே இருந்தது. என் பையன் எங்கே? என் பையன் எங்கே? பாவம் எப்படிக் கஷ்டப்படுகிறானோ அவன்? என்று எண்ணி வருந்தினார்.

கடைசியாக அவர் போலீஸ் தலைமைக் காரியாலயத்தை அடைந்தார். ஆனால் காரியாலயம் மூடியிருந்தது. அவர்கள் எல்லோரும் வீடு திரும்பி

வெகுநேரம் ஆகியிருந்தது.

நான்–என் பெயர் கொதெஃப்ராய் – சட்டசபை அங்கத் தினன். என் நாலு வயதுப் பையனைக் காணவில்லை . பாரிஸில் வழி தவறி விட்ட சிறுவனைக் கண்டுபிடிக்க வேண்டுமே. நான் போலீஸ் தலைவரைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்று கதறினார்.

காரியாலயத்துக் காவலாளியிடம் ஒரு தங்க நாணயத்தை எடுத்துத் தந்தார்.

அவன் நரைத்த மீசையுடன் கூடிய ஒரு மாஜி ராணுவ வீரன். பணம் கிடைத்த காரணத்துக்காக மட்டுமின்றி, தனயனை இழந்து கதறுகிறானே தந்தையென்று பரிதாபப்பட்டு, போலீஸ் தலைவரின் முன் கடைசியில் போய் நின்றார் கொதெஃப்ராய். அவர் மாலை உடுப்பு அணிந் திருந்தார்–கண்கள் ஒன்றுக்கு மட்டும் நாகரிகமாக ஒற்றைக் கண்ணாடி அணிந்திருந்தார். அவர் நடந்துகொண்டதில் ஒரு சிநேக பாவம் இல்லை. அதிகாரி என்கிற தோரணையில் நடந்துகொண்டார். ஏதோ பாசாங்கு செய்பவர்போல இருந்தார். உணர்ச்சி தாங்காமல் மகனை இழந்த தந்தையின் முழங்கால்கள் முட்டி தட்டி நடுங்கின. அவர் ஒரு மெத்தை தைத்த ஆசனத்தில் விழுந்தார். அழாத குறையாகத் தன் ஒரே மகனைக் காணோம் என்று கதையைத் தெரிந்த வரையில் போலீஸ் தலைவரிடம் சொன்னார் கொதெஃப்ராய். குரல் கம்மித் தடுமாறிற்று அவருக்கு ; வார்த்தைகளே வெளிவரவில்லை .

அந்தப் போலீஸ் தலைவருக்கும் குடும்பம் இருந்தது. தன்னைத் தேடி வந்த தகப்பனின் துயரம் அவனையும் பாதித்தது. "பாவம்!" என்று எண்ணினார். ஆனால் தன்னுடைய அனுதாபத்தை மறைத்து வைத்துக்கொண்டு, போலீஸ் அதிகாரியாகவே பேசினார் அவர்.

"உங்கள் பையனை நாலு மணி முதல் காணவில்லை என்கிறீர்களா?"

"ஆமாம்!"

"இருட்டத் தொடங்குகிற சமயம் அது. பேச்சு வராது. அப்படியொன்றும் கெட்டிக்காரக் குழந்தை அல்ல. வயது நாலு. எங்கு வசிக்கிறோம் என்றோ பெயரோ சொல்லத் தெரியாது. உம்...ம்..."

"ஆமாம். துரதிருஷ்டவசமாகத் தாங்கள் சொல்வதெல்லாம் நிஜமே."

"அன்னியர் வாசலண்டை காணாமற் போனானா? இடமும் படு மோசம். சந்தேகப்பட வேண்டியவர்கள் நிறைய இருக்கிற பிரதேசம் தான் அது. ஆனால் நீங்கள் நம்பிக்கை இழக்க வேண்டாம். அங்குள்ள போலீஸ் அதிகாரி மிகவும் கெட்டிக் காரன். அவனுக்கு டெலிபோன் நானே செய்கிறேன்."

ஒரு ஐந்து நிமிஷங்கள் துயரம் நிறைந்த அந்தத் தந்தை தனியாக அங்கிருந்தார். அவர் பொட்டு வலித்தது. அவர் இதயம் படபட என்று அடித்துக் கொண்டது.

ஐந்து நிமிஷங்களுக்குள்ளாகவே போலீஸ் தலைவர் சிரித்துக் கொண்டே உள்ளே மீண்டும் வந்தார். திருப்தியுடன் சிரித்தார். "கண்டு பிடித்தாகிவிட்டது'' என்றார்.

எழுந்து கொதெஃப்ராய் போலீஸ் தலைவரை அணுகி அவர் கையைப் பிடித்துக் குலுக்கினார். உணர்ச்சி வேகம் தெரியக் கையை அழுத்திக் பிடிக்கவே, வலி தாங்காமல் போலீஸ் தலைவர் முகத்தைச் சுளித்தார்.

"அதிருஷ்டம் நம் பங்கில் இருந்தது என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இத்தனை சீக்கிரம் கண்டு பிடித்திருக்க முடியுமா? பையன் நல்ல வெள்ளையா இல்லையா? வெளுத்தவன். சரி, ஊதா வெல் வெட்டுச் சட்டை போட்டிருந்தானா? சரி, வெள்ளை இறகு வைத்த கறுப்புக் கம்பிளித் தொப்பி போட்டிருந்தானா? சரி, அவனே தான்."

‘‘ஆமாம். ஆமாம்; ஆமாம். அதுதான் என் ராவுல்"

அந்தப் பக்கத்திலே ஒரு ஏழையினுடைய வீட்டிலே இருக்கிறான் அந்த பையன். அந்த ஏழையே இப்போதுதான் வந்து போலீஸ் காரியாலயத்தில் இப்படி ஒரு பையன் அகப் பட்டிருப்பதாக வந்து சொன்னானாம். இதோ விலாசம் அந்தப் போலீஸ் தலைவரைக் கேட்டு எழுதிக் கொண்டேன். தெய்யோத் தெரு – லெவல்வா பெர்ரே வீடு. பியரான் என்று பெயர் அந்த ஏழைக்கு. நல்ல குதிரை கட்டிய வண்டியானால் நீங்கள் அங்குபோய் உங்கள் மகனை ஒரு மணி நேரத்திற்குள் சந்திக்கலாம். நிச்சயமாக அவன்

இப்போது பிரபுக்களும் சீமான்களும் வசிக்கும் பகுதியில் இல்லை. பணக்காரர்கள் வசிக்கும் இடம் அல்ல அது. பையனைக் கண்டு பிடித்தவன் ஒரு ஏழை கறிகாய்க் கடைக்காரன்.

ஆனால் அதெல்லாம் பற்றி கொதெஃப்ராய்க்கு என்ன கவலை? அதெல்லாம் முக்கியமா என்ன? பையன் கண்டு பிடிக்கப்பட்டது தான் முக்கியம். போலீஸ் தலைவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு வண்டியில் உட்கார்ந்து அந்த ஏழையின் வீட்டுக்குக் கிளம்பிச் சொன்னார். அந்த நிமிஷம் தான் அவருக்கே தெரிந்தது– தன் மகனிடம் தனக்கு எவ்வளவு பிரியம் இருந்தது என்பது. இந்தத் தடவை வண்டியில் போகும்போது முன்மாதிரித் தன் மகனின் எதிர்காலத்தைப் பற்றி அவர் கனவு காணவில்லை . ராஜகுமாரன் மாதிரி அவனுக்குக் கல்வி புகட்ட வேண்டும் என்றோ, பிரமாதமான பணக்காரனாக வளர்க்க வேண்டும் என்றோ அவர் எண்ண வில்லை. இனி மேல் அந்தக் குழந்தையைப் பூரணமாக வேலைக்காரர்களை நம்பி ஒப்புவித்து விடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார். பணம் சம்பாதிப்பதிலும், அரசாங்க அலுவலங்களிலும், சட்டசபை விஷயத்திலும் செலவிடும் நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு தன் மகனுக் கென்று அதிக நேரம் செலவிடுவது என்று தீர்மானித்தார். இருபத்திநாலு மணி நேரத்தில் ஒரு கால் மணி நேரம் எப்படிப் போதும்? வெட்கக்கேடு தான். தேசமோ பொருளாதாரமோ இப்படி அவர் கவனத்தைத் திருப்பியதால் அவ்வளவாக நஷ்டப்பட்டு விடாது என்றும் மூலையில் மனத்தில் தோன்றியது. தன்னுடைய ஏழைத் தகப்பனாருடைய ஏழைத் தங்கை ஒருத்தி நாட்டுப்புறத்தில் இருந்ததையே பற்றி அவர் இது காறும் எண்ணிப் பார்த்தவரல்ல–இப்போது சட்டென்று அவள் நினைவு வந்தது. கூப்பிட்டால் வருவாள். கூலிக்கு வரும் எந்தத் தாதியையும் விட அவள் தன் மருமகனை நன்றாகப் பார்த்துக்கொள்ள மாட்டாளா? அவளுடைய நாட்டுப்புறத்து வழிகளாலும் பழக்க வழக்கங்களாலும் அவள் நகரத்து வேலைக்காரர்களையும் நாகரிக புருஷர்களையும் பீதியடைச் செய்வாள்– உண்மை தான். ஆனால் அதனால் என்ன? அவள் நல்லவள்; உறவினள். பையனை அவள் தாய் ஸ்தானத்தில் இருந்து பார்த்துக் கொள்ளுவாள். வேலைக்காரர்களுடைய நல்லெண்ணத்திற்காகவோ திருப்திக்காகவோ தான்

அவன் வாழ வேண்டும் என்கிற அவசியம் ஏது? பணக்கார பாங்கர் பணம் பண்ணும் கமிட்டிக் கூட்டத்துக்குப் போக இப்படி அவசரப்பட்டதில்லையே என்று சொல்லும்படியாகத் தன் மகனை மீண்டும் காண விரும்பி விரைந்தார். பொறுமை இழந்து வண்டிக்காரனையே அந்தப் பையனை அணைத்துக் கொண்டு முகத்தோடு முகம் வைத்து முத்தமிட வேண்டும் என்று தன் வாழ்நாளில் முதல் தடவையாக அந்தப் பெரும் பணக்காரர் விரும்பினார்.

வண்டி இருட்டிலே தெளிந்த காற்றைக் கிழித்துக்கொண்டு அவர் இருந்த தெருவையும் அவரைப் போன்றவர்கள் இருந்த தெருக்களையும் தாண்டிச் சென்றது. கோட்டை கொத்தளங்கள் பகுதியையும் தாண்டியது. சாதாரண மனிதர்கள் வசிக்கும் பெரிய தெருக்களையும் தாண்டி பாரிஸ் நகரின் அமைதியான சுற்றுப் புறத்தை எட்டியது. சாதாரண வீடுகளில் இருந்த தெருக்கள் பலவற்றையும் தாண்டிச் சென்றது. வண்டி நின்றதும் பார்த்தால் மிகவும் மோசமான ஒரு குடிசை அது. அதன்மேல் தான் போலீஸ் அதிகாரி கொடுத்திருந்த எண் காணப்பட்டது. பியரான் வசித்த வீடு அதுதான்– சந்தேகமில்லை. உடனேயே அந்தக் குடிசையின் கதவு திறக்கப்பட்டது. சிவப்பு மீசையுடன் பெரியதோர் ஆசாமி வெளியே வந்தான். அவன் பலசாலி என்பதும், கரடுமுரடானவன், நாசுக்கில்லாதவன் என்பதும் அவனைப் பார்த்தாலே தெரிந்தது. அவன் கைகளில் ஒன்றில்லை. வெறும் சட்டைக் கை மட்டும் காலியாகத் தொங்கிற்று. வண்டியி லிருந்த சீமானைப் பார்த்ததும் அவன் மரியாதையாக ஆனால் ஒரு நல்ல தனத்துடன் சொன்னான். ஓஹோ! அந்தப் பையனுடைய தகப்பனாரா நீங்கள்? பயப்பட வேண்டாம். கண்மணி சௌக்கியமாக இருக்கிறான்– ஒரு கெடுதியும் வரவில்லை அவனுக்கு என்றான். வாசற்படியை விட்டு நகர்ந்தான்; கொதெஃப்ராயை உள்ளே வர வழி விட்டான். வாயில் விரலை வைத்து பையன் தூங்கிக் கொண்டிருக் கிறான். சப்தப் படுத்தாமல் வாருங்கள் என்றான்.

ஆமாம் மிகவும் ஏழ்மை தாண்டவமாடிய குடிசை தான் அது. ஒரு சிறு எண்ணை விளக்கு முணுக் முணுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. கொதெஃப்ராய் கண்ணில் டிராயர் இல்லாத ஒரு மேஜை மூலையில் இருப்பது தெரிந்தது. கை உடைந்த நாற்காலிகள் பலவும் இருந்தன. ஒரு

வட்டமான மேஜைமேல் ஒரு பீர் ஜாடி இருந்தது. அதில் பாதி அளவுக்கு பீர் இருந்தது. மூன்று கண்ணாடி டம்ளர்களும் இருந்தன. ஆறிப்போன ஒரு துண்டு இறைச்சி ஒரு தட்டில் வைக்கப் பட்டிருந்தது. அலங்கார மில்லாத அந்த அறையின் சுவரில் கண்ணைப் பறித்து இரண்டு வர்ணப் படங்கள் மாட்டப் பட்டிருந்தன. 1889–இல் பாரிஸில் நடந்த எக்ஸ்பிஷனின் படம் ஒன்று – அதன் பின்னணியில் எய்ஃபெல் கோபுரம் பளிச்சென்று நீலமாகத் தெரிந்தது. மற்றது தளபதி பூலாங்கரின் வர்ணப்படம்; அவர் அழகியதோர் வாலிப லெஃப்டி னண்டாக இருந்தபோது எடுத்த படம் அது. பிரான்சு தேசத்தில் அநேகமாக எல்லோருடைய வீடுகளிலுமே அந்தமாதிரி ஒரு படம் இருக்கும் – ஆகவே இந்த ஏழையின் ருசி பிசகானது என்று சொல்ல முடியாது. கையில் விளக்கை யெடுத்துக் கொண்டு போய் ஒரு மூலையில் போட்டிருந்த சுத்தமான கட்டிலையும் அதில் படுத்திருந்த பையனையும் காட்டினான் அவன். தன் மகன் தான் அச்சிறுவன் என்று உணர்ந்தார் கொதெஃப்ராய். அவனைக் காப்பாற்றுபவன் போல அவன்மேல் கையைப் போட்டு அணைத்துக் கொண்டு சற்றே பெரியவனான மற்றவன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்.

"பையன்களுக்குக் களைப்பாகவும் இருந்தது. தூக்கமும் வந்தது என்று தன்னுடைய பெரிய குரலைத் தாழ்த்தியபடிச் சொன்னான் பியரான். நீங்கள் எப்போது வருவீர்கள் என்று எனக்குத் தெரியாது இல்லையா? ஆகவே இருந்த உணவைத் தந்து அவர்களைத் தூங்க செய்தேன். அவர்கள் தூங்கிய பிறகு தான் போலீஸ் காரியாலயத்தில் போய்த் தெரிவித்தேன். ஸிடோரே வழக்கமாக மேல் மச்சில்தான் படுத் துறங்குவான். ஆனால் அவர்கள் இருவரும் இங்கு படுப்பது நல்லது என்று எண்ணினேன் நான்.அவர்களைப் பார்த்துக் கொள்ளலாம்."

இந்த விஷயங்களை யெல்லாம் கொதெஃப்ராய் காதில் பூரணமாக வாங்கிக் கொண்டார் என்று கூடச் சொல்ல முடியாது. ஏதோ ஒரு அதிசயமான உணர்ச்சி வசப்பட்டவராக இரும்புக் கட்டிலிலே படுத்திருந்த அந்த இரண்டு குழந்தை களையும் பார்த்தார். அவர்களைப் போர்த்தியிருந்த போர்வை ராணுவத்திலிருந்து வந்ததோ அல்லது ஏதாவது ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததோ – தெரியவில்லை. சிறுவன் ராவுல் இன்னமும் தன் வெல்வெட்டுச் சட்டையைத் தான் அணிந்திருந்தான். அவன் உடம்பு

சரியில்லாதவன் மாதிரி வெளுத்திருந்தான். அவன் பக்கத்தில் படுத்திருந்த பையனோ ஒரு தேகாரோக்கியமான பழுப்பு நிறமாக இருந்தான். பார்க்கவே பொறாமையாக இருந்தது பாங்கருக்கு.

"உன் பையனா அவன்?" என்று பியரானைக் கேட்டார் அவர்.

"இல்லை" என்று பதில் அளித்தான் அவன். நான் பிரம்மச் சாரி. அதுவும் கையில்லாதவன் – நொண்டி. எனக்குக் கல்யாண மாகது. ஆமாம் ஒரு பாரவண்டி என்கைமேல் ஏறிவிட்டது. அந்தப் பையன் அண்டை வீட்டிலிருந்த ஒரு ஸ்திரீயின் பையன். அந்தப் பையனுக்கு ஐந்துவயது நடக்கும்போது. அதாவது இரண்டு ஆண்டுகளுக்குமுன், அவனுடைய தாயார் அவனை அநாதையாக விட்டுவிட்டு இறந்து போனாள். சாப்பிட ஒன்றுமில்லாமல்தான் அவள் இறந்தாள். அவள் சவக் கல்லறைகளுக்கு மாலைகள் பின்னுபவள் ஏதோ சம்பாதித் தாள்–சாப்பிடப் போதுமானது கிடைக்காது. அந்தக் குழந்தைக் காகவே அவள் ஐந்து வருஷங்கள் பாடுபட்டு உயிர் வைத்துக் கொண்டிருந்தாள். பின்னர் அண்டை அசலார்கள் அவள் சவத்துக்காகவே மாலைகள் வாங்க நேர்ந்தது; பாவம்! ஆகவே அவள் போன பிறகு என் கறிகாய் வண்டியைத் தள்ளுவதற்கும், மற்றும் பல காரியங்களிலும் அவன் எனக்கு மிகவும் உதவுகிறான். ஸியோ மிகவும் கெட்டிக்காரப் பையன். அவன் தான் உங்கள் வீடு கண்டுபிடித்தது.

"யாரு?" என்று கூவினார் கொதெஂப்ராய்.

"அந்தக் குழந்தையா?"

"ஆமாம், அவன் பல விஷயங்களிலும் பெரியவன் என்றுதான் சொல்லவேண்டும். தண்ணீர்க் குழாய் போலக் கண்களிலிருந்து நீர் வடியத் தெருவோடு போய்க்கொண்டிருந்த உங்கள் சிறுவனை அவன்தான் கண்டான். ஏதோ கிழவன் போல அவனிடம் பேசி அவனுக்கு ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்தினான். முக்கியமாகக் கஷ்டம் என்று சொன்னால் உங்கள் சிறுவன் சொல்வதைப் புரிந்து கொள்வதுதான் சிரமமாக இருந்தது. ப்ரெஞ்சு வார்த்தை களுடன் அவன் ஆங்கிலம், ஜெர்மன் முதலியவற்றைக் கலந்து பேசுகிறான். ஆகவே அவனிடமிருந்து அதிகம் தெரிந்து கொள்ள முடிய வில்லை. விலாசமும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஸிடோரே

என்னிடம் அவனை அழைத்து வந்தான்–நான் அதிக தூரத்திலில்லை. ஊர்க் கிழவிகள் எல்லாம் எனக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்து சூழ்ந்து கொண்டனர். தவளைகள் போல என்னைப் பார்த்துக் கத்தினர்.

போலீஸாரிடம் ஒப்புவித்துவிடு என்றார்கள் சிலர்.

ஆனால் அதற்கு ஸிடோரே ஆட்சேபித்தான்.

பையன் சிறுவன், பயந்து போய்விடுவான் என்றான் அவன். ஏனென்றால் எல்லா பாரிஸ் நகரவாசிகளையும்போல அவனுக்குப் போலீஸாரிடம் ஏற்பட்ட அவநம்பிக்கை. தவிரவும் உங்கள் பையன் ஸிடோரேயை விட்டு நகரவே மறுத்துவிட்டான். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் இருவருடனும் வீடு திரும்பினேன். சாப்பாடு போட்டுப் படுக்க வைத்தேன். பார்க்க இன்பமாக இருக்கிறது இல்லையா! அழகான குழந்தைகள்!

வண்டியில் வரும்போது தீர்மானித்திருந்தார் கொதெஃப் ராய். தனது மகனைக் கண்டு பிடித்துக் காப்பாற்றியவனுக்குச் சன்மானம் நிறையவே செய்யவேண்டும் என்று. சுலபமாகத் தன்னால் சம்பாதிக்க முடிந்த அந்தப் பொன்னில் ஒருபிடி அள்ளி அந்த ஏழை கையில் கொடுப்பது என்று தீர்மானித் திருந்தார். ஆனால் அந்த வீட்டிற்குள் நுழைந்த பிறகு ஏழைகளின் ஏழைமைக்கு அப்பாற்பட்ட ஒரு குணம், ஒரு தைரியம், ஒரு சுயநலமற்ற உதவும் தன்மை அவருக்குப் புரிபடத் தொடங்கி யிருந்தது. தன் குழந்தையைக் காப்பாற்று வதற்காக ஐந்து வருஷங்கள் செத்த பிணங்களுக்கான மாலைகள் கட்டிப் பிழைத்த அந்தப் பெண்ணின் தைரியம்; நொண்டிப் பிரம்மச்சாரி அநாதைக் குழந்தையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டுகாப்பாற்றத் தூண்டிய தரும சிந்தனை; எல்லாவற்றிக்கும் மேலாக, தெருச்சுற்றும் ஏழைப் பையனுக்கு, அழுதுகொண்டே வழி தவறி வந்துவிட்ட சிறுவனிடம் தோன்றி பரிவு– இப்படியாக எல்லாமே ஒரு புது உலகமாக அவருக்கு காட்சியளித்தன. நல்லவர்கள் நிறைந்த உலகம் இது. தான் பட்டினி கிடந்து செத்துக்கொண்டும் பிள்ளையைக் காப்பாற்றினாள் அவள். இவனோ நொண்டி–தன் சம்பாத்தியத்திற்கே திடமில்லாதவன். ஒரு அநாதையைத் தத்து எடுத்துக்கொண்டான். அடாடா! இப்படியும் ஒரு உலகம் இருக்கிறதா? கொதெஃப்ராயின் உள்ளத்தை இதெல்லாம் தொட்டன. அவரைத் சிந்திக்கத் தூண்டின. பியரானைப் போலவே

எத்தனையோ ஏழைகள், நொண்டிகள் உலகில் இருப்பர். ஸிடோரேயைப் போலவே உலகில் எத்தனை அநாதைகளோ! அவர்களை யெல்லாம் காப்பாற்றுபவர் யார்? தன் காலத்தைப் பணம் பண்ணுவதில் இனியும் விரயமாக்கு வதைவிட இப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றுவதில் செலவிட முடியாதா? எது நல்லது? பணம் சரி. ஆனால் இதிலே திருப்தியும் ஆனந்தமும் இருக்கும்போல இருந்ததே. கடைசியாக நிமிர்ந்து அந்தக் கறிகாய் வண்டிக் காரனைப் பார்த்தார். அவன் கண்களில்தான் எத்தனை நம்பிக்கையும் உண்மையும் பிரதிபலித்தன! தூங்கிக் கொண்டிருந்த அந்த இரு பையன்களையும் பார்த்தார் கொதெஃப்ராய் அவர் உள்ளத்தை என்னவோ செய்தது.

நண்பனே என்றார் கொதெஃப்ராய். நீயும் தத்துப் பையனும் எனக்கு அளவிடமுடியாத ஒரு உதவி செய்திருக்கிறீர்கள். நான் நன்றியவற்றன் அல்ல என்பதை உங்களுக்கு நிரூபித்து விடுகிறேன். ஆனால் இன்றைய பொழுதில்..... நீ சௌகரிய மாக வாழவில்லை – மிகவும் ஏழையாக இருக்கிறாய் என்பது தெரிகிறது. ஏதாவது சொல்பம் தந்துவிட்டுப் போகலாம் என்று எண்ணுகிறேன்.

ஆனால் பாங்கருடைய கையைத் தன் ஒரு கையினால் தடுத்தான் அந்த நொண்டி. பாங்கு நோட்டுகள் சட்டைப் பையிலிருந்தன. அவற்றை எடுக்க நீட்டிய கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் அவன்.

வேண்டாம் ஐயா வேண்டாம். நாங்கள் செய்த அளவு வேறு யாராவது என்றாலும் செய்திருப்பார்கள். பிரமாதமாக நாங்கள் எதுவும் செய்துவிடவில்லை . பிரதியாகப் பணம் எதுவும் ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை. அது பற்றித் தாங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. நான் பணக் காரனல்ல. உண்மைதான் ஆனால் நான் பழைய நாட்களின் போர்வீரன்– பெருமை படைத்தவன். நானாக உழைத்துச் சம்பாதிக்காத பணத்தை நம்பிச் சாப்பிடமாட்டேன் என்பது என் சபதம். நான் போரில் டான்க்வில் மெடல் வாங்கியவன். ஆமாம் நான் சம்பாதித்த பணத்தையே உபயோகிப்பேன்.

உன் இஷ்டம் என்றார் பணக்கார பாங்கர். ஆனால் அந்த நாட்களின் போர்வீரனாகிய நீ இந்த வேலை செய்து பிழைப்பானேன்? ஒரு கறிகாய்

வண்டியயைத் தள்ளிக் கொண்டு பிழைப்பதும் பிழைப்பா? உனக்காக நான் ஏதாவது ஒரு நல்ல ஏற்பாடு செய்கிறேன். பயப்படாதே!

ஆனால் அந்த நொண்டி அமைதியான ஒரு புன்னகையுடன் சற்று நட்புக் குறையச் சொன்னான்.

எனக்காகத் தங்கள் ஏதாவது செய்வது என்று உண்மையிலேயே விரும்பினால் ....

ஆவலுடன் கேட்டார் லட்சப் பிரபு கொதெஃப்ராய். நான் சிறுவன் ஸிடோரேயைக் கவனித்துக் கொள்வதை அனுமதிப்பாய் அல்லவா?

அனுமதிப்பேன் – மிகவும் சந்தோஷத்தடன் என்றான் பியரான் ஆனந்தத்துடன் அந்தப் பையனின் எதிர்காலம்பற்றி நான் அடிக்கடி எண்ணிப் பார்த்ததுண்டு. மிகவும் கெட்டிக் காரன் அவன். அவனிடம் அவன் உபாத்தியர்களுக்கெல்லாம் மிகவும் பிரியும்...

இப்படிச் சொல்லிக்கொண்டே வந்த பியாரான் சடக்கென்று பேசுவதை நிறுத்தினான். அவன் முகத்திலே படர்ந்த பாவத்தை அவநம்பிக்கை என்றுதான் அர்த்தப்படுத்திக் கொண்டார் கொதெஃப்ராய். அவன் சிந்தனை முகத்திலே தெரிந்தது; பையன் இங்கிருந்து நகர்ந்துவிட்டால் அடியோடு என்னை மறந்து விடுவானே! என்பது தான் அவன் சிந்தனை.

குழந்தையைக் கையிலே தூக்கிக்கொண்டு போய் அணுங்காமல் வண்டியிலே விட்டுவிடலாம். இங்கிருப்பதை விட அவன் வீட்டிலிருப்பதுதான் சிறந்தது. அவன் விழித்துக் கொண்டு விடுவானேயென்று பயப்பட வேண்டியதில்லை. அயர்ந்து தூங்குகிறான் எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால் முதலில் காலில் பூட்ஸ்க ளை மாட்டிவிடுகிறேன்.!

பியாரனின் கண்கள் போன திசையில் கொதெஃப்ராயும் திரும்பிப் பார்த்தார். கணப்பண்டை இரண்டு ஜோடி பூட்ஸுகள் கிடந்தன. ஒன்று ராவுலின் விலையுர்ந்த அழகிய பூட்ஸ். இன்னொன்று அந்த அநாதைப் பையனுடையது. கணப்பிலே கரி எரிந்தது அணைந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு பூட்ஸிலும் ஒரு சிறு விளையாட்டுச் சாமானும் ஒரு பொட்டலம் மிட்டாய்களும் இருந்தன.

வெட்கப்பட்ட குரலுடன் பியரான் சொன்னான்! அதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். ஸிடோரே தங்கள் பூட்ஸுகளை அங்கு வைத்தான். பழங்கதைகளைப்பற்றி, பாட்டி கதைகளை பற்றி பண்டிதர்கள் என்ன சொன்னால் என்ன? நம் குழந்தைக்கெல்லாம் அவற்றில் அபார நம்பிக்கை. உங்கள் பையனும் இரவு பூராவும் இங்கேயே கழிக்க வேண்டியதாக இருக்குமோ என்னவோ என்று எண்ணி தாத்தா கிறிஸ்துமஸ் கொணரும் பரிசுகளை எதிர்பார்ப் பார்களே பையன்கள் என்று போலீஸ் ஸ்டேஷனில் தகவல் தந்து விட்டு வரும்போது இவற்றை வாங்கிவந்து பூட்ஸு களில் வைத்தேன் இருவருக்கும் வாங்கி வந்தேன் என்றான் அந்த நொண்டி.... ஏழை.

நாஸ்திகர் தான் கொதெஃப்ராய். பல விஷயங்களில் பூரணமாக நம்பிக்கையற்றவர் அவர். நாகரிக மனிதர். லட்சக்கணக்கான பணத்தை விளையாட்டாக, அலட்சியமாக கையாளுபவர். அவர் கண்கள் இதைக் கேட்டு நிறைந்தன.

குடிசையைவிட்டு வெளியே ஓடினார். ஆனால் ஒரு நிமிஷத்தில் அவர் மாலையில் வாங்கி இன்னும் வீட்டில் இறக்கி வைக்காத விளையாட்டுச் சாமான்களை யெல்லாம் தூக்கிக்கொண்டு உள்ளே வந்தார். ஆடும் குதிரை, ஈயப் போர்வீரர்கள் பெட்டி, மற்றும் விலையுயர்ந்து சாமான்களை யெல்லாம் கொணர்ந்து வைத்தார்.

நண்பனே! அருமை நண்பனே! என்று கெஞ்சாத குறையாகக் கறிகாய் வண்டிக்காரனிடம் அவர் சொன்னார்; என் சிறுவன் ராவுலுக்கு கிறிஸ்துமஸுக்காக வாங்கிய வெகுமதிகள் இவை. அவன் அவற்றை இங்கேதான் காண வேண்டும். ஸிடோ ரோவுக்கும் அவன் அவற்றில் பங்கு தந்து அவனுடன் விளை யாட வேண்டும் என்று நான் விரும்பு கிறேன். இனிஸிடோரேயும் அவனும் தோழர்களாக ஒன்றாக வாழட்டும். என்னை இனியாவாது நம்புவாயா நீ? உன்னையும் ஸிடோரேயையும் நான் காப்பாற்றுகிறேன் நான் உங்களுக்குப் பட்ட நன்றித் கடனைத் தீர்க்க முடியும். அப்படியும் தீராது என் கடன். காணாமற் போன என் மகனைப்

கண்டுபிடித்தது மட்டு மல்லவே. பணக்காரனான எனக்கும் புதுசாக அறிவு தந்து விட்டாய். உலகில் ஏழைகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்று அறிவித்து விட்டீர்கள். என் ஐசுவரியம் அவர்களுக்கும் அர்த்தம் ஏற்படும் என்று நீ சொல்லாமற் சொல்லித் தந்துவிட்டாய். இங்கு தூங்கிக்கொண்டிருக்கிற இரண்டு குழந்தைகள் பேரிலும் ஆணையிட்டு நான் சொல்லுகிறேன்–ஏழைகளை நான் இனி என்றுமே மறக்க மாட்டேன்.

சென்ற வருஷம் டிசம்பர் 24–ந் தேதியன்று பாரிஸ்மா நகரில் நடந்த அதிசயம், நான் சொல்ல முன்வந்த அதிசயம் இதுதான். வாசகர்களே! நவீன அலங்கார உலகத்திலும் இம்மாதிரி அதிசயங்கள் நிகழாமல் இல்லை. நடக்ககூடியதாகத் தோன்ற வில்லையே என்று சொல்வீர்கள் நீங்கள் – நடக்கக்கூடியதாக இல்லை என்று சொல்வதானால் என்று எனக்குத் தோன்று வதையும் சொல்லி முடித்து விடுகிறேன். மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்று கட்டளையிடுவதற்காக உலகில் வந்து ஒரு பத்தொன்பது நூறாண்டுகளுக்குமுன் அவதரித்ததே ஒரு குழந்தை அக் குழந்தையின் பிறந்த தினத்தன்று, மிகவும் சாதாரணமாக நிகழ்ந்ததோர் அதிசயம் இது என்று மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

ஸெல்மா லாகர் லெவ்

ஸ்வீடிஷ் மொழி இலக்கியத்திலே 19-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிகளிலும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல நல்ல சிறுகதாசிரியர்கள் தோன்றினார்கள். அவர்களில் முதல்வர், சிறந்தவர் என்று ஆசிரியை ஸெல்மா லாகர் லெவ்வைச் சொல்வது வழக்கம். கவிதை நயத்துடன் மனித இதயத்தைத் தொடும் கதைகள் பல எழுதிய லாகர் லெவ்வின் கதைகளிலே ‘அடிமைப் பெண்’ சிறந்ததொன்று.

அடிமைப் பெண்

ஸெல்மா லாகர் லெவ்

கவியும் கற்பனையும்

அந்தக் காலத்திய ஸ்வீடன் தேசத்தின் தலைநகராக இருந்த அப்ஸலாவிலே, அரண்மனையை அடுத்திருந்த கன்னிமாடம் மிகவும் குறுகலான, தாழ்ந்த, அழகோ அலங்காரமோ இல்லாத ஒரு கட்டிடம். புறாக் கூண்டுபோல அது பல தூண்களின் மேலே தரையிலிருந்து பத்தடி உயரத்தில் கட்டப் பட்டிருந்தது. ஏணிப்படி போன்ற குறுகலான, செங்குத்தான படிகளில் தொத்தி ஏறிச் சென்றுதான் கன்னிமாடத்தை அடைய வேண்டும். உயரம் அதிகமில்லாத நிலைப்படியைக் குனிந்து தாண்டிச் செல்ல வேண்டும்; இல்லாவிட்டால் மண்டை உடைந்துவிடும். சுவர்களில், உள்புறத்தில் பண்டைக் காவியங்களிலிருந்து காதல் விஷயமான பல வரிகள் பொறிக்கப் பட்டிருந்தன – கன்னிமாடத்தில் வசித்த கன்னிமார்களுக்கு அவை எப்போழுதும் ஞாபகத்தில் இருக்கவேண்டும் என்று. வெளி உலகத்தை எட்டிப்பார்க்க இடங்கிடையாது கன்னி மாடத்தில். ஆனால் கண்கள் உள்ள சாளரங்கள் பல இருந்தன. அக்கண்கள் மூலம் தூரத்து மலைச் சிகரங்களையும் அவற்றில் ஊசாலடும் கருமேகங்களையும் காணலாம்.

கிழக் கவி ஹியால்டே பலநாட்களாக அப்ஸலா அரண்மனையிலே விருந்தினனாகத் தங்கியிருந்தான். அப்படி அவன் தங்கியிருந்து ஒவ்வொரு நாளும் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து, குறுகலான மச்சுப் படியிலே தொத்தி ஏறி, கன்னி மாடத்துக்கு வருவான்–ராஜகுமாரி இஞ்செகார்டைத் தேடிக் கொண்டு வாய் ஓயாமல் அவன் அவளிடம் நார்வே தேசத்து அரசனான ஹாரல்டினுடைய பிள்ளை ஓலாவைப் பற்றி பேசுவான். பேசுவான் என்று சொல்வது பிசகு, கிழவனா னாலும் அவன் கவி அல்லவா? அவன் பேச்சே கவிதையாக இருக்கும். தவிரவும் அவன் ஓலாவினுடைய பிரதாபங்களைப் பாட்டகாவும் இசைத்திருந்தான். உத்ஸாகமாகப் பாடுவான்.

இப்படி ஓலாவின் புகழைப் பாடுவதற்கும் பேசுவதற்கும் என்று கவி ஹியால்டே வரும்போதெல்லாம், ராஜகுமாரியின் தோழிகளில் ஒருத்தியான ஆஸ்டிரிடா என்பவள் கூட வந்து உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருப்பாள். பேச்சு ஆரம்பிக்கும் போது இரண்டு யுவதிகளும் நூல் வேலை ஏதாவது

செய்து கொண்டிருப்பார்கள். கொஞ்சங் கொஞ்சமாக , கவியின் பேச்சிலே சுவாரசியமும் சூடும் ஏற ஏற, நூல்வேலை தானாக நின்றுவிடும். நூல் பந்துகளும், ஊசிகளும் கவனிப்பாரற்றுத் தரையிலே கிடக்கும். ஆனால் இந்தப் பெண்களுடைய கைகள்தான் சும்மா இருந்தனவே தவிர, அவர்களுடைய கற்பனை சும்மா இருக்காது; மிகவும் சுறுசுறுப்பாகவே இருக்கும். கவியினுடைய வார்த்தைகளும், இந்தப் பெண் களுடைய கற்பனையுமாக இழைந்து, ஓலாவ் அரசனுக்கு இரண்டு விதமான, வித்தியாசமான உருவங்களைக் கொடுத்து விட்டன. அரசகுமாரி உருவகப் படுத்திக் கொண்டபடி ஓலாவை அவள் தோழி உருவகப்படுத்திக் கொள்ளவில்லை.

ராஜகுமாரியின் கற்பனையிலே ஓலாவ் ஒரு புண்ய புருஷனாக உருவமாகி இருந்தான். எவ்வளவு புனிதமான, அந்தப் புனிதத்தினாலேயே அழகான உருவம் அது! அந்த உருவத்தை நினைக்கும் ஒவ்வொரு தடவையும் ராஜ குமாரிக்கு மண்டியிட்டுத் தாழ்ந்து வணங்க வேண்டும் என்று தோன்றும். மன்னன் ஓலாவ், அவள் கற்பனையில், மணி முடி தரித்து, நாலு பக்கத்திலும் சிம்மங்களால் தாங்கப்பட்ட ஓர் உயர்ந்த சிம்மாசனத்திலே கம்பீரமாக அமர்ந்திருந்தான். சிவப்பும் தங்கமுமாக இழைத்திருந்த ஓர் அழகிய போர்வையை போர்த்தியிருந்தான். அவன் கையிலே செங்கோல் இல்லை; கத்தியில்லை; ஆனால் இதற்கெல்லாம் மேலாகக் கடவுளின் வாக்கியங்களைத் தாங்கிய ஓலைச் சுருள் இருந்தது. மணிமுடிக்குள் அடங்காமல் அவன் தலைமயிர் வெளியே விழுந்து சிதறி அலை அலையாக அவன் தோள் மேல் புரண்டு கொண்டிருந்தது. அவன் கண்களிலேதான் என்ன அமைதி! அவன் முகத்திலேதான் என்ன பரவசம் படர்ந்திருந்தது! அந்த பக்தியினால் ஏற்பட்ட ஒரு தேஜஸ், சாதாரண மனிதர்களைப் பயமறுத்தும் சக்தி வாய்ந்ததாக இருந்தது என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று எண்ணினாள் ராஜகுமாரி. மன்னன் ஓலாவ் வெறும் மன்னன் மட்டும் அல்ல, பரம பக்தன் என்பதை எண்ணி எண்ணிப் பரவசமடைந்தாள் அவள்.

தோழி ஆஸ்டிரிடாவின் கற்பனையில் தோன்றிய ஓலாவின் உருவம் இந்த உருவத்துக்கு முற்றிலும் மாறுபட்டது. அதிசயம் ஒன்றுமில்லை. ஆஸ்டிரிடா என்பவள் அடிமைக் குலத்தில் அரசனுக்கு பிறந்து, பசியையும், குளிரையும், ஏழ்மையையும் கண்டு அறிந்தும் அனுபவித்தவள், அழகிலே ராஜகுமாரிக்குச் சற்றும் மட்டமானவள் அல்ல. சன்னமான, துவளும் தங்கக் கம்பிகளாக அவள் தலைமயிர் நீண்டு அடர்ந்து வளர்ந்திருந்தது. கவியின் வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு, ஓலாவின் புகழையும், பிரதாபங்களையும் எண்ணி எண்ணி, அவள் மனசும் முகமும் ஒருங்கே அதிசயமானதோர்

பொலிவு பெற்றிருந்தன. எவ்வளவோ கஷ்டப்பட்டவள்; அவதிப் பட்டவள்; ஆனால் எந்தக் கஷ்டத்திலும், எந்த அவதியிலும், சிரித்த முகத்துடனும், ஹாஸ்யம் ததும்பும் வார்த்தை களுடனும் இருப்பவள். கன்னிமாடத்தின் சுவர்களில் வேறு யாருடைய நகையொலியும் அவ்வளவு உரக்கப்பட்டு எதிரொலிக்காது. கவி ஒவ்வொருதரமும் ஓலாவ் என்று சொல்லும்போது அவள் கற்பனையில் சிரிக்கும் வீரன் ஒருவனின் உருவம் எழுந்தது சற்றுக் குட்டையானவன்தான். ஆனால் அகன்ற மார்பும், நீண்ட கைகளும் உடையவன். வேலெடுத்து அவன் கையால் வீசினால் திக்குகளையெல்லாம் கிழித்துக்கொண்டு பாயும். கத்தி எடுத்து அவன் வெட்டினால் பாதாளம் வரையில் கிழியும். வீறுகொண்ட நடையும்... காவிய நாயகன் அவன். அவனைப்பற்றி அதிகம் சொல்வானேன்? கவிகளே அவனை வர்ணிக்க வல்லவர்கள். அவன் இப்பொழுது நார்வேயின் அரசனாக மட்டுந்தான் இருந்தான். ஆனால் அவன் பிற்காலத்திலே உலகத்தின் சகல தேசங்களையும் ஆளுவான்– வென்று முடிசூடுவான். அவனுடைய நெற்றி பரந்த மலைபோன்ற நெற்றி – எவ்வளவு பெரிய மணி முடியையும் தாங்கக் கூடியது. அவன் கண்கள் கடல் போன்றவை–ஆழ்ந்த நீலம் கொண்டவை. அவன் கன்னங்கள் ஆப்பிள் கதுப்புப் போலச் சிவந்தவை.

இந்த இரண்டு கற்பனை உருவங்களும் எவ்வளவோ வித்தியாசமானவைதான்; எனினும் இரண்டும் கவியின் வார்த்தைகளால் எழுந்தவையே. இரண்டு பெண் உள்ளங்கள் தங்கள் லக்ஷியத்தைக் கண்டுவிட்டன.– அவ்வளவுதான். ராஜகுமாரி தன்னுடைய கற்பனை ஓலாவை எவ்வளவு ஆர்வத்துடன் நேசித்தாளோ அவ்வளவு ஆர்வத்துடன் தன்னுடைய கற்பனை ஓலாவை அடிமைப் பெண்ணும் நேசித்தாள்.

தன் வார்த்தைகளால் இந்த இரண்டு பெண்களின் அந்தரங்கத்திலும் ஸ்தாபிதமான இரு வேறு உருவங்களையும் கவி ஹியால்டே மட்டும் பார்க்க முடிந்திருக்குமேயானால் , அவன் என்ன சொல்லியிருப்பான்? என்ன சொல்லியிருக்கப் போகிறான்? இரண்டுமே உண்மைக்கு ஒத்தவைதான் என்றே சொல்லியிருக்கப் போகிறான்? இரண்டுமே உண்மைக்கு ஒத்தவைதான் என்றே சொல்லியிருப்பான். ஏனென்றால் அரசன் ஓலாவ் மிகவும் பாக்கியசாலி. அவனைப்போன்ற பாக்கியசாலி இவ்வுலகில் வேறு யாருமே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். அவனிடம் வீரம் மட்டும் அல்ல; தெய்வ பக்தியும் பரி பூரணமாகவே குடியிருந்தது

கிழக் கவி ஹியால்டே மற்றக் கவிகளைப்போல ஓலாவைப் பற்றி வெறும் பொய்களாகச் சொல்லி அடுக்கிக் கொண்டு போகவில்லை. தான் பரிபூரணமாக உண்மை என்று நம்பிய விஷயங்களையே அவன் கவிதையாக

இசைத்தான். அவன் எவ்வளவோ தேசங்களில் சுற்றி அலைந்தவன். அரசர் களுடனும், அரச குமாரர்களுடனும், வீரர்களுடனும், பக்தர்களுடனும் நெருங்கிப் பழகியவன் அவன். ஊர் ஊராக, தேசம் தேசமாகப் போய் பலரையும் சந்தித்து பழகியவன். ஆனால் எந்தத் தேசத்திலும் ஓலாவைப் போன்ற வேறு ஒரு மனிதனை அவன் கண்டதில்லை. முன் காலத்திய சரித்திர நாயகர்களில் சிலர் அவனைப்போல இருந்ததுண்டு என்று வேண்டுமானால் சொல்லலாம். ஓலாவைப் போன்றதோர் காவிய நாயகனைக் கண்டறிந்து பழகக் கிடைத்ததைத் தன் பெருபாக்கியம் என்றே கவி ஹியால்டே கருதினான். காவிய நாயகனாக இருப்பதற்கு ஓலாவ் சகல விதங்களிலும் தகுதியானவன்.

ஹியால்டே ஓலாவைப்பற்றி ஒரு கவியில் பாடியிருந் தான்; ஓலாவை நான் மறந்து விடும்படிச் செய்யகூடிய மனிதன் யார்? அவனைவிடச் சிறந்த குணங்களும் வீரமும் படைத்த மனிதன் இப்பரந்த உலகிலே இப்பொழுது எவன் இருக்கிறான்?

ஹியால்டேயினுடைய பாட்டுகளும், கவிதைகளும், சிந்தனைகளும் அழகு நிறைந்தவையாக இருந்தன. ஆனால் அவன் முகத்திலோ, உடலிலோ அழகென்பதே யில்லை. கிழவன் என்பதனால் மட்டும் அல்ல. அவன் வாலிபப் பருவத்தில்கூட அழகனாக இருந்திருக்க மாட்டான் என்பது நிச்சயம். அக அழகுதான் கொடுத்துவிட்டோமே அவனுக்கு. முக அழகு எதற்கு என்று கடவுள் அவனை அழகில்லாமல் படைத்து விட்டாரோ என்னவோ தெரியவில்லை. அவன் தலைமயிர் இன்னும் நரைக்கவில்லை; கருப்பாகவே இருந்தது. ஆனால் அவன் தலைமயிரையும்விட இருண்டிருந்தது அவன் முகம். முகம் எப்படியானால் என்ன? அவன் கண் களிலே சதா அபூர்வமானதோர் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவன் கண்களைக் கண்ட யாரும் அவன் பெரிய கவி என்பதை க்ஷணத்திலே ஒப்புக்கொண்டு விடுவார்கள்.

ஓலாவ்தான் அவனுடைய காவிய நாயகன்; லக்ஷிய புருஷன். அவனுடைய யுத்தங்களையும், வீர தீரப் பராக் கிரமச் செயல்களையும் புகழ்ந்து பாடினான்; அவனுடைய ஒப்புயர் வற்ற தெய்வ பக்தியையும் ஆத்ம சோதனை களையும் புகழ்ந்து பாடினான். ஆனால் என்ன வீரம் இருந்து என்ன பயன்? என்ன பக்தியிலிருந்து என்ன பயன்? இதெல்லாம் கல்லும் கரடும் நிறைந்த கட்டாந்தரை தானே? அவனுக்கேற்ற பெண் கண்டு அவன் மனம் அழகாக மலர வேண்டாமா? காவிய நாயகன் காதல் நாயகனாக மாறாதது, காதல் கவிதைக்கு இடந்தராதது, பெருங்குறையே யல்லவா?

இப்படியெல்லாம் சிந்தித்துக் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கும் சமயத்தில் ஸ்வீடன் தேசத்து அரசனின் அரண் மனைக்கு வந்து சேர்ந்தான் கவி ஹியால்டே. அங்கு ஸ்வீடன் தேசத்து அரசனின் ஓரே குமாரியான இஞ்செ கார்டைக் கண்டான். அவளைக் கண்டது முதல் கவியின் உள்ளத்திலே ஓரே குமாரியான இஞ்செகார்டைக் கண்டான். அவளைக் கண்டது முதல் கவியின் உள்ளத்திலே ஓரே ஒரு எண்ணம் தான் குடிகொண்டிருந்தது.

அவனுடைய காவிய நாயகன் ஓலாவ் ஆண்களிலே சிகரம் போன்றவன் என்றால், இஞ்செகார்டைப் பெண்களின் திலகம் என்று சொல்லவேண்டும் என்று கவிக்குத் தோன்றிற்று. அவளை விடச் சிறந்தவளை – அழகில் ஆகட்டும், பெண் தன்மையில் ஆகட்டும் – கவி ஹியால்டே வேறு எங்கேயும் கண்டதில்லை. ஓலாவுக்கு ஈடானவள் அவள். சந்தேகமே யில்லை .

திடீரென்று கவிக்குச் சந்தோஷம் உண்டாகிவிட்டது. தனது ஓலாவுக்கு ஏற்றவளான ஒரு பெண்ணை அவன் கண்டு விட்டான். அவளைவிடச் சிறந்தவள் கிடைப்பதரிது– இஞ்செ கார்டுக்கு. இவர்களிடையே காதல் தீயை வளர்ப்பதே தன்னுடைய புனிதமான கடமை என்று எண்ணினான் கவி. அவர்களுடைய காதலைப் பாடுவதைத் தனிப்பாக்கியம் என்று கருதினான்.

பெண் குலத்தின் வெற்றி அவள். ஆண் குலத்தின் சிகரம் அவன். இருவரும் அதுவரை ஒருவரை யொருவர் சந்தித்த தில்லை என்றாலும் ஒருவரை யொருவர் காதலிக்கும்படிச் செய்வது அவ்வளவு கடினமான காரியமாகப்படவில்லை கவிக்கு. அவன் கவி. கலைகளெல்லாம் பழைய காதல் காவியங்கள் எல்லாம், தெய்வங்கள் எல்லாம் கூட, அவனுக்கு இவ்விஷயத்தில் உதவி செய்யும்.

இந்தச் சிந்தனை மனசில் தோன்றியவுடனே வீரக்கவி ஹியால்டே வீரர்களைப் பற்றிப் பாட்டுக் கட்டுவதை நிறுத்தி விட்டான். சேனை வீரர்களுடன் அளவளாவுவதையும் நிறுத்தி விட்டான். இனிமையான காதல் கவிதைகள் பல இயற்றினான். பொழுதை எல்லாம் கன்னிமாடத்திலே ராஜகுமாரியுடன் கழிக்கலானான்; வீராவேசம் ததும்பும் கனல் வார்த்தைகளை எல்லாம் கட்டிவைத்துவிட்டு மிருதுவான வார்த்தைகளை இன்பங் கொட்டும் மெட்டிலே அமைத்துப் பாடலானான். இந்தப் பாட்டுக்களைக் கேட்டவர்கள், பழைய ஹியால்டே தான் பாடியவை இவை என்பதை நம்ப மறுத்தாலும் மறுப்பார்கள்!

இஞ்செகார்டையும் ஓலாவையும் மண வாழ்க்கையிலே பிணைப்பது என்பது கவியனுடைய வாழ்க்கை லக்ஷியமாகி விட்டது. இந்தக் காரியத்திலே மட்டும் அவன் வெற்றிபெற்று விட்டானே யானால் - இது அவனுடைய புகழ்பெற்ற காவியங்களை எல்லாம் விட உண்மையான, அழகான காவியாமாகி விடும்.

கிழக் கவி தன் காவிய நாயகனுக்காகக் காதல் கனவுகள் காணத் தொடங்கினான். புல் பூண்டுகூட வேர் விட்டு முளைக்க முடியாத கட்டாந்தரை மத்தியிலே ஓர் அற்புதச் சிவப்பு ரோஜாச் செடி முளைத்துத் தழைத்துச் செக்கச்சேவேலென்று ஒரே ஒரு பூ பூத்திருப்பதுபோல இருந்தது, கிழக் கவியின் உள்ளத்திலே இந்த ஆசை.

"இரவெல்லாம் அவன் கனவுதான்"

வழக்கம்போல ஒரு நாள் கன்னி மாடத்திலே கிழக் கவி ஹியால்டே ராஜகுமாரியுடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். வழக்கம் போலவே தோழி ஆஸ்டிரிடாவும் கூடவே இருந்தாள். மற்றத் தோழிமார் எல்லோரும் தங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஓலாவை, ஹாரல்டினுடைய பிள்ளையைப் பற்றித் தான் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லியாகிவிட்டது என்று எண்ணினான் கவி ஹியால்டே. ராஜகுமாரியினுடைய மனசிலே என்ன இருந்தது என்று அறிய அவன் விரும்பினான். ஓலாவைப்பற்றி அவள் எக்கச் சக்கமாக ஏதாவது பதில் சொல்லி மாட்டிக்கொள்ளுவாள் என்று அவன் எண்ணினான். ஒரு வார்த்தை சொல்லுவாள். முகம் சிவக்கும்; ஆசையால் வெட்கு வாள்; கண்ணைக் கவிழ்ப்பாள் என்று தனக்கள் சொல்லிக் கொண்டான் கவி.

ஆனால் ராஜகுமாரி உயர்ந்த குலத்திலே உதித்தவள் இல்லையா? எத்தனையோ தலைமுறைகளாகத் தாழ்ந்த குலத்தினரின் கலப்பே இல்லாத ரத்தம் அவள் உடலிலே பாய்ந்து கொண்டிருந்தது. நடத்தையாலோ, பார்வையாலோ, வார்த்தையாலோ அவள் தன் மனசில் இருந்ததை வெளியே காட்டிவிடவில்லை. காதல் என்கிற கள்ளத்தனத்தினால் அவள் கன்னம் சிவக்கவில்லை; அவள் கண்கள் மலரவில்லை; அவள் அதரங்கள் விரியவில்லை . கவியால்கூட எப்படி முயற்சித்தும் அவள் அந்தரங்கத்தை அறிய முடியவில்லை.

அவளுடைய பெண்மையின் திறத்தைக் கண்டு வெட்கித் தலை குனிந்தான் கவி. அவளை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணியது பிசகல்லவா? ஏமாற்றி அறிந்துகொண்டால்கூட, அப்படி அறிந்ததை உபயோகிப்பது பெண்மைக்குத் துரோகம் செய்வதுபோல் ஆகாதா?

கவியாகிய நான் இப்படிப் பெண்மைக்குத் துரோகம் செய்ய எண்ணியது தவறு தானே! என்று சிந்தித்ததான் ஹியால்டே. நேரடியாக விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வதே சரி என்று தீர்மானித்தான்.

நேரடியாக உடனே கேட்கவும் கேட்டு விட்டான். இவ்வளவு நாளாக நான் உன்னிடம் ஓலாவின் புகழை பாடி வந்திருக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய் அவனைப்பற்றி? என்றான்.

ராஜகுமாரி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள். கவி மீண்டும் கேட்டான்; ஹாரல்டின் மகன், நார்வேயின் அரசன், ஓலாவ் உன்னை மணக்க விரும்பி உன் தகப்பனாரைக் கேட்கிறான் என்று வைத்துக்கொள். நீ என்ன சொல்லுவாய்? நீ சம்மதிப்பாயா அவனை மணம்புரிந்து கொள்ள?

இந்தக் கேள்விக்கு என்ன பதில் வரும் என்று அறிய ஆவலை அடக்க மாட்டாமல் துடித்தான் கவி. அடிமைப் பெண் ஆஸ்டிரிடாவும் முகத்திலே ஒரு வினோதமான பாவத்துடன் ராஜகுமாரியின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தாள்.

திடீரென்று, குப்பென்று, ராஜகுமாரியின் முகத்திலே காதல் ஒளி படர்ந்தது. அவளுடைய அழகிய முகம் முன் எப்பொழுதும் இல்லாததோர் அழகுக்கூடிப் பொலிவு பெற்றது. மலையுச்சியில் நின்றுகொண்டு ஆழ்ந்த நீலக் கடலைப் பார்ப்பவன் முகத்திலே படர்ந்திருக்குமே, ஒரு பரவசமான பாவம். அதுபோன்ற முகபாவத்துடனே ராஜா குமாரி பதில் அளித்தாள்; உங்கள் அரசன் ஓலாவைப்பற்றி நீ சொன்னாய்; நான் காதாரக் கேட்டேன். நீ பாடினாய்; நான் பரவசமடைந் தேன். நீ சொன்னபடியும் பாடியபடியும் அவன் தெய்வ பக்தனாகவும், மனிதர்களிலே சிறந்தவ னாகவும் இருந்து, என்னை மணமுடிக்க விரும்பினால், அதை நான் என் பாக்கியமாகவே கருதுவேன்.

ஆனால் இதைச்சொல்லி முடித்தவுடனே அவள் நீண்டதோர் பெருமூச்சுவிட்டாள். அவள் முகத்தில் திடீரென்று தோன்றிய ஒளி மறைந்தது. ஏதோ தூரத்திலே எட்டாக் கையிலே ஒரு லக்ஷியத்தை கண்டு அனுபவித்துக் கொண்டிருக்கையில், அதைக் காண்பதுகூடத் தவறு என்று சொல்வதுபோல, பனி வந்து மறைத்தால் எப்படியிருக்கும்? மீண்டும் ஒருதரம் பெருமூச்சுவிட்டாள் ராஜகுமாரி. மீண்டும் சொல்லலானாள்: ஹியால்டே! நீ கவி. கனவுகள் காண்பதற் கென்றே பிறந்தவன். நீ கனவுகள் காணலாம்; அவற்றை அற்புதமான கவிதைகளாக இசைக்கலாம். ஆனால் நான் ஒரு பெண்; ஓலாவ் ஒரு ராஜ குமாரன். நானும் கனவுகள் காண்கிறேன். என் கனவுகளுக்கும் உன் கனவுகளுக்கும் வித்தியாசம்

உண்டு. உன் கனவுகள் கவிதைகளாக உருவம் எடுக்கின்றன. என் கனவுகள் கேவலம் கனவுகளாகவே இருக்கின்றன – அப்படித்தான் இருக்க முடியும். இத்தனை பேச்சிலும் நீ முக்கியமான ஒரு விஷயத்தை மறந்து விட்டாய். நார்வே தேசத்து அரசன் என் தகப்பனாருக்குப் பரம விரோதி என்பதை நீ மறந்து விட்டாய். நானும் ஒரு விநாடி மறந்து விட்டுச் சந்தோஷப்பட்டேன். யுத்த சன்னத்தனாய் வேண்டுமானால் உன் ஓலாவ் ஸ்வீடனுக்கு வருவான். மணமகனாக, என்னை மணக்க விரும்பி வரமாட்டான். இதை அறிந்திருந்தும் நான் இரவெல்லாம் அவனைப்பற்றிக் கனவு காண்கிறேன்!

அரசகுமாரி! நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே என்றான் கவி. உன் சம்மதமிருந்தால் போதும். என் ஓலாவை எனக்கு நன்றாகத் தெரியும். அவன் ஆசை எனக்கு தெரியும். நீ விரும்புகிறபடியே நடத்தி வைப்பேன் நான்.

கவி ஹியால்டேவுக்குப் பரம ஆனந்தம். தான் நினைத்த படியே நடக்கும் இனி என்பதுபற்றி அவன் முகம் எப்பொழுதும் இருண்டு அழகில்லாமல் குரூரமாக இருக்கும் முகம்மலர்ந்தது.

ஆனால் அதற்கு மாறாக அரசகுமாரியின் முகம் மேலும் இருண்டது. இந்த விஷயம் நீ எதிர்பார்க்கிறபடி முடியாது. என் ஆசையையோ உன் ஓலாவின் ஆசையையோ பொறுத்திருக்க வில்லை இது. ஸ்வீடனின் மன்னனான என் தகப்பனார் ஓலெவ் ஸ்கெடனிஸ், இதற்கு ஒருபொழுதும் சம்மதிக்க மாட்டார்–சம்மதிக்கவே மாட்டார். அவருக்கு ஹாரல் டினிடமும் அவனுடைய மகன் ஓலாவிடமும் எவ்வளவு வெறுப்பும் விரோதமும் இருக்கிறது என்பது எனக்கு நன்கு தெரியும். ஓலாவ் என்கிற பெயரைச் சொல்லும்போதே அவருக்கு அளவு கடந்த கோபம் வந்துவிடும். பரம சத்துருவாக அவர் எண்ணியிருக்கும் ஒருவனுக்கு, என்னைக் கல்யாணம் செய்து தர அவர் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள மாட்டார்.

மறுபடியும் பெருமூச்சுவிட்டாள் ராஜகுமாரி. தன் பெண்மையையும், தான் ஒரு ராஜகுமாரி என்பதையுங்கூட மறந்துவிட்டு இஞ்செகார்டு அழாத குறையாகக் கண்களில் நீர் தேங்கத் தொடங்கி விட்டது. என் இரவுகளெல்லாம் ஒரே கனவாக, திரும்பத் திரும்ப அதே கனவாகக் கழியத் தொடங்கி விட்டன. என் உள்ளத் துடிப்பெல்லாம் ஓலாவ், ஓலாவ் என்று ஓலமிடுகிறது – வெறும் ஓலமே அது! பதில் குரல் கேட்காது என்பது நிச்சயம். ஹியால்டே! நீ அறியாமல் செய்துவிட்டாய். கவிதான் நீ! ஆனாலும் பெண்பாவம் பொல்லாதது! உன்னால் வந்த வினைதான் இதெல்லாம். நீ வந்தாய். உன் ஓலாவை என் அகத்திலே குடியேற்றி

வைத்துவிட்டாய்! கிட்டாத லக்ஷியம் அது. நீ அப்ஸலாவுக்கு, அரண்மனைக்கு, என் கன்னி மாடத்துக்கு, வராமல் இருந்திருக்கக் கூடாது? எவ்வளவோ நன்றாயிருந்திருக்குமே! நான் ஏதோ சாதாரண ராஜகுமாரி யாகக் காலங் கடத்திக் கொண்டிருந்தேன். நீ வந்து, கவிபாடி, பெண்மையைத் தட்டி எழுப்பிவிட்டாய். என் உள்ளத்திலே இனி அமைதிக்கு இடம் கிடையாது.

அதற்குமேல் ராஜகுமாரி இஞ்செகார்டால் பேச முடிய வில்லை; வந்த அழுகையையும் அடக்க முடியவில்லை. விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

அவளுடைய துக்கத்தையும் ஏக்கத்தையும் கண்டு ஸ்தம் பித்துப் போய்விட்டான் கவி. ஒரு விநாடி என்ன சொல்வது என்று அறியாமல் திக்பிரமை அடைந்தவன் போல நின்றான். பின்னர் சொன்னான்:

கடவுளின் சித்தம் எப்படியோ அப்படி நடக்கும். அரசகுமாரி, வருந்தாதே! நீ நினைப்பது தவறு. கவியாகிய எனக்குக் கடவுளின் சித்தம் ஓரளவு தெரிகிறது. நன்கு தெரிகிறது– என்றே நான் சொல்லுவேன். நீயும் ஓலாவும் மணம் செய்து கொள்வதையே கடவுள் விரும்புகிறார். உங்கள் இருவரையும் ஒருவருக்கொருவர் ஏற்றவராகப் படைத்ததிலே கடவுளின் நோக்கம் அதுதான். சந்தேகம் என்ன? இவ்வளவு நாளும் உன் தகப்பனார் ஓலாவை வெறுத்து வந்தது என்னவோ உண்மைதான்; இனி அவ்வெறுப்பு மாறிவிடும். உங்கள் இரண்டு தேசங்களுக்கும் இடையே உன்னால், அமைதி நிலவும்: நீ ஓலாவை மணம் செய்துகொள்வதனால். என்னை வையாதே! கடவுளின் தூதனாக வந்த வெறும் கவிதான் நான். என்னை வையாதே! கடவுள் உன் ஆசையைப் பூர்த்தி செய்து வைப்பார். கவலைப்படாதே!

கடவுளின் சித்தம் என்று கவிசொல்ல ஆரம்பித்தவுடனே ராஜகுமாரி சிறிது சிறிதாகத் தன் மனசைத் தேற்றிக்கொள்ள ஆரம்பித்துவிட்டாள். கவி தன் பேச்சை நிறுத்தும்போது அவள் உள்ளத்திலே புது நம்பிக்கை உதயமாகிவிட்டது. ஆனாலும் அவள் கண்களிலிருந்த ஈரம் இன்னும் உலரவில்லை.

கவி ஹியால்டே ராஜகுமாரியை விட்டுப் பிரிந்து கன்னி மாடத்தின் வெளிக் கதவைத் தாண்டும்போது அடிமைப் பெண் ஆஸ்டிரிடா வந்து வழி மறித்தாள்.

"கவி! ஏ, கவி ஹியால்டே!" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள் அவள்.

கவி நின்று அவளைப் பார்த்தான். அவளுக்குத் தன்னிடம் என்ன வேலை இருக்கமுடியும் என்று அவனுக்குத் தெரிய வில்லை. அவள் அன்று வரையில் அவனிடம் பேசியதே கிடையாது.

"ஓலாவ், ஹாரல்டினுடைய மகன், என்னைத் தேடிக் கொண்டு வரமாட்டானா? என்னை மணக்க விரும்பி வரமாட்டானா? அப்படி அவன் வருவானேயானால் நான் என்ன சொல்வேன் பதில் என்று நீ என்னைக் கேட்கமாட்டாயா?" என்று கேட்டாள் ஆஸ்டிரிடா.

பதில் சொல்லாமல் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான் கவி ஹியால்டே. அவள் தன் தலைமயிரை, தலைமேல் தங்கமுடி வைத்தது போல எடுத்துக் கட்டியிருந்தாள். காதிலே கனமான தொங்கட்டான்கள் அணிந்திருந்தாள் அவள். கைகளிலே விநோத வேலைப் பாடுகள் அமைந்த கங்கணங்கள் தரித்திருந்தாள். விலையுயர்ந்த பட்டாடை அணிந்திருந்தாள் அவள். மார்பிலே முத்துத் தாழ்வடங்கள் புரண்டு கொண்டிருந்தன. அவள் அழகிதான்- ஆனால் மனசிலே வேறு எதையோ எண்ணி இன்பக் கனவு கண்டுகொண்டிருந்த கிழக் கவி ஹியால்டே அவள் அழகையும் அலங்காரங்களையும் கவனிக்கவே இல்லை.

சிந்தனையில் ஆழ்ந்தவனாய் அவளைப் பார்த்தப்படியே சிறிது நேரம் நின்ற கவி ஹியால்டே கிளம்பினான், போக.

ஆஸ்டிரிடா சொன்னாள். நீ என்ன பதில் சொல்வாய். உன்னை மணக்க வேண்டி ஓலாவ் வந்தால் என்று ராஜகுமாரி இஞ்செகார்டை மாத்திரம் கேட்டாயே. இப்பொழுது? அதேபோல என்னையும் கேட்கவேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா? நீ ராஜகுமாரியிடம் ஓலாவைப்பற்றி இவ்வளவு நாளாகச் சொல்லி வந்ததை எல்லாம் நானும் உடன் இருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். என் மனம் அவனிடம் ஈடுபட்டுவிட்டது. அடிமைக்குப் பிறந்தவள்தான் நான்: எனினும் என் உடலிலும் ராஜ ரத்தம் ஓடுகிறது. என் தாய் உயிருடன் இருந்த வரையில் என்னை யாரும் அடிமைப் பெண்ணாக நடத்தியது கிடையாது. என் தாயார் போன பின் என்னை இந்த அரசகுமாரிக்குப் பணிப்பெண்ணாகவும் தோழியாகவும் நியமித்தார் என் தகப்பனார்- ஸ்வீடன் தேசத்து மன்னனின் மகள்தான் நானும் ஒருவிதத்தில், நான் உங்கள் ஓலாவுக்கு எவ்விதத்திலும் ஏற்றவள்தான் என்றே எண்ணு கிறேன். நான் அழகாயில்லையா? ராஜகுமாரியையும் விட நான் அழகி என்றுதான் பலரும் சொல்லுகிறார்கள். என் கண்ணாடியும் அப்படித்தான் சொல்கிறது. நீயே பார்-என் கண்கள், என் கேசம், என் கன்னங்கள் - எவ்விதத்தில் நான் ஓலாவக்கு ஏற்காதவள்

என்று சொல்ல முடியும்? நீ கவி. நியாயத்தை நன்கறிந்து பேசவேண்டியவன். நீயே சொல்.

இப்படி ஏதோதோ பேசிக்கொண்டே அடிமைப் பெண் ஆஸ்டிரிடா கன்னிமாடத்தைவிட்டு வெளியேறிக் கவி ஹியால் டேயைப் பின் தொடர்ந்தாள்.

ஆனால் கவியின் செவியிலே அவள் கூறிய வார்த்தைகள் எல்லாம் விழவேயில்லை. அவன் ஏதோ ஓலாவுக்கும் இஞ்செகார்டுக்கும் மணம் நடந்து விட்டதாக இன்பக் கனவு கண்டுகொண்டே நடந்துகொண்டிருந்தான்.

தலை முதல் கால்வரை கவசம் அணிந்து நிற்கும் வீரன் மேல் சிறு குழந்தை கூழாங்கல்லைப் பொறுக்கி எறிந்தால் அதை வீரன் கவனிப்பானா? அவசர அலுவலாக வழியோடு போய்க் கொண்டிருக்கும் வழிப்போக்கன் மரக்கிளையிலே உட்கார்ந்து கூவிக்கொண்டிருக்கும் குருவியின் கூக்குரலைப் பாராட்டு வதற்குத் தாமதிப்பானா?

ஜனங்களின் இஷ்டம்

கிழக் கவி ஹியால்டே ராஜகுமாரியினுடைய மனசை அறிந்து கொண்டதுடன் திருப்தி அடைந்து விடவில்லை. மறுநாளே ராஜகுமாரியின் தகப்பனான ஸ்வீடன் தேசத்து அரசனைத் துணிச்சலாக நெருங்கி இது விஷயமாகக் கேட்டு விட்டான்-அவன் குமாரியை, நார்வே தேசத்து அரசன் ஓலாவ், ஹாரல்டினுடைய பிள்ளை ஓலாவுக்கு மணம் செய்துதர முடியுமா என்று. அப்பொழுது அரசனுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! அரசன். இவ்வளவு விரோதமும் வெறுப்பும் துவேஷமும் ஏன், ஏதனால் என்று கவிக்குப் புரியவில்லை ; ஆச்சரியமாக இருந்தது. ராஜ குமாரி தன் தகப்பனாரைப்பற்றிச் சொன்னது உண்மைதான் என்று அறிந்து வியப்படைந்தான் கவி.

எனினும் இந்தத் திருமணம் நடந்தே தீரவேண்டும். கடவுளின் சித்தம் அது தான் என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான் கவி.

சில நாட்களுக்குப் பிறகு நார்வேயின் மன்னன் ஓலாவிட மிருந்து ஸ்வீடன் தேசத்து மன்னனுக்குச் சமாதான ஓலை வந்தது. தூதுவர் மூலம். இது தெய்வச்செயல், இந்த சமாதான தூதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று கவி ஹியால்டேக்கு.

தூதனைச் சந்தித்து அவனிடம் தன் மனசில் இருந்ததைச் சொன்னான் கவி. ஸ்வீடனுக்கும் நார்வேக்கும் இடையே அமைதி நிலவ

வேண்டுமானால், நார்வேயின் மன்னன் ஸ்வீடன் தேசத்து ராஜகுமாரியை மணப்பதை விடச் சிறந்த வழி கிடையாது என்று கவி தூதனுக்கு எடுத்துச் சொன்னான்.

தூது வந்தவனுக்கும் இது சரியான யோசனையாகவே பட்டது. ஆனால் தான் முன்பின் பார்த்திராத ஒருவனை ராஜகுமாரி மணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாளா என்று ஆச்சரியப்பட்டான் தூதன்.

கவி ஹியால்டே அதுவரையில் நடந்ததை எல்லாம் தூதனிடம் கூறினான். மாரிக்காலம் வரையில் அப்ஸலாவில் தங்கி ஜனங்களின் சபையில் இந்தத் திருமணம் விஷயமாக அறிவிப்பதாகவும், கூடுமானால் அரசனின் சம்மதத்தைப் பெற முயலுவதாகவும் தூதன் வாக்களித்தான்.

இவ்வளவுதான் கவி வேண்டியதும், உடனேயே அவன் அப்ஸலாவை விட்டு வெளியேறி விட்டான். ஸ்வீடன் தேசம் முழுவதும் ஊர் ஊராக, வீடு வீடாக அலைந்து திரிந்தான். அவன் வனாந்திரங்களுக்கெல்லாம் சென்றான். மாரிக் காலத்தில் ஜனங்களின் சபை அப்ஸலாவில் கூடுவதற்கு முன் நாடெங்கும் ராஜகுமாரி இஞ்செகார்டு நார்வே தேசத்து மன்னன் ஓலாவை மணக்க ஆசைப்பட்டாள் என்றும், அவளிஷ்டப்படி திருமணம் நடந்துவிட்டால் அவனுக்கும் நார்வேக்கும் இடையே நிரந்தரமாக அமைதியாகிவிடும் என்றும் கவி ஹியால்டே மூலம் எல்லோரும் அறிந்துகொள்ள மாட்டார்கள். அவளுக்கேற்றவள் அவன், அவனுக்கேற்றவள் அவன், என்று எல்லோரும் சொல்லும்படியாக இரண்டு பேருடைய புகழையும் பிரதாபங்களையும் சந்தர்ப்பங் கிடைத்த போதெல்லாம் பாடினான் கவி. ஏழைக் குடியானவர் களும் பணக்காரப் பண்ணையாள்களும், கடலோடிகளும், நாடோடிகளும், விறகு வெட்டிகளும், சோம்பேறிகளும் வாய் ஓயாமல் இஞ்செகார்டின் காதலைப் பற்றிய பாட்டுகளைப் பாடிக்கொண்டே யிருந்தார்கள். இஞ்செகார்டு தன் காதலன் ஓலாவை எண்ணிப்பாடுகிற பாவத்திலே கவி ஹியால்டே பல அற்புதமான பாட்டுகளைக் கட்டியிருந்தான். அவை நாடெங்கும் பரவி விட்டன. ராஜகுமாரியின் காதல் பூர்த்திக்காகச் சாதாரண மக்கள் முதல் பெரிய பெரிய இடத்துப் பிரபுக்கள் வரையில் எல்லோரும் உதவி செய்வதாக சபதம் கூறிக் கொண்டார்கள். தவிரவும் இந்த மணத்தால் நாட்டிலே அமைதி நிலவும், சுபிஷம் அதிகரிக்கும் என்ற ஞாபகத்திலே பலர் இதை முடித்துவைப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு கிளம்பினார்கள்.

ஒரு கவியினுடைய கவிதைகள் வேறு எந்த விஷயத்திலும். வேறு எந்தத் தேசத்திலும் இவ்வளவு பெரிய வெற்றி பெற்றதில்லை என்பது நிச்சயம்.

ராஜகுமரியின் கல்யாண விஷயமாக ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களை வற்புறுத்தினார்கள்.

மாரிக் காலத்திலே ஸ்வீடன் தேசத்து ஜனங்களின் சபை கூடிற்று. சபையிலே நார்வே தேசத்து மன்னன் ஓலாவின் தூதன் சமாதான கோரிக்கையையும், திருமணக் கோரிக்கை யையும் சமர்ப்பித்தான்.

திருமணத்துக்குச் சம்மதிக்கமுடியாது, முடியாது என்று கோபமாகக் கத்தினான் ஸ்வீடனின் மன்னன்.

ஆனால் மன்னன் குரல் அந்த சபையிலே ஓங்கவேயில்லை. மக்கள் சமாதானம் வேண்டினார்கள். அச்சமா தானம் நிலைப்பதற்காக ராஜகுமாரி, மன்னன் ஓலாவை மணக்கவேண்டும் என்று அவர்கள் வேண்டினார்கள். தவிரவும் ராஜகுமாரி இஞ்செகார்டு ஓலாவைக் காதலித்தாள் என்பது நாடெங்கும் தெரிந்த விஷயமாகவும் இருந்தது.

நம் ராஜகுமாரிக்கு ஏற்ற மணவாளன் வேறு யார் கிடைக்கப் போகிறான்? என்றார்கள் ஜனங்கள்.

இந்தத் திருமண ஏற்பாட்டை அரசன் ஒப்புக்கொள்ளா விட்டால் நாங்கள் புரட்சி செய்வோம் என்று சில வீரர்கள் உருவிய கத்திகளுடன் சபதம் செய்தார்கள்.

மன்னன் என்ன செய்ய முடியும்? வேறுவழி அறியாமல், தன் மகளை நார்வே தேசத்து மன்னனுக்கு மணஞ் செய்து தருவதாக வாக்களித்தான், ஜனங்களின் சபையிலே. ஊரெல்லாம் நாடெல்லாம் ஜனங்கள் காணாது கண்டது போலக் கொண்டாடிக் குதூகலித்தார்கள்.

இப்படியாக இஞ்செகார்டினுடைய காதலை நிறைவேற்றி வைக்க, கவி ஹியால்டேயின் தூண்டுதலின் பேரில், ஜனங்களே உதவிசெய்ய முன்வந்தார்கள். ஆனால் அடிமைப் பெண் ஆஸ்டிரிடாவைப் பற்றியும் அவள் காதலைப் பற்றியும் கவலைப்பட யார் இருந்தார்கள்? அவளுக்கு உதவிசெய்ய யாரும் முன் வரவில்லை.

ஆனால் அடிமைப்பெண் ஆஸ்டிரிடா கவலைப்பட வில்லை, நம்பிக்கை இழந்து விடவில்லை. தெம்பாகவே இருந்தாள், தன் ஆசை நிறைவேறிவிடும் என்று.

அவள் ஆத்மா கடல்போன்றது. அவள் உள்ளத்தில் தெம்பும் நம்பிக்கையும் இருந்தன. இன்பத்தின் லக்ஷியம் எட்டாததாகத் தோன்றவில்லை அவளுக்கு.

கங்கா ஹல்லா

நார்வே தேசத்திலே கங்க ஹல்லா நகரிலே பழைய காலத் துக்கோட்டை ஒன்றிருந்தது. அது எவ்வளவு காலத்துக்குமுன் எழுப்பிய கோட்டை என்று யாரும் கணக்கெடுத்துச் சொல்ல முடியாது. அதன் உயரமான மதில் சுவர்களெல்லாம் காலத்தின் கரைப்பட்டுக் கருத்திருந்தன–வீரர்களின் ரத்தக்கரை பட்டுப் பல இடங்களில் சிவந்திருந்தன. ஓங்கி அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் மேக மண்டலத்தை எட்டித் தொட்டுச் சல சலத்தன–அவை அந்தக் கோட்டையைப்போலவே பழைய காலத்தவை.

கோடை காலத்தின் ஆரம்பத்திலே, ஹாரல்டினுடைய மகன், ஓலாவ், கங்க ஹல்லா கோட்டைக்கு வந்தான். திருமணத்துக்குத் தயாராக வந்தான். கலியாணத்துக்கு ஆக வேண்டிய காரியங்களை எல்லாம் செய்துகொண்டு தயாராகத் காத்திருந்தான். பிரபுக்களும் வீரர்களும் திருமண வைபவத்திலே கலந்துகொள்வதற்குத் தயாராக வந்து காத்திருந் தார்கள். பொக்கிஷ அறையிலே பட்டும் நூலும் வெள்ளியும் தங்கமும் முத்தும் மணிகளும் ஏராளமாகக் குவிந்திருந்தன. பண்டக சாலையிலே உணவுப்பொருள்கள் நிரம்பியிருந்தன.

திருமணத்துக்கு எல்லாம் தயாராக இருந்தது.

இன்னும் ஸ்வீடனிலிருந்து மணப்பெண் வந்து சேரவில்லை. அதுதான் தாமதம்.

இரண்டு வாரங்கள் காத்திருந்தார்கள்; இன்னும் மணப் பெண் வந்து சேரவில்லை.

மன்னன் ஓலாவ் மனசிலே என்ன இருந்ததோ? யார் சொல்ல முடியும்? அழகி இஞ்செகார்டு வரவில்லையே என்று அவனுக்கு ஏமாற்றந்தானோ என்னவோ? ஆனால் அவன் தன்னுடைய ஏமாற்றத்தை வெளியே காண்பித்துக் கொள்ள வில்லை ; மிகவும் சாந்தமாகவே இருந்தான். அவள் எனக்கு ஏற்றவளாக இருந்தால், மேலும் அது கடவுள் சித்தமாகவும் இருக்குமானால், தானே வருவாள். அவசரம் என்ன? என்று அவனைக் கேட்டவர்களுக்குப் பதில் அளித்தான்.

கோடை முற்றிற்று. வயல்களிலெல்லாம் அறுவடையாகி விட்டது.

புஷ்பச் செடிகள் தளிர்ந்தன. நாளடைவில் பூத்துக் குலுங்கின. மரங்கள் காய்த்தன. காய்கள் கருத்துப் பழுத்தன.

பூக்கள் வாடின. இலைகள் உதிர்ந்தன. இரவுகளில் குளிர்ந்த காற்று வீசத் தொடங்கிற்று.

மன்னன் ஓலாவ் தன் காதலி–ஸ்வீடன் தேசத்து ராஜகுமாரி – இஞ்செகார்டை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

கவி ஹியால்டேயும் அந்தத் திருமணத்தை எதிர்நோக்கி ஆவலுடன் கங்க ஹல்லாவில்தான் காத்திருந்தான். அரசன் ஓலாவையும் விட அதிக ஆவலுடன் கவி இஞ்செகார்டின் வரவை எதிர் நோக்கி இருந்தான்.

அவனுக்குக் கோட்டையில் வீரர்களுடனும் பிரபுக் களுடனும் தங்குவதற்குப் பிடிக்கவில்லை. சாதாரண ஜனங் களுடன் தினம் காலையிலும் மாலையிலும் ஆற்றங்கரைக்குச் சென்று வெகுநேரம் ஸ்வீடன் தேசத்துக் கப்பல்கள் வரவேண்டிய திசை நோக்கி நிற்பான். ஆரம்பத்தில் பலர் அவனுடன் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். நாளடைவில் அவர்கள் நம்பிக்கையிழந்து பின்தங்கி விட்டார்கள்.

சில சமயம் கவி ஹியால்டே கோயிலுக்கு போவான். அங்கே பிரார்த்தனை செய்வான். தனக்கு எதுவும் வேண்டும் என்று அவன் என்றுமே பிரார்த்தனை செய்வதில்லை. இப்பொழு தெல்லாம் ஈசன் மனமுவந்து ஓலாவுக்கும் இஞ்செகார்டுக்கும் திருமணம் நடக்க வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

சில சமயம் ஓலாவிடம் போய் உட்கார்ந்துகொண்டு ராஜகுமாரி இஞ்செகார்டைப்பற்றிக் கவிதை ததும்பும் வாக்கியங்களில் பேசுவான். தான் இஞ்செகார்டைச் சந்தித்த நாள் முதல், ஓலாவைத் தான் காதலிப்பதாக அவள் வாய் திறந்து சொன்னநாள் வரையில் நடந்ததை எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லுவான்.

ஒருநாள் கவி ஹியால்டே சொன்னான்: "ஓலாவ்! நீ அதிர்ஷ்டசாலி. எவ்வளவு அதிர்ஷ்டாலி என்பதை இப்பொழுது நீ அறிய மாட்டாய்! அப்புறம் அறிந்து இக் கிழக் கவி சொன்னது எவ்வளவு உண்மை என்று எண்ணி ஆனந்திப்பாய்!"

வேறு ஒருநாள் ஓலாவிடம் சொன்னான்: 'இதோ பார் ஓலாவ்! அவள் உனக்குக் கிடைக்கவேண்டும் என்று நீ கடவுளைப் பிரார்த்தனை செய். நீ பக்தியில் சிறந்தவன், உன் பக்திக்கு ஏற்ற துணையாவள் அவள் ! அவள் உன் பக்கத்திலில்லாவிட்டால் உன் பக்தி பலித்தாகாது.

"நீ உலகையே வென்று ஆளப் பிறந்தவன். அவள் உன்னை வென்று ஆளப் பிறந்தவள். அவளை மட்டும் நீ அடையாமல் இருந்தாயோ நீ

பரிபூரணமான மனிதனே ஆகமாட்டாய்" என்றான் ஒரு தரம்.

"வாழ்க்கையிலே, பக்திப் பாதையிலே, வெற்றி வழியிலே உனக்கு உற்ற துணையாவாள் அவள்" என்பான் கவி.

அவனுடைய வார்த்தைகள் ஓலாவக்கு இன்பமாக இருந்தன.

"நீ யார்?''

கோடை ஒரு வழியாக முடிந்துவிட்டது. இலையுதிர் காலமும் வந்தது மணப்பெண் வந்தபாடில்லை. திருமணத்துக் காகவென்று கங்க ஹல்லாவில் வந்து காத்திருந்த வீரர்களும் பிரபுக்களும் ஒருவர் பின் ஒருவராகக் கிளம்பிவிட்டார்கள். எல்லோரும் போனபிறகு கடைசியில் ஒருநாள் கிழக் கவி ஹியால்டேயும் கிளம்ப வேண்டியதாயிற்று. அவன் மனம் என்ன பாடுபட்டது அப்படிக் கிளம்பும்போது என்று சொல்லி முடியாது. ஆனால் அவன் கிறிஸ்துமஸ் பண்டிகைக்குத் தன் தேசமாகிய – ஐஸ்லாந்துக்குப் போயாக வேண்டும். கிளம்பினான். ஓலாவிடமிருந்து பிரிய மனசில்லாமலே.

ஆற்றோடு போய், ஆறு கடலில் கடக்கும் இடத்தை அடைந்த போது அவன் முன் ஸ்வீடன் தேசத்து ராஜகுமாரி இஞ்செக்கார்டின் கப்பல் எதிர்ப்பட்டது. அது இஞ்செகார்டின் கப்பல்தான் என்பது அவனுக்குத் தெரிந்ததும் தன் கப்பலை அதன் அண்டையில் கொண்டு போய் நிறுத்தச் சொன்னான்.

"அழகி இஞ்செகார்டை மீண்டும் ஒருதரம் பார்க்கப் போகிறேன் பார்ப்பதற்கில்லை என்று எண்ணியிருந்த நான் மீண்டும் பார்க்கப் போகிறேன். நான் அதிர்ஷ்டசாலிதான்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டே ஸ்வீடன் தேசத்துக் கப்பல் மேல் தளத்தில் கால்வைத்தான்.

கிழக் கவி ஹியால்டே அந்த சந்தோஷத்தால் உருமாறி விட்டான். அவன் நடையிலே வாலிப முறுக்கேறிற்று. வயசால் வளைந்து குறுகிய அவன் முதுகு நிமிர்ந்தது; மங்கிய அவன் கண்கள் ஒளி வீசின.

ராஜகுமாரி எங்கே? என்னை அவளிடம் அழைத்துப் போ என்று சொன்னவுடன் அழைத்துப் போக வந்த ஒரு வேலைக்காரச் சிறுமிக்கு தன் மனசிலிருந்து ஆனந்தம் காரணமாக ஒரு விலையுயர்ந்த மோதிரத்தைப் பரிசாக அளித்தான்.

என் லஷியம் பூர்த்தியாயிற்று. என் வாழ்க்கையும் பயனுள்ள தாயிற்று. இந்தத் திருமணம் நடந்தேற வேண்டும் இந்தத் திருமணம் நடந்தேற

வேண்டும் என்று நான் பட்ட பாடெல்லாம் ஈசனே அறிவான்! வெற்றி! வெற்றி! வெற்றி! என்று கூவிக்கொண்டே சிறுமியைப் பின் தொடர்ந்தான் கவி ஹியால்டே.

ஆனால் கப்பலின் யசமானி ஸ்தானித்தில் – ராஜகுமாரி இஞ்செகார்டு இருக்கவேண்டிய இடத்தில் வேறு ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் அவன் திடுக்கிட்டுத் தயங்கினான்.

அவன் எதிரே நின்றவள் அழகிதான். ஆனால் அவள் இஞ்செகார்டு அல்ல: இஞ்செகார்டு

எங்கே? இந்தக் கப்பலில் மணப்பெண்ணாக அவளல்லவோ வந்திருக்க வேண்டும்?

ஆனால் அவன் எதிரே அப்பொழுது நின்றவள் மணப்பெண் போலத்தான் ஆடையுடுத்து அலங்கரித்துக் கொண்டிருந்தாள். ராஜகுமாரி போலத்தான் நடை பாவனைகளில் இருந்தாள்.

தன் குழப்பத்தை அடக்க மாட்டாமல் ஆவலுடன் கேட்டான் கவி ஹியால்டே: நீ யார்?

என்னைத் தெரியவில்லையா ஹியால்டே, உனக்கு? ஓலாவ், ஹாரல்டினுடைய மகனைப்பற்றி நீ எனக்கு. ஸ்வீடனின் அரசனின் குமாரிக்கு, எவ்வளவோ கதைகள் சொல்லியிருக் கிறாயே! என்னைத் தெரியவில்லையா உனக்கு? என்றாள் அழகி.

ஓலாவைப்பற்றி நான் ஓர் அரசகுமாரியிடம் சொன்ன துண்டு. அவள் பெயர் இஞ்செகார்டு என்றான் கவி ஹியால்டே.

"என் பெயர்தான் இஞ்செகார்டு."

"இருக்க முடியாது! உன் பெயர் இஞ்செகார்டாக இருக்கலாம். ஆனால் நான் சொல்லுகிற இஞ்செகார்டு அல்ல நீ. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? ஸ்வீடன் தேசத்து அரசன் ஓலாவை ஏமாற்றத் துணிந்துவிட்டானா?" என்று கோபமாக கேட்டான் கவி ஹியால்டே.

"இல்லையே! அவர் வாக்களித்தப்படி தன் மகளை ஓலாவிடம் அனுப்பியிருக்கிறார்" என்றாள் அந்த அழகி.

கிழக் கவி ஹியால்டேக்கு அதற்குமேல் தாங்கவில்லை. தன் வாளை உருவி அந்தப் போலி ராஜகுமாரியை வெட்டி வீழ்த்தி விடலாமா என்று ஆத்திரம் வந்தது. வெகுவாகப் பாடுபட்டு அடக்கிக் கொண்டான்.

"கடைசி முறையாகக் கேட்கிறேன், சொல், நீ யார்?" என்றான்.

"உள்ளே வந்து உட்கார், சாவகாசமாகச் சொல்லுகிறேன்" என்றாள் அவள்.

அடிமைப் பெண்ணின் தைரியம்

என்னைத் தெரியவில்லையா ஹியால்டே? என்று கிழக் கவி ஹியால்டேக்கு எதிரில் உட்கார்ந்துகொண்டு, அவனை உற்றுப் பார்த்துக்கொண்டே கேட்டாள் போலி ராஜகுமாரி.

கவி ஹியால்டே சிறிதுநேரம் பதில் ஒன்றும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான். பிறகு நீண்டதோர் பெருமூச்சுவிட்டுக் கேட்டான்; ஏன் இஞ்செகார்டு வரவில்லை ? அவள் வர இயலவில்லையா? அவளுக்கு வர மனசு இல்லையா? அல்லது அவள் உயிர் இழந்து மாண்டுவிட்டாளா? அவள் வராததற்குக் காரணம்தான் என்ன? அவளுக்குப் பதில் நீவந்த காரணம் என்ன? என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான்.

போலி ராஜகுமாரி – ராஜகுமாரிக்குப் பதில் வந்திருந்தவள் பெருமூச்சு விட்டாள். ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன் கேள் என்றாள். சிறிது நேரம் தயங்கினாள். பிறகு நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தாள்.

கோடைகாலம் முழுவதும் ஸ்வீடன் தேசத்து அரசன் நகரிலேயே இல்லை. வேட்டையாடவும், சண்டை போடவும் சென்று நாலா பக்கமும் அலைந்துகொண்டிருந்தான். வேட்டை யிலும், சண்டையிலும் அவனுக்கு வெற்றிக்குமேல் வெற்றி யாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அவனுடைய வெற்றிப் பிரதாபங்களின் புகழ் கன்னிமாடத்தில் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த இஞ்செகார்டின் காதில் விழுந்தது. அவள் தோழிகள் சதா அவளுடைய தகப்பனாரின் புகழைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி ஒருநாள் இஞ்செகார்டு தன் தோழிகளுடன் பேசிக் கொண்டிருக்கையில், தன்னையும் அறியாமலே மனசில் கசப்புடன் சொன்னாள்: என் தகப்பனாரின் புகழ் அவர் ஆளும் ஸ்வீடன் தேசம் பூராவும் பரவி யிருக்கிறது – வாஸ்தவம்தான். ஆனால் நார்வே தேசத்து வாலிப மன்னன் ஒலாவின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறதே! என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

அவள் இப்படிச் சொல்லிப் பெருமூச்சு விட்டதைக் கேட்டுக் கொண்டே யாரும் அறியாமல் கன்னிமாடத்திற்குள் வந்து விட்டார் அரசர். அவர் ஊர் திரும்பிவிட்டார் என்கிற செய்தியே அது வரையில் அவர் மகளுக்குத் தெரியாது. அவள் தன் மனசிலிருந்ததை யதார்த்தமாகச் சொல்லிவிட்டாள்.

தன் காதல் மணவாளனுக்கும் தனக்கும் இடையே தன் தகப்பனாரின் பழைய விரோதம் நிற்பதுபற்றி அவளுக்குக் கோபம் இருந்தது என்னவோ, உண்மைதான்.

"ராஜகுமாரி சொன்னதைச் செவியுற்ற மன்னனுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. நீ என்ன பைத்தியமா? உன் சித்தம் ஏன் இப்படி யாகிவிட்டது? அந்த ஓலாவ் பைத்தியம் உனக்கெப்படிப் பிடித்தது?'' என்று இரைந்தார்.

‘‘ராஜகுமாரி இஞ்செகார்டு இதற்கு என்ன பதில் சொல்வது என்றறியாமல் எழுந்து இரண்டடி பின்னுக்கு நகர்ந்து, நடுங்கி கொண்டே நின்றாள்.

"அரசனுடைய கோபம் வந்தமாதிரியே திடீரென்று மாறி மறைந்தது. என் உயிர்க்குயிராகிய என் மகளை நான் என் பரம விரோதிக்கு மணம் செய்துகொடுப்பது எப்படிச் சாத்திய மாகும்? அந்த ஓலாவோ நம்முடைய குடும்பத்துக்குப் பரம விரோதி. அவனுடன் நீ சந்தோஷமாக இருப்பதென்பது சாத்தியமில்லாத காரியம். நீ வேறு ஒரு தேசத்து ராஜாவைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கலாம், கவலைப்படாதே. நார்வே தேசத்து அரசனைப்பற்றி எண்ணுவதை விட்டுவிடு என்றார்.

"ராஜகுமாரி இஞ்செகார்டு முகம் சிவக்கத் தயங்கித் தயங்கித் பதில் அளித்தாள்: தன் பிரஜைகள் அதை விரும்புகிறார்கள். தான் விரும்பவில்லை என்று.

அரசன் ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்தான்.

இஞ்செகார்டு மேலும் சொன்னாள்: தவிரவும் ஜனங்களுக் கெதிரில் என்னை அவருக்கு மணம் செய்து தருவதாக வாக்களித்து விட்டு அந்த வாக்கை இப்பொழுது மீறுவது எப்படி

ஸ்வீடன் தேசத்து அரசன்–அவள் தகப்பன்–உரக்கச் சிரித்தார்: நான் என் வாக்கை காப்பாற்றுவேன் என்று எண்ணி அந்தப் பயல் காத்திருக்கட்டும் – திருமணத்துக்கான ஏற்பாடு களை எல்லாம் செய்து வைத்துக்கொண்டு காத்திருக்கட்டும். ஏமாறட்டும் பயல்! என் வாக்கை மீறுவதற்கு யுக்தி சொல்லித்தர எனக்கு மந்திரிமார் இருக்கிறார்கள்: வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து உன் எதிரிலேயே யுக்தி கேட்கிறேன் என்று சொல்லி அரசர் மந்திரிமாரை அழைத்து வர ஆளனுப்பினார்.

"மந்திரிமார் வந்தார்கள். விஷயத்தைக் கேட்டார்கள். அரசன் வாக்கைக் காப்பாற்ற விரும்பவில்லை; அதற்கு என்ன வழி என்று கேட்டவுடன் பிரமித்துப்போய் ஒன்றும் சொல்லத் தெரியாமல் திரும்பிவிட்டார்கள்.

பேடிகள்! மந்திரிகளாக இருக்க லாயக்கில்லாதவர்கள்' என்று அவர்களைத் தூற்றினார் அரசர்.

இப்படி அரசர் கோபமாய்க் குமுறிக்கொண்டிருக்கும்போது அரசகுமாரிகள் தோழிகளில் ஒருத்தியான அடிமைப்பெண் ஆஸ்டிரிடா ஒரு வார்த்தை சொன்னாள். நீ உன் மகளை ஓலாவுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக வாக்களித்தாய். நானும் உன் மகள்தான்–அடிமைக்குப் பிறந்தவள் என்றாலும் உன் மகள் தான். இஞ்செகார்டுக்குப் பதில் என்னை அனுப்பேன் என்றாள். அவள் இதை விளையாட்டாகத்தான் சொன்னாள்.

ஆனால் அவள் இப்படிச் சொன்னதைக் கேட்டவுடனே ராஜகுமாரி இஞ்செகார்டினுடைய முகம் வெளுத்தது. அவள் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டாள்.

ஆனால் அரசன் சபாஷ் என்றார். நீ சொன்னதே சரியான யோசனை என்றார். உன் பெயர் இனி ஆஸ்டிரிடா அல்ல. நீதான் இஞ்செகார்டு இனிமேல் என்றார். ராஜகுமாரிக்காகக் காத்திருக்கும் அந்தப் பயல் அடிமைப்பெண்ணை மணந்து சுகிக்கட்டும் என்றார்.

இதற்குள் ராஜகுமாரியை மூர்ச்சை தெளிவித்து விட்டார்கள். அவள் எழுந்து அழாத குறையாகச் சொன்னாள்: நார்வே தேசத்து மன்னனுக்கு அநீதி இழைத்தாயானால் பின்னர் நீயும் நானுந்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்றாள்.

அரசர் அதைக் காதில் வாங்கவேயில்லை. கப்பல் தயாராகட்டும் மணப்பெண்ணுக்கு வேண்டியதை எல்லாம் தயார் செய்யுங்கள் நார்வே தேசத்து ராணி நாளைக்கே கிளம்பட்டும் என்று உத்தரவு விட்டார்.

கடைசித் தடவையாக நான் ஓலாவைக் காதலிக்கிறேன் என்று சொல்லிப் பார்த்தாள் அரசகுமாரி. ஆனால் அரசர் அதை எல்லாம் கவனிக்கவேயில்லை.

நிச்சயமாகத் தனக்குப் பதில் தன் தோழிதான் போகப் போகிறாள் என்று நிச்சயமான பின் இஞ்செகார்டு தன் தங்கை அடிமைப் பெண் ஆஸ்டிரிடாவினிடம் சொன்னாள். நீ என் தங்கை. அடிமை வயிற்றில் தான் பிறந்தாய் எனினும் கொடுத்த வைத்தவள் நீ. நார்வே தேசத்தின் அரசன்; அழகிலே நீ அவருக்கு ஏற்றவள்தான். மற்ற விதங்களில் உன்னை மணந்து கொண்டது பற்றி அவர் வருந்தாதபடி நீ நடந்து கொள் என்றாள். மணப் பெண்ணை அவள் தன் கையாலே அலங்கரித்துச் சிங்காரித்தாள். தன்னிடமிருந்த பொன், மணி, பட்டு, எல்லாவற்றையும் தன் அடிமைப்

பெண்ணுக்களித் தாள்; அவள் ஏழையாகப் போகக்கூடாது; ராஜகுமாரியாகப் போகவேண்டும் காதலனை அடைய என்று.

மறுநாள் கப்பல் கிளம்பிவிட்டது-மணப் பெண்ணுடன்.

"நான் வரமாட்டேன்"

போலி ராஜகுமாரி -அவளை இனி அவளுடைய உண்மைப் பெயராலேயே அழைப்போம்-அடிமைப்பெண் ஆஸ்டிரிடா தன் கதையை முடிக்கும் வரையில் மௌனமாக உட்கார்ந் திருந்தான் கிழக் கவி ஹியால்டே, கதை முடிந்தபின் எழுந்து மௌனமாகவே நடந்துவிட முயன்றான்.

ஹியால்டே கேட்டான்: நீ யார் என்பதை ஓலாவிடம் தெரிவிக்கப் போகிறயா?

ஆஸ்டிரிடாவின் முகம் சிவந்தது. அவராகத் தெரிந்து கொள்ளாவிட்டால், நான் ஏன் சொல்லி, என் சந்தோஷைத்தை நானாகவே கெடுத்துக் கொள்ளவேண்டும்? தவிரவும் நானும் ஓலாவைக் காதலிக்கிறேன் என்பதை நீ மறந்துவிடாதே! என்றாள்.

கவி ஹியால்டே பெருமூச்சு விட்டான். அவன் சொன்னான். இதோ பார். ஓலாவ் சாதாரண மனிதன் அல்ல. அவன் புனிதமான உள்ளம் உடையவன். பொய்யும் ஏமாற்றும் அவனை அணுக மாட்டா. நீ பொய்சொல்லி, அவனை ஏமாற்றி, அவனை அடைய முடிந்தால் அதற்கான கஷ்டத்தை நீயே, தானாகவே படுவாய்.

உம் என்றாள் ஆஸ்டிரிடா.

நார்வேயின் மன்னன், வீரன், பக்தி மிகுந்தவன். அவனை ஏமாற்றத் துணிவதற்கு முன் நீயே மீண்டும் தீர யோசித்துப் பார்க்க வேண்டியது அவசியம். யோசித்துப் பார் என்றான் கவி.

கவியின் வார்த்தைகளும் பாவமும் ஆஸ்டிரிடாவைத் துன்புறுத்தின; பயமுறுத்தின; என்னையோ, இஞ்செ கார்டையோ நேரில் பார்த்து அறிந்தவர்கள் கங்க ஹல்லாவில் உன்னை தவிர வேறு யாரும் கிடையாது. நான் பெண். காதலுக்காக வேறு புனிதமான எதையுமே தியாகம் செய்து விடத் தயாராக இருப்பவள் நான். என் காதல் எப்படிப்பட்டது என்று நீ அறியவில்லை . நீ என்னுடன் கங்க ஹல்லாவுக்கு வா. நீ சொல்லு அரசர் ஓலாவிடம் அரசர் ஓலாவாகத் தெரிந்து கொண்டால் ஒழிய, நான் போய் அவரிடம் உண்மையை ஒப்புக்கொள்வது என்பது சாத்தியம் அல்ல. அதற்கு

என் மனம் இடங்கொடுக்காது. நீ என்னுடன் வா, வந்து ஓலாவிடம் சொல் உண்மையை. விதி விட்ட வழி விடட்டும்.

கவி ஹியால்டே கோபமாகச் சொன்னான்: நீ ஏற்கெனவே ஓலாவுக்குப் பெருந்தவறு செய்துவிட்டாய். இன்னும் பெருந் தீங்கு இழைத்துவிட்டு அவஸ்தைப்படப் போகிறாய். உன் விதியினின்றும் தப்ப என்னைக் கேடயமாக நீ உபயோகிக்க நான் சம்மதிக்க மாட்டேன். தவறு செய்தால் துன்பப்படுவாய்; அவ்வளவுதான் நான் சொல்லக் கூடியது. செய்வது எதையும் யோசித்துச் செய் என்று இரைந்தான்.

நினைக்க நினைக்கக் கோபம் ஊறிற்று கவி ஹியால்டேக்கு. உன் சகோதரிக்கே போட்டியாக முளைக்க நீ துணிந்தாய்! என் மாபெரும் காவியத்தை அழித்துவிட்டாய். உனக்கு உதவி செய்ய, நீ செய்துவிட்ட: காரியத்தின் பலனை நீ அனுபவிக் காமல் தப்புவதற்கு என் உதவியைக் கோராதே! நான் வரமாட்டேன் உன்னுடன். கங்க ஹல்லா திரும்பமாட்டேன் இனி எக்காரணத்துக்காகவும்! போ! உன் விதி விட்ட வழியா கட்டும்! போ! என்று சொல்லிவிட்டுக் கோபமாக வெளியேறி கிழக்கவி ஹியால்டே தன் படகில் ஏறித் தன் தேசமாகிய ஐஸ்லாந்து நோக்கிப் படகைச் செலுத்திச் சென்றான்.

அடிமைப் பெண் ஆஸ்டிரிடா வெகுநேரம் தனிமையில் சிந்தனையில் ஆழ்ந்தவளாக உட்கார்ந்திருந்தாள். கவி ஹியால்டே சொன்னதையும் தன் மனசில் இருந்ததையும் எண்ணி எண்ணிச் சிந்தித்தாள். ; சிந்திக்கச் சிந்திக்க அவளுக்கு இன்பமே பெருகிற்று. எது எப்படியானாலும் என்ன? இன்பம் என்கிற லஷியத்தை எட்டித்தொட இருந்தாள். அவள் அது வரையில் இன்பத்தையே அறியாதவள் எவ்வளவோ கஷ்டப் பட்டவள். இந்தச் சமயத்தில் காதலைத் துறந்து, இன்பத்தைத் துறந்து உண்மையை ஒப்புக்கொண்டு ஓடிவிடு என்று கவி சொன்னது என்னவோ பைத்தியக்காரத் தனமாகப்பட்டது, அவளுக்கு!

திருமணம்

கங்க ஹல்லாத் துறையிலே எவ்வளவோ திரை கடல் ஓடிய கப்பல்கள் பல தேசத்துத் தன தானியங்களை வாரிக்கொண்டு வந்து நிற்கின்றன. அவற்றினிடையே ஒருநாள் வந்து நின்றது ஸ்வீடன் தேசத்து ராஜகுமாரியின் கப்பலும், ஜனங்கள் எல்லோரும் மற்ற லாபகரமான தொழில்களையும்கூட விட்டு விட்டுத் திருமண விழாக் கொண்டாடத் தயாரானார்கள்.

ஆற்றங்கரை ஓரமெல்லாம் நொடியில் பந்தலும் தோரணமு மாக அலங்கரிக்கப்பட்டது. பட்டும் பட்டாடையுமாக அலங்கரித்துக் கொண்டு தங்கள் ராணியை வரவேற்றனர். களிகூத்தாடும் முகங்களுடன் கங்கா ஹல்லா வாசிகள். ராணியைப் பார்த்தவுடன் ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டது. ஓலாவ் கோடை முழுவதும், இலை யுதிர் காலம் முழுவதும் இந்த அழகிக்காகக் காத்திருந்தது சரிதான் என்று எல்லோரும் ஏகமனதாக அபிப்பிராயப்பட்டார்கள்.

அரண்மைமனைத் துறையிலே தன் காதலியை வரவேற்கத் தயாராக நின்றான் ஓலாவ். அவன் கண்களிலே காதல் ஒளி வீசிற்று. அவன் வாய், கவி ஹியால்டே இஞ்செகார்டைப் பற்றிப் பாடிய பாட்டுகளை எல்லாம் முணு முணுத்தது. கவி பாடியதெல்லாம் உண்மை . அவள் அழகு, அவள் பெண்மை, அவள் அலங்காரம் எல்லாமே ஓலாவைப் பரவசமடையச் செய்தன.

வானம் நிச்சலமான நீலமாக இருந்தது. இலையுதிர் காலத்திலே மலர்கள் கிடைப்பதில்லை. ஆகவே பச்சை, மஞ்சள், நிற இலைகளை மாலையாகத் தொடுத்து அணி வித்தனர் மணமக்களுக்கு.

அரண்மனைத் துறையிலே நின்ற ஓலாவைப் பார்த்த வுடனே அடிமைப்பெண் ஆஸ்டிரிடாவுக்கு மற்றதெல்லாம் மறந்து விட்டது. தான் இஞ்செகார்டு அல்ல, அடிமைப்பெண் ஆஸ்டிரிடா என்பதையே அவள் மறந்துவிட்டாள் என்று தான் சொல்லவேண்டும்.

ஓலாவ் ஹாரல்டினுடைய மனைவியாகி விட்டாள் அடிமைப் பெண் ஆஸ்டிரிடா.

குற்றமும் தண்டனையும்

இந்தத் திருமணம் ஆன பிறகு சில நாட்கள், சில வாரங்கள் இன்பமாகவே சென்றன. ஆஸ்டிரிடா சில சமயம் தான் செய்து விட்டது தவறு, தான் அனுபவிக்கும் இன்பம் வேறு யாருக்கோ உரியது என்பதை எண்ணி வருந்துவாள். ஆனால் அந்த வருத்தம் அதிக நேரம் நீடிப்பதில்லை . அவள் சுபாவம் அது.

ஒரு ஞாயிற்றுகிழமை யன்று நடந்த ஒரு சம்பவம் அவளை நடுங்கச் செய்தது.

ஓலாவும் அவனுடைய வீரர்கள் பலரும் ஞாயிற்றுகிழமை மத்தியானம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஓலாவுக்கு அருகே போலி இஞ்செகார்டு உட்காந்திருந்தாள்; சாப்பிட்டுக் கொண்டு அவளுடன்

பேசிக்கொண்டிருந்தான் ஓலாவ். அவள் குரல்தான் எவ்வளவு இனிமையாக இருந்தது – கண்ணை மூடிக் கொண்டு கேட்டாலே என்று எண்ணினான் ஓலாவ். கண்ணைத் திறந்து பார்த்தாலோ எவ்வளவு அழகாக இருந்தாள்? இப்படியாக அவள் பேச்சிலும் அழகிலும் ஈடுபட்ட ஓலாவ் இன்னது செய்கிறோம் என்றறியாமல் தன் உடை வாளை உருவி மேசையில் கொஞ்சம் கொஞ்சமாகச் சீவிக் கொண்டே இருந்தான்.

ஞாயிற்றுக் கிழமைகளில், உடைவாளை அதன் உறையி லிருந்து எடுப்பதேயில்லை என்று தங்கள் அரசன் பிரதிக்ஞை செய்திருப்பது அவன் வீரர்களுக்குத் தெரியும். ஆனால் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதை அவன் தன் காதலியுடன் பேசுவதில் மறந்தே போய் விட்டான். இதை எப்படி அவனுக்கு ஞாபகப்படுத்துவது?

ஆஸ்டிரிடா விஷயம் தெரியாமல் பேசிக்கொண்டே இருந்தாள். ஓலாவும் தன் உடைவளால் மேசையைச் சீவிச் சீவிச் சிறுசிறு குச்சிகளாகக் குவித்துக்கொண்டே யிருந்தான்.

கடைசியில் ஒரு வீரன் சற்றே தைரியமாகப் பக்கத்திலிருந்த வனைப் பார்த்து, நாளைக்குத் திங்கட்கிழமை தானே? என்றான்.

ஆமாம், இன்று ஞாயிறு. அதனால் நாளைக்குத் திங்கள் கிழமைதான் என்று சற்று உரக்கவே பதில் வந்தது.

ஞாயிறு என்று காதில் விழுந்தவுடனேயே திடுக்கிட்டு ஓலாவ் நிமிர்ந்தான். உடைவாளை உறையில் செருகினான். நாளைக்குத் திங்களா? என்று சொல்லிக்கொண்டே எழுந்தான். வேறு ஒரு வார்த்தையும் அவன் சொல்லவில்லை. மேசைமேல் தான் வெட்டிப் போட்டிருந்த சிறு குச்சிகளை எல்லாம் உள்ளங் கையில் எடுத்து வைத்துக்கொண்டு தணலண்டை போய் அதிலிருந்து தணலை எடுத்து அந்தக் குச்சிகளின்மேல் வைத்தான். குச்சிகள் எல்லாம் பற்றி எரிந்து அவன் கையிலேயே சாம்பலாயின.

அவனைத் தடுக்க யாரும் துணியவில்லை. ராணி மட்டும் விசாரித்து அறிந்துகொண்டாள்– ஞாயிற்றுக்கிழமையில் வாளை எடுப்பதில்லை என்கிற பிரதிக்ஞை தவறிவிட்டதற் காணத் தண்டனை அது என்று.

அவள் முகம் வெளிறிட்டது. இவ்வளவு சிறிய குற்றத்துக்கு இவ்வளவு பெரிய தண்டனையை, தானே ஏற்றுக்கொள்ளும் இவர், என் குற்றம் தெரிந்தால் என்னை எப்படி தண்டிப்பாரோ! என்று பயந்தாள் ஆஸ்டிரிடா.

விரோதிகளையும் காப்பவன்

கங்க ஹல்லாவுக்கு பக்கத்திலே கார்டரிக்கே என்று ஒரு சிற்றரசு–அதிலே ஆக்கே என்பவன் ஆண்டுவந்தான். அவனுக்கும் ஓலாவுக்கும் பரம விரோதம். ஓலாவினுடைய தூரபந்து ஒருவனைச் சண்டையில் ஆக்கே கொன்று விட்டான். அன்று முதல் ஓலாவுக்கும் ஆக்கேக்கும் விரோதம்.

ஆனால் ஒருசமயம் கங்க ஹல்லாவுக்குப் பக்கத்தில் வந்திருக்கையில் ஆக்கேக்குக் காலில் அடிபட்டு எலும்பு முறிந்து ரணமாகி விட்டது. காட்டிலே தனியாக ஒரு நண்பனுடன் மாட்டிக்கொண்டு விட்டான். தப்பியும் போக முடியாது! வைத்தியம் செய்து கொள்வதானால் கங்க ஹல்லாதான் போக வேண்டும். இந்தத் தர்ம சங்கடத்தில் ஆக்கேயின் நண்பன் சொன்னான்: ஓலாவ் மனசு வைத்தால் நடக்கும். இல்லா விட்டால் நீ சாகவேண்டியதுதான் என்றான்.

நான் இங்கிருப்பது ஓலாவுக்குத் தெரிந்தால் என்னைக் கொன்றே போட்டுவிடுவான் என்றான் ஆக்கே.

ஆனால் ஆக்கேயின் நண்பனுக்கு ஓலாவை நன்கு தெரியும். அவன் ராணி ஆஸ்டிரிடாவைத் தனியாக சந்தித்து அவளிடம் சொன்னான்: ராணி உன் அரசனிடம் சொல், அவனுடைய விரோதி ஆக்கே நடுக்காட்டில் உள்ள குடிசையில் சாகக் கிடக்கிறான் என்று சொல் என்றான்.

ராணி ஓலாவிடம் இந்தச் செய்தியைச் சொன்னபோது ஓலாவ் தன் குதிரை அண்டையில் நின்றுகொண்டிருந்தான். செய்தியைக் கேட்டவுடனே ஒரு தாவாகத் தாவிக் குதிரைமேல் ஏறி, காட்டில் இருந்த ஆக்கேயின் குடிசையை நோக்கிப் போனான். அவன் கத்தியோ கேடயமோ எடுத்துக் கொள்ள வில்லை.

நிராயுதபாணியாக அரசன் கிளம்பியதைக் கவனித்த ராணி அரண்மனைக்குள் ஓடி அவனுடைய கத்தியையும் கேடயத்தை யும் எடுத்துக் கொண்டு குதிரைமேல் ஏறி ஆக்கேயின் குடிசையை அடைந்து உள்ளே எட்டிப் பார்த்தபோது அவள் கண்ட காட்சி அவளைப் பிரமிக்கச் செய்தது.

மன்னன் ஓலாவ் தன் ஜன்ம வைரியான ஆக்கே படுத்துக் கிடந்த படுக்கைக்கருகே மண்டியிட்டுக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். ஆக்கே ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கடைசியில் மன்னன் ஓலாவ் சொன்னான்: ஆக்கே! நான் உன்னை ஓட ஓட விரட்டியிருக்கிறேன். எத்தனையோ தரம் நிலத்திலும் கடலிலும் உன்னைத் துரத்தியிருக்கிறேன். உன்னை வெட்டி வீழ்த்திவிடுவது என்கிற

உத்தேசத்துடன், அப்பொழுதெல்லாம் நீ என் கையில் பிடிப்பட்டதில்லை. நீ வியாதிப்பட்டு இப்போது என்னிடம் சிக்கிக்கொண்டாய். இது கடவுளின் செயல். இதற்கு அர்த்தம் என்ன என்பதை நான் சிந்திக்கிறேன் என்றான்.

ஆக்கே பதில் சொல்லவில்லை. அவன் பதில் சொல்ல விரும்பினால்கூடச் சொல்லியிருக்கமுடியாது. சாவைக் கண்டவன் போல மிரண்டபார்வையுடன் ஓலாவையே வெறித்துப் பார்த்தான். ஓலாவ் தன் கைகளைச் சகோதரன் நெற்றியில் வைப்பதுபோல அவன் நெற்றியில் வைத்துக் கொண்டு பிரார்த்தித்தான். கடவுளே! இவனைக் காப்பாற்று; இவன் என் விரோதிதான் என்றாலும், இவனைக் காப்பாற்று.

ஓலாவினுடைய கை பட்டவுடனேயே நோய் மறைந்து விட்டது போல் இருந்தது. ஓலாவ் இப்படிப் பிரார்த்தனை செய்யவும் கடவுள் அவன் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தார். ஆக்கே கண்ணைமூடி நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினான்.

இவ்வளவையும் நேரில் பார்த்துக்கொண்டே நின்ற ஆஸ்டிரிடா நடுங்கினாள். இவ்வளவு உத்தமனையா பொய் சொல்லி ஏமாற்றி நான் கல்யாணம் செய்துகொண்டேன் என்று சிந்தித்தாள்.

ஆக்கேயைக் கொண்டுவந்து கங்க ஹல்லா அரண்மனையில் சேர்த்து, வைத்தியர்களை அழைத்து, அவனுக்கு சிசுருஷை செய்யவே ராணி ஆஸ்டிரிடாவினால் முடியவில்லை; ஒவ்வொரு தடவையும் ஆக்கேயைப் பார்க்கும்போது அவள் மனம் பகீரென்றது.

"நான் உன்னைக் கொல்ல வந்தவன்"

அன்று புனித தினம். மகாத்மாக்களின் ஞாபகார்த்த தினம். காலையில் கோயிலுக்குப் போக ஓலாவ் தயார் செய்து கொண்டிருந்தான். அவனுடைய வீரர்களில் பலரும் அவனுடன் கோயிலுக்குப் போய் வரத் தயாராக நின்றார்கள். அரண்மனைக்கு வெளியேயிருந்த முற்றத்தில் வீரர்கள் பலரும் இரண்டு நீண்ட வரிசையாக நின்றார்கள். இரண்டு வரிசைக்கும் இடையே நடந்து போய் அரசன் வீரர்களுக்கு முன்னால் நின்று கிளம்ப வேண்டும்.

ராணி ஆஸ்டிரிடா தன் அந்தப்புரத்து மாடியின் சாளரத்தில் நின்றுகொண்டிருந்தாள். தன் காதலன் எப்படியிருக்கிறான் என்று எண்ணும்போது அவள் புளகாங்கிதையானாள். தலைக்கு மேலே கேசத்தை மறைக்காமல் முடிக்குப் பதிலாக ஒரு தங்க வளையம் அணிந்திருந்தான் ஓலாவ். ஓர் ஊதா நிறப் பட்டு அங்கியை எடுத்துப் போர்த்தியிருந்தான் மேலே. அவசர மில்லாமல், நிதானமாக, கடவுளைப்பற்றிய சிந்தனையில்

ஈடுபட்டவனான, அவன் தன் வீரர்களுக்கிடையே நடந்தான். அவன் முகத்திலே அன்பும் அமைதியும் தாண்டவமாடியது. கடவுளின் மகாத்மாக்களிலே அவனும் ஒருவன் என்று மகாத்மாக்களின் தினமாகிய அன்று ஆஸ்டிரிடாவுக்குக்கூடத் தெரிந்துவிட்டது.

அரண்மனை வாசலையடுத்தாற்போல ஒரு மூலையில் ஒருவன் பதுங்கிக்கொண்டிருந்தான். அது சற்று இருட்டான பிரதேசம். ஆதலால் யார் கண்ணிலும் அவன் அப்படிப் பதுங்கியிருந்தது தெரியவில்லை. தெரிந்திருந்தாலும் அவனை யாரும் கவனித்திருக்க மாட்டார்கள். அரசன் ஓலாவ் மெள்ள நடந்து இந்த மனிதனை அணுகிய போது அவன் போர்வையை உதறிவிட்டுக் கையில் உருவிய கத்தி பளபளக்க அரசனை நோக்கிப் பாய்ந்தான். உருவிய கத்தியை ஓங்கும் நேரத்திற் குள்ளாக ஓலாவ் அவனைப் பார்த்து விட்டான். ஓலாவ் நிராயுதபாணி. ஆனால் ஆயுதங்களைப் பற்றி அப்பொழுது எண்ண வில்லை அவன். சற்றும் பயப் படாமல், பின் வாங்காமல் உருவிய கத்தியுடன் தன்மேல் பாய்ந்து வந்தவனை நேருக்கு நேராக நோக்கிக்கொண்டே நின்றான். பாய்ந்து வந்தவன் அந்த பார்வைக்கெதிரே தள்ளாடினான். அவன் வாள் கைநழுவித் தானாகவே கீழே விழுந்தது. அவன் ஓலாவுக்கு முன் மண்டியிட்டுக் கைகூப்பி னான். அழுகை வந்தது அவனுக்கு. அடக்கமாட்டாமல் அடக்கிக்கொண்டு சொன்னான்:

ஓ! ஓலாவ்! ஓலாவ்! உன் எதிரிகள் உன்னைக் கொன்றுவிடச் சொல்லி என்னை அனுப்பினார்கள். ஆனால் நான் உன்னைக் கண்டவுடன் உன்னைக் கொல்லவேண்டும் என்கிற எண்ணமே எனக்கு மறைந்துவிட்டது. நீ தெய்வத்தன்மை வாய்ந்தவன். மகான்: மகா பக்தன்; உன்னை கொல்ல துணிபவன் பதராகத் தான் இருப்பான்–மனிதனாக இருக்க முடியாது. உன் கண்களில் ததும்பும் அன்பையும் அமைதியையும் கண்ட எவனும் உனக்கு எதிரியாக, விரோதி யாக இருப்பது என்பது முடியாது. நான் என் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டேன். உன் கையால் தண்டனையை ஏற்க, நான் தயாராக இருக்கிறேன்.

தன் எதிரே மண்டியிட்டுக் கை கூப்பிய அவனைக் குனிந்து தூக்கி நிறுத்தினான் ஓலாவ். மெதுவான குரலில் சொன்னான்; உன் குற்றத்தை நீயே உணர்ந்து கொண்டுவிட்டாய். அதுவே உனக்குப் போதுமான தண்டனை; உன்னை நான் மன்னித்து விட்டேன், போ என்றான்.

அதற்குமேல் என்ன நடந்தது என்பதை ராணி ஆஸ்டிரிடா கவனிக்கவில்லை. மெய்நடுங்க அவள் சாளரத்தைவிட்டு நகர்ந்து அறைக்குள் போய் ஆசனத்தில் சோர்ந்து சாய்ந்து விட்டாள்.

பாபி நான்! மகா பாபி! இவ்வளவு பரிசுத்தமான மனிதனை, மகானை, பொய்சொல்லி ஏமாற்றி மணந்துகொண்டேன் நான். என்னைப்போல பாக்கியசாலி கிடையாது என்று தெரிகிறது இப்போது என்று அவள் தனக்குள்ளாகவே முணு முணுத்துக் கொண்டிருந்தாள்.

வெண்ணிலவில்

அதே தினம் மாலை நேரத்திலே வானம் நிர்மலமாக இருந்தது. வானத்திலிருந்து முழு மதியின் இள நிலவு பூமியை எட்டித் தொட்டுக்கொண்டிருந்தது. கோட்டையையும், கோட்டையைச் சுற்றி இருந்த வீதிகளையும் வீரர்களையும் பிரஜைகளையும் பார்த்துக்கொண்டு அவர்களுடன் மாலைப் பொழுதெல்லாம் உல்லாசமாகப் பேசிப் பொழுது போக்கி விட்டு நிலாத் தோன்றி இரண்டு நாழிகை நேரத்திற்கெல்லாம் அரசன் ஓலாவ் தன் அரண்மனை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான். அவன் அரண்மனை வெளி வாசலை அணுகும்போது ஒரு பெண்ணுருவம் திருட்டுத்தனமாக வெளி யேறுவதைக் கண்டான். யார் என்று தெரியவில்லை. அவள் கறுப்புப் போர்வையால் முகத்தையும் உடலையும் போர்த்துக் கொண்டிருந்தாள். அவள் போன திசையும் நடந்த மாதிரியும் அரசனுக்குச் சந்தேகத்தைத் தருவனவாக இருந்தன. அவன் சந்தடி செய்யாமல் திரும்பிப் பின் தொடர்ந்தான்.

அவள் வாசலைத் தாண்டி, கடைத்தெருவெல்லாம் தாண்டி, குறுகிய ஜன நடமாட்டம் இல்லாத சந்துகள் வழியாக ஆற்றங்கரையை அடைந்தாள். அந்த இடத்தில் ஆறு அதிக ஆழமாக இருக்கும். அது தெரிந்தேதான் அவள் அந்த இடத்திற்கு வந்தாளோ என்று எண்ணிய அரசன் சந்தடி செய்யாமல் அவள் பின்னாலேயே வெகு சமீபத்தில் போனான்.

சற்று மேடான ஒரு இடத்திலே போய் நின்றுகொண்டு அவள் சிறிது நேரம் கைகூப்பி ஈசனைப் பிரார்த்தித்தாள். பிறகு ஆற்றிலே விழுந்துவிட விரும்புகிறவள் போல மேட்டின் ஓரத்துக்கு நகர்ந்தாள். கைகளை முன்னர் நீட்டிக்கொண்டு கீழே ஆற்றில் விழ யத்தனித்தாள்.

ஒரே தாவாகத் தாவிக் கீழே விழாமல் அவளைப் பிடித்துக் கொண்டான் அரசன் ஓலாவ். துர்ப்பாக்கியவதியே! உன் துன்பம் எத்தகையதானாலும் சரி! உன் பாபம் எவ்வளவு மகத்தானதானாலும் சரி! நீ அதற்காகத் தற்கொலை செய்து கொள்ள முயலுவது தகாது என்றான்.

அரசனின் குரல் கேட்டவுடனே அந்த ஸ்திரீ தன் முகத்தை அரசனிடம் காட்ட விரும்பாதவள் போலத் தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். ஆனால் அவள் யார் என்று அறிந்து கொள்ள அரசனுக்கு அவள் முகத்தைப்

பார்க்கத் தேவையேயில்லை. அவளைத் தொட்டவுடனேயே அறிந்து கொண்டுவிட்டான், அவள் தன் ராணிதான் என்று.

முதலில் பிடியிலிருந்து விடுபட ஆஸ்டிரிடா முயன்றாள். விடுவித்துக்கொள்ள முடியாமற் போகவே, அவன் மார்பில் சாய்ந்துவிட்டாள். முன் ஒருதரம் ஏமாற்றியதுபோல இப்போதும் அரசனை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணினாள் போலும். அவள் சொன்னாள்: ஓலாவ்! இப்படி நீ திடீரென்று பின்னால் வந்து பிடித்துக்கொண்டாயே; சற்றுத் தவறி யிருந்தால் நான் ஆற்றிலே விழுந்திருப்பேனே! ஆற்றிலே நிலவும் மதியும் எப்படி ஒளி வீசுகின்றன என்று பார்ப்பதற் காக எட்டிப் பார்த்தேன்.... நீ... நான் பயந்தே போய்விட்டேன் என்று தற்கொலை செய்துகொள்ள முயலாதவள் போலப் பேசினாள் ஆஸ்டிரிடா.

அரசன் பதில் சொல்லவில்லை. மௌனம் சாதித்தான்.

நான் ஆற்றிலே விழுந்துவிட உத்தேசித்தேன் என்று எண்ணினாயோ நீ? என்று சாந்தமாகத் திரும்பி அவனைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

என்ன எண்ணுவது என்று எனக்குத் தெரியவில்லை. கடவுள் அறிவிப்பார்! என்று அமைதியை இழக்காமல் பதில் அளித்தான் ஓலாவ்.

ஆஸ்டிரிடா உரக்கச் சிரித்தாள். தன் காதலனின் உதடுகளில் முத்தமிட்டாள். என்னைப்போல் சந்தோஷமாக இருப்பவர் கள் தற்கொலை செய்துகொள்ளவும் விரும்புவார்களா? நீயே சொல். நான் உன் ராணி. எனக்கென்ன குறை இருக்கிறது? என்று கேட்டாள்.

எனக்குப் புரியவில்லை. கடவுள்தான் காப்பாற்றுவார் உன்னையும் என்னையும் நான் அறியவேண்டியதை எல்லாம் தானாகவே எனக்கு அறிவிப்பார் என்று கூறினான் ஓலாவ்.

"என் உயிர் உன்னுடையது"

இந்த வெண்ணிலவிலே இப்படி உட்காரலாம் சிறிது நேரம் என்று அரசனையும் தன்னுடன் அழைத்துப்போய் ஒரு மணல் திட்டிலே உட்கார்ந்துகொண்டாள். ஓலாவும் அவள் எதிரே உட்கார்ந்து கொண்டான்.

ஆஸ்டிரிடா சொல்லத் தொடங்கினாள்: நான் உன்னை எப்படிக் காதலிக்கிறேன் தெரியுமா? சொல்லுகிறேன் கேள். நான் ராணியாக இருக்க விரும்பவில்லை. இனி, உன் காதலியாக மட்டுமே இருக்க விரும்புகிறேன். உன் ஜனங்களும் வீரர்களும் உன் பொழுதில் பாதியை எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். மற்றப் பாதிதான் எனக்குக் கிடைக்கிறது. அது

போதவில்லை. தவிரவும் என் உயிர், உடல், பொருள், ஆவி எல்லாம் உன்னுடையவை

உன் உடலும் பொருளும் என்னுடையவையாக இருக்கலாம். ஆனால் உன் உயிரும் ஆவியும் ஈசுவரனுடை யவை என்று பதில் அளித்தான் அரசன்.

ஆனால் ஆஸ்டிரிடா பேசிக்கொண்டே அரரசனுடைய உடைவாளை உருவினாள். அதன் பிடியை அரசன் கையில் கொடுத்தாள். வாள் பக்கத்தைத் தன் மார்புக்கு நேராக வைத்துக்கொண்டாள். என் உயிர் உன்னுடையது தான். கடவுளுடைய தல்ல என்று கூறிக்கொண்டே வாளின் முனையிலே சாய்ந்து வாளை மார்புக்குள் செலுத்திக்கொள்ள முயன்றாள்.

ஆனால் அரசன் ஓலாவ் அப்படி எல்லாம் ஏமாந்தவிடக் கூடியவன் அல்ல. அவன் விளையாட்டிலேகூட வாளைக் கெட்டியாக, கை நடுங்காமல் பிடிப்பவன். ஆஸ்டிரிடாவின் மார்பிலே அது படு முன்னரே வாளைப்பின்னுக்கு இழுத்து விட்டான். உடனே, அவள் உத்தேசம் அறிந்தவுடனே குதித்தெழுந்தான். வாளை உறையில் போட்டான். ராணி தன் கையாலேயே இறக்க விரும்பினாள் என்று அறிந்து அவன் அங்கங்களெல்லாம் பதறின. வீரன் ஓலாவ் நடுங்கும் உள்ளத்துடனும் உடலுடனும் தன் எதிரில் நிற்பதைக் கண்டாள் ஆஸ்டிரிடா.

இவள் ஏன் சற்றுமுன் தற்கொலை செய்துகொள்ள முயன்றாள்? இப்பொழுது ஏன் என் கையாலேயே இறக்க முயன்றாள்? ஏன்? ஏன்? என்று சிந்தித்தான் ஓலாவ். தெரிகிறது, அவள் ஏதோ தவறு செய்துவிட்டாள்! பாபம் செய்து விட்டாள்! அதுதான் காரணம் என்று ஓலாவ் மனசில் உதித்தது.

குனிந்து ஆஸ்டிரிடாவின் முகத்தை நிமிர்த்திக் கேட்டான்; சொல்? நீ என்ன தவறு செய்துவிட்டு இப்படி அவஸ்தைப் படுகிறாய்? என்னிடம் சொல் என்றான்.

ஆஸ்டிரிடா பதில் கூறாமல் அழுதாள். அவன் காலடியில் விழுந்து மண்ணில் புரண்டு விக்கி விக்கி அழுதாள்.

இந்த மாதிரி அழுகிறவள் பாபியாகத்தான் இருக்க வேண்டும். தெரிகிறது. நீ என்ன பாபம் செய்துவிட்டு இப்படித் திணறுகிறாய்? சொல்லு. என்னிடம் சொல்லு, இஞ்செகார்டு என்று கெஞ்சினான் ஓலாவ்.

நான் இஞ்செகார்டு அல்ல

பதில் சொல்லாமல் அழுதாள் ராணி. ஓலாவினுடைய பாதங்களெல்லாம் அவளுடைய கண்ணீரால் நனைந்தன.

இதென்ன இஞ்செகார்டு, அழாதே மனசைத் தேற்றி கொள். பாபம் எதற்குமே பிராயச்சித்தம் உண்டு. குற்றம் செய்ததை உணர்ந்து ஒப்புக்கொண்டாலே மன்னிப்பு கிடைக்கும். நீ என்ன பாபம் செய்தாய்? சொல்லு.

அவள் மௌனமாகவே அழுது கொண்டிருப்பதைக் கண்டு ஓலாவ் மேலும் சொன்னான். என்னிடம் சொல்லக் கூடாதது என்ன, இஞ்செகார்டு? எதுவானாலும் சொல்லலாம், சொல்லு. இஞ்செகார்டு! இஞ்செகார்டு.

ஓலாவ் குனிந்து அவள் முகத்தை நிமிர்த்தினான் ; அவள் அண்டையில் உட்கார்ந்து கொண்டாள்.

இஞ்செகார்டு என்று அவன் அடுத்த தடவை கூப்பிட்ட வுடன் ஆஸ்டிரிடா தன் அழுகையைச் சமாளித்துக் கொண்டு விக்கல்களுக்கிடையே , நான் இஞ்செகார்டு அல்ல என்று பதில் அளித்தாள்.

என்ன? இஞ்செகார்டு அல்லவா நீ? அப்படியானால் நீ யார் என்று கேட்டான் ஓலாவ்.

நீ யார்? என்று மீண்டும் கேட்டான்.

மீண்டும் அழத் தொடங்கிவிட்டாள் ஆஸ்டிரிடா, அவளால் பதில் சொல்ல இயலவில்லை.

நீ யார்? என்று மூன்றாவது தடவையும் கேட்டான் ஓலாவ்.

அழுகையை நிறுத்தாமல் இரண்டு கைகளையும் தூக்கி விலங் கிடப்பட்டவை போலச் சேர்த்துக் காண்பித்தாள் ஆஸ்டிரிடா.

ஓ..... நீ... அடிமைப் பெண்ணா ? என்றான் ஓலாவ். சிறிதுநேரம் யோசித்த பின் அவனுக்கு விஷயம் விளங்கியது. ஸ்வீடன் தேசத்து மன்னனுக்கு அடிமை வயிற்றில் பிறந்த பெண் ஒருத்தி உண்டென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவள் தானே நீ? என்றான்.

ஆமாம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினாள் ஆஸ்டிரிடா.

எனக்குத் தன் குமாரியை மணம் செய்து கொடுப்பதாக வாக்களித்த ஸ்வீடன் தேசத்து மன்னன், ராணி வயிற்றுப் பெண்ணை அனுப்பாமல் அடிமை வயிற்றுப் பெண்ணை அனுப்பி ஏமாற்றினானா?

ஆம் என்றாள் ஆஸ்டிரிடா.

நான் உன்னை மணந்துகொண்டேன், இஞ்செகார்டு என்று எண்ணி, அரசகுமாரி என்று எண்ணி அடிமைப் பெண்ணை மணந்து கொண்டேன். என் குலத்துக்கே அவமானம் விளைந்தது உன்னால், இல்லையா? என்றான் ஓலாவ் கசப்புடன்.

அவன் குரலில் தொனித்த ஏமாற்றத்தையும் கசப்பையும் கண்டு ஆஸ்டிரிடா தன் துக்கத்தை மறந்துவிட்டாள். அழுகையை நிறுத்தி விட்டு நிமிர்ந்து நின்றாள். அவள் சொன்னாள்; உனக்குத் தவறும் தீங்கும் இழைத்துவிட்ட என் உயிரை நீயே வாங்கிவிடு. ஒரே வீச்சில் என்னைக் கொன்று போட்டுவிடு என்றாள். மீண்டும் அவன் உடைவாளை உருவி அவன் கையில் கொடுத்தாள்.

அந்த வாளின் பிடியிலே அன்பே தெய்வம்! அடிமைகளே ஆண்டவர்கள்! மன்னிப்பவர்களே புண்யசாலிகள்! என்ற மூன்று வாக்கியங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கோபத்திலே மன்னன் ஓலாவ் ஆஸ்டிரிடாவின் உயிரை வாங்கியிருப்பான். ஆனால் வாளின் பிடியிலே செதுக்கியிருந்த வாக்கியங்கள் அவன் கோபத்தைச் சமனப்படுத்தின. சிந்தித்தே எதையும் செய்யலாம் என்று சற்றுத் தயங்கினான்.

தயங்கி தயங்கி உடைவாளை மீண்டும் உறைக்குள் செருகி விட்டான். உன்னைக் கொல்ல நான் விரும்பவில்லை என்றான்.

ஆற்றங்கரை ஓரத்திலே சிந்தனையில் ஆழ்ந்தவனாக மன்னன் ஓலாவ் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

ஒரு வார்த்தையும் பேசாமல், தொங்கிய தலையுடன், ஏக்கம் நிறைந்த உள்ளத்துடன், கூப்பிய கைகளுடன் நின்றாள் ஆஸ்டிரிடா. தான் செய்தது தவறல்ல என்று ஸ்தாபிக்க அவள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. எப்படிச் சொல்ல முடியும்? தான் செய்தது தவறல்ல என்ற நம்பிக்கை அவளுக்கே இல்லையே!

என் உள்ளத்தில் நிறைந்தாய்

வெகு நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த ஓலாவ் கடைசியில் சொன்னான்: என் ராணியாக நீ சில காலம் இருந்து விட்டாய். உன்னை இஞ்செகார்டு என்று எண்ணித்தான் நான் அங்கீகரித்தேன். எனினும் நீயும் அழகி, ராணியாக இருக்கத் தகுந்தவள். அடிமைக் குலத்தில் உதித்த நீ இவ்வளவு தகுதியுள்ளவளாக இருந்தது பெரிசுதான். இருந்தாலும் பொய் சொல்லி,

ஏமாற்றி என்னை வந்தடைந்து விட்டாய் நீ! அதை எப்படி நான் மன்னிக்க முடியும்?

அவள் மாயம் வல்ல அரக்கியாக, பொய்ப்பெயருடன், பொய்க் குலத்துடன், உள்ளத்திலே பொய்யுடன், தன்னை வந்தடைந்தாள். தன்னை ஏமாற்றினாள் என்று எண்ணும் போத அரசனுக்கு கை அவனையும் அறியாமலே உடை வாளின் பிடியைத் தேடியது. பிடியிலே பொறித்திருந்த வார்த்தைகள் மீண்டும் அவனைச் சாந்தப்படுத்தின.

ஆனால் எப்படி நான் உன்னை மன்னிக்க முடியும் என்று தான் எனக்குத் தெரியவில்லை, உன்னை நம்பி இனி ராணியாக நான் ஏற்றுக்கொள்வது எப்படி?

அடிமைப் பெண் ஆஸ்டிரிடாவின் மனசிலே ஆசை தோன்றி ஊசாலடியது. அந்த ஆசையைப் போலவே தெளிவுக்கும் அழுகைக்கும் இடையே ஊசலாடும் குரலிலே அவள் தன் கதையை ஆதியோடந்தமாக நடந்தது நடந்தபடியே கூறினாள்.

நான் அடிமை. பிறந்தது முதல் அடியையும் வசவையும் தின்றவள். இன்பம் என்பதையே ஒரு நாளும் காணதாவள். உன்னை ஏமாற்றும் உத்தேசத்துடன் நான் கங்கா ஹல்லா வரவில்லை. கவி ஹியால்டே சொன்ன நாளில் இருந்து என் உள்ளத்திலே நீ நிறைந்தாய். உன்னை ஒருதரமேனும் நேரில் கண்டு தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்: கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டேன். பார்த்து உன்னிடம் உண்மையை சொல்லிவிடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். பெண்ணல்லவா நான்? கிடைக்க இருந்த இன்பத்தை தானாகவே இழக்க எனக்கு மனம் வரவில்லை . என் உதவிக்கு கவி ஹியால்டேயை அழைத்தேன். அவன் உன் விதி என்று போய்விட்டான். நான் செய்த தவறெல்லாம் காதலால் பிறந்தவையே தவிர வேறு அல்ல. நான் உயிரை விடவும் தயாராகவே இருந்தேன் என்பதை நீ கண்டாய்.

மீண்டும் அழுகை வந்தது அவளுக்கு. ஆனால் அதை அடக்கிக் கொண்டு மன்னன் ஓலாவையே பார்த்துக்கொண்டு நின்றாள் அவள்.

நீ இஞ்செகார்டு அல்ல: என் கனவு காதலியும் அல்ல. பொய் நிறைந்த ஓர் அடிமைப்பெண் நீ! என்று கூறினான் ஓலாவ்.

உன் பெயரைக் கேட்ட நாள் முதல் நான் உன்னை காதலித்தேன். ஓலாவ் என்றாள் ஆஸ்டிரிடா மெதுவான குரலில்,

அவள் குரலும் வார்த்தைகளும் அவன் காதில் இனிய கீதமாக ஒலித்தன மீண்டும்.

ஆனால் ஆஸ்டிரிடா தொடர்ந்து சொன்னாள்: நீ இதை அறியுமுன் இறந்துவிட வேண்டும் என்று நான் ஆசைப் பட்டேன். நான் அனுபவித்தறியாத இன்பம், உன் காதல் இன்பம் அறிந்து சந்தோஷப்பட்டேன். இதைவிட இன்பம் எனக்கு அடிமைப்பெண் ஆஸ்டிரிடாவுக்கு கிடைப்பதற் கில்லை. நான் உனக்கேற்ற மனைவியல்ல என்று ஒப்புக் கொள்கிறேன். இனி நான் என் வழி செல்கிறேன். குறுக்கே நிற்காதே ஓலாவ். நான் போகிறேன். வழிவிடு. உனக்கு பெரும் தீங்கு இழைத்துவிட்டேன் நான். அதை மன்னித்து விடு என்று கூற எனக்கு தைரியம் இல்லை. மன்னிக்க முடியாத குற்றந்தான் அது. நான் பாவி; உன் அருகில் வருவதற்கே லாயக்கில்லாதவள். இனி உன் எதிரில் வரமாட்டேன். போகிறேன். விடு வழியை கிளம்பினாள் ஆஸ்டிரிடா.

மன்னிப்பவர்களே புண்யசாலிகள், அடிமைகளே ஆண்டவர்கள். அன்பே தெய்வம் என்கிற ஏசுவின் வாக்கியங்கள் மீண்டும் ஓலாவின் ஞாபகத்துக்கு வந்தன. அவன் உள்ளத்திலே பெரும் போராட்டம் ஒன்று நிகழந்தது. ஆஸ்டிரிடா நாலடி எடுத்து வைத்து நகரை நோக்கித் தள்ளாடித் தள்ளாடி நடப்பதற்குள் போராட்டம் முடிந்து விட்டது. அவன் உள்ளம் நிறைந்தது. ஓரே தாவில் பாய்ந்து வந்து ஆஸ்டிரிடாவைக் கட்டி அணைத்துக்கொண்டான்.

நீயே என் ராணி! என்றான்.

ஓலாவுக்கும் மற்ற சாதாரண மனிதர்களுக்கும் வேறு என்ன வித்தியாசம்? நீ எனக்குத் தீங்கு இழைத்து விட்டது என்னவோ உண்மை, ஆனால் அதை மன்னித்து விட்டு உன்னை அங்கீகரிப்பதற்கு எனக்குத் தெம்பியிருக்கிறது. நீ அடிமைப் பெண்ணாகப் பிறந்தவள்தான் எனினும், மன்னன் ஓலாவை மணந்துகொண்டதனால் ராணியாகி விட்டவள். நீ பொய் சொல்லிப் பாபம் செய்தவள் தான் எனினும் உன் பாபத்தை நீயாகவே உணர்ந்து ஒப்புக் கொண்டுவிட்டாய். அதற்காக நீ உன் உயிரைக் கொடுக்கவும் தயாராகவே இருந்தாய் என்பதையும் நான் கண்டேன். கடவுள் கோயிலில் நான் உன்னை மணந்து கொண்டேன். உன்னையே என் ராணியாக கடவுள் விதித்தார் என்பதை நான் அறிகிறேன். அப்படியிருந்தும் நான் உன்னை ஏற்றுக்கொள்ளத் தயங்குவானேன்?

நீ சகல விதத்திலும் எனக்கு ஏற்றவள் தான் என்பதை நாமிருவரும் சேர்ந்து இதுகாறும் வாழ்ந்திருந்த நாட்களில் நான் கண்டு விட்டேன்.

அவன் பிடியிலிருந்து தப்பி ஓடிவிட முயன்றாள் ஆஸ்டிரிடா. முடியவில்லை , சிறிது நேரம் முயன்றபின் சோர்ந்து, பயன்படாது என்று உணர்ந்து அவன் மார்பில் சாய்ந்துவிட்டாள். அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது ஆனால் அது துன்பக் கண்ணீரா, இன்பக் கண்ணீரா என்று அவளுக்கே தெரியாது.

ஓலாவ் மேலும் சொன்னான்: யோசித்துப் பார்த்தால் நீ செய்து விட்டது அப்படி ஒன்றும் தவறாகக் கூடத் தோன்ற வில்லை எனக்கு. கடவுள் மனிதர்களைப் பலஹீனமாகவே தான் படைத்திருக்கிறார் அதுவும் மனிதனின் உள்ளம், இதயம் மிகவும் மென்மையானது. போகட்டும்; இதை மறந்து விடு..... என் காதலியின் என் ராணியின், உண்மைப் பெயர்கூட இன்னதென்று தெரியாமல் இவ்வளவு நாள் நான் காலங் கழித்தது என் பேரில் தவறில்லையா? என்றான்.

என் ராணி ஆஸ்டிரிடா என்று உரக்கக் கூவினான் ஓலாவ். அவன் வாய், ஆஸ்டிரிடா, ஆஸ்டிரிடா என்று சதா முணு முணுத்துக் கொண்டிருந்தது.

அந்த வெண்ணிலவில் ஆற்றங்கரை யோரத்திலே காதலியும் காதலனும் மனம் விட்டு வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள் பழங்கதைகளை, காதல் நினைவுகளை! அவர்கள் அரண்மனை திரும்புபோது நள்ளிரவாகிவிட்டது.

சுவர்க்கத்தில் காரி ஆஸென்

யோஹன் போயர்

நார்வே தேசத்து மொழியில் எழுதப்பட்ட கதைகளுக்கு ஒரு தனி உயிர் உண்டு. நல்ல சிறுகதைகள் எழுதிய நார்வே மொழி ஆசிரியர்கள் பலர் உண்டு. அவர்களில் யோஹன் போயர் எழுதிய பல கதைகளில் காரி ஆஸென் என்கிற இந்தக் கதை நார்வேயர்களுடைய லக்ஷியங்களை அழகாகச் சொல்கிறது என்று பிரசித்தி பெற்றதாகும்.

சுவர்க்கத்தில் காரி ஆஸென்

யோஹன் போயர்

காரி ஆஸெனின் புருஷனின் பெயர் பீட்டர் ஆஸென். அவர்களுடைய பண்ணைக்கு என்று சிறு பகுதியை மரம்திருத்தி வெட்டி, பண்ணைச் சாகுபடி செய்து நல்லபடி வாழ்வதெற் கெல்லாம் அவனுக்கு உதவியவள் காரி ஆஸென்தான். மாடு போல நாள் பூராவும் உழைத்துவிட்டு அலுத்துப்போய் அவர்களுடைய பெரிய படுக்கையில் பக்கத்தில் படுத்து எத்தனையோ நாள் தூங்கியிருக்கிறார்கள். ஒரே ஏரில் பூட்டிய இரு மிருகங்கள் போலச் சேர்ந்து சௌக்கியமாக உழைத்துப் பலன் கண்டவர்கள் அவர்கள். தங்களில் யாருக்காவது ஏதாவது நேர்ந்து ஒருவரை ஒருவர் விட்டு விலக நேரிடும் என்கிற நினைப்பே அவர்களுக்கு இல்லை. உண்மைதான். சில சமயம் நகரத்துக்குப் போய் மிதமிஞ்சிக் குடித்துவிட்டு வந்து கணவன் தன் மனைவியை போட்டு நையப் புடைப்பதுண்டுதான். ஆனால் அதற்கு மறுநாள் அதுபற்றி வருந்தி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவான் தன்னையே அடித்துக் கொள்ளுவான்.

ஒருநாள் காரி படுத்த படுக்கையாக விழுந்து விட்டாள். அவள் பக்கத்தில் ஒரு முக்காலியை போட்டுக் கொண்டு பீட்டர் உட்கார்ந்திருந்தான். மீண்டும், மீண்டும், உடம்பு என்ன பண்ணுகிறது, என்ன பண்ணுகிறது? தேவலையா? என்று அடிக்கடி கேட்டுக் கொண்டே யிருந்தான். கடவுள் புண்ணியத்தில் தேவலை, தேவலை என்றுதான் அவளும் பதில் சொல்லிக்கொண்டே வந்தாள். ஆனால் கடைசியில் பீட்டருக்குத் தெரிந்துவிட்டது. அவள் நிலைமை மோசமாகி விட்டது; அவள் பிழைக்க மாட்டாள் என்பது தெரிந்து விட்டது. உடனே மத குருவுக்கு ஆள் அனுப்ப வேண்டியது தான் என்று தீர்மானித்தான்.

அன்றிரவு திடீரென்று காரிக்குத் தெரிந்தது, தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தது தன் கணவன் பீட்டர் அல்ல என்று. யாரோ புதிதாக, வெண்மையான ஆடையை கட்டிக்கொண்டு அவளை அழைத்துக் கொண்டு போக வந்து காத்துக் கொண் டிருந்தார். கண்ணீர் விட்டுக் கதறி அழுது கெஞ்சினாள்: வேண்டாம்! வேண்டாம்! நான் பீட்டருடனேயே இருக்கிறனே! என்று கெஞ்சினாள்.

அவள் பக்கத்திலே இன்னமும் உட்கார்ந்திருந்த கணவன், என்ன சொல்லுகிறாய் காரி? என்று கேட்டான்.

ஆனால் தெரு வழியாக அந்த வெள்ளை ஆடை தரித்த அந்தத் தேவதை தனது இறக்கைகளை விரித்துக்கொண்டு பறக்கத் தயாராயிற்று. இப்போது நீ என்னுடன் வரவேண்டும், காரி வா என்றது அந்ததேவதை.

நான் இருந்த இடத்திலேயே எவ்வவு சந்தோஷமாக இருந்தேன் என்றாள் காரி. தவிரவும் பீட்டர், என் கணவர், தனியாக மிகவும் தவித்துப் போவாரே என்ன செய்வார் அவர்?

அவனைக் கடவுள் காப்பாற்றுவார் கவலைப்படாதே நீ இன்னும் சற்று நேரத்தில் சுவர்க்கத்தில் இருக்கப் போகிறாய் என்பது பற்றிச் சந்தோஷப்படு என்றது அத் தேவதை.

காரி ஆனந்தப்படவேதான் முயன்றாள் ஏனென்றால் இறந்த பின் சுவர்க்கம் சேர வேண்டும் என்றுதான் அவள் எப்போதுமே பாடுபட்டு வந்திருந்தாள். ஆனால் அதே சமயம் பீட்டரால் பண்ணையைத் தனியாக சரிவரச் சமாளிக்க முடியுமா என்பது அவளுக்கு சந்தேகமாகத்தான் இருந்தது. ஆடுகள் கட்டும் கொட்டிலை அவர் உரிய காலத்தில் செப்பனிடுவாரோ, மாட்டாரோ?

கடைசியில் ஒரு வழியாக அவர்கள் இருவரும் அதாவது தேவதையும் காரியும், தங்க மயமான ஒரு பெரிய வாசலை அடைந்தார்கள். நகரில் அவள் பார்த்திருந்த மாஜிஸ்டிரேட் வீட்டு வாசலை விடப் பெரிதாக இருந்தது அந்த வாசல். வாசலைத் தாண்டியவுடனே இருந்த தோட்டத்தில் பல குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த குழந்தை களுடன் பல மாதங்களுக்குமுன் இறந்த ஒரு அண்டை வீட்டுக் குழந்தையையும் கண்டாள் காரி. அதைக் கண்டதும் தனக்குத் தானே அவள் சொல்லிக் கொண்டாள் . நான் மீண்டும் பூமிக்குப் போனால், அவள் குழந்தை சுவர்க்கத்தில் சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்லுவேன், ஆனால் உடனேயே இன்னமும் பூலோகத்திலிருந்த தன் குழந்தை களைப் பற்றி நினைவு வந்து விட்டது அவளுக்கு. அவர்கள் இப்போது அவளைத் தேடிக் கொண்டிருப்பார்கள்.

எதிர்ப்பட்ட மலைச் சரிவிலே படிப்படியாக, வரிசையாக வீடுகள் இருந்தன. அழகாக இருந்தன. ஏதோ ஒரு படத்தில் ஒரு சமயத்தில் பார்த்தது போல இருந்தது. அப்படிப்பட்ட ஒரு வீட்டின் வாசலிலே அவளுடைய சகோதரன் நின்று கொண்டிருந்தான்.

யார் அது, காரியா? என்றான் அவள் சகோதரன். இது தான் என் வீடு. இங்கு வரிகளோ, வாடகையோ கிடையாது . கடன், தொந்தரவுகளும் கிடையாது. விறகு, உணவு இரண்டும் ஏராளமாகவே இருக்கின்றன. பரக்கப்

பரக்க உழைத்து அலுப்படைய வேண்டியதில்லை நான். கடவுளைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது இங்கு வந்து விட்டுப் போ.

காரிக்கு உணர்ச்சி மிகுதியாக இருந்தது. ஆனால் மறு படியும் தன் கணவன் பூமியிலே எப்படிக் கஷ்டப்படுகிறானே என்று எண்ணிக் கஷ்டப்பட்டாள். பாவம் பூமியில் தனியாக நாள் பூராவும் உழைத்து ஓடாகிக்கொண்டிருப்பார் பாவம்

ஒரு வழியாக அவர்கள் மலையுச்சியை வந்தடைந்தார்க்ள. உச்சியிலே கடவுளின் வீடு தனியாக நின்றது. பெரிய தலை நகரில் அவள் ஒரு சமயம் பார்த்திருந்த அந்த பெரிய மத ஆலயத்தையும் விடப் பெரிதாக இருந்தது அது. மதாலய அதிகாரியின் உடைகள் அணிந்திருந்த கடவுள் மேலே போய்க் கொண்டிருந்தவர் அவளைக் கண்டதும் சற்றுத் தயங்கி நின்றார்.

காரிக்கு நடுக்கம் எடுத்தது. அவள் கேள்விப்பட்டிருந்தாள் கடவுள் மிகவும் கண்டிப்பான பேர்வழி என்று. எப்போழுதுமே, எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே நல்லவளாக அவளால் நடந்து கொள்ள முடிந்ததில்லைதான். தலையைக் குனிந்து கொண்டு, கையைக் கட்டிக்கொண்டு பணிவாக நின்றாள்.

மிகவும் மிருதுவான, இரக்கமும் கருணையும் நிறைந்த குரலில் கடவுள் அவளுடன் பேசினார்; சுவர்க்கத்துக்கு வந்து சேர்ந்தாயா காரி? உன் வரவு நல்வரவாகுக. வா, இங்குள்ள வழக்கப்படி என்னோடு கைகுலுக்கவா என்று கடவுள் கையை நீட்டினார்.

பணிவுடன், பயந்தவளாகக் காரி கடவுளை அணுகி மண்டியிட்டு, மெதுவாக அழவே தொடங்கி விட்டாள். தன்னைப் போன்ற ஒரு பாவியுடனா கடவுள் இவ்வளவு இரக்கத்துடனும் கருணையுடனும் பேசினார்

குழந்தாய் எழுந்திரு என்றார் கடவுள். அவள் கண்களை அவரே துடைத்து விட்டார். அவள் இனி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று சொன்னார். சுவர்க்கத்திலே அவளுடைய கஷ்டங்கள், துக்கங்கள் எல்லாம் தானகாக் கழன்று விழுந்துவிடும் அவள் சந்தோஷமாக இருக்கலாம் என்றார் கடவுள்.

இதைக் கேட்ட காரி சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள்: முன்பு , உலகத்தில் இருக்கும்போது நான் கஷ்டப்பட்டேன், துயரப்பட்டேன் என்று எண்ணிவிடக் கூடாது. உங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. இருந்தாலும் நான் சொல்லுகிறேன். என் கணவனுடனும் குழந்தை களுடனும் என் வாழ்க்கை இன்பமாகவேதான் இருந்தது. பீட்டர் என்னை அடித்தான் என்று, ஊராரில் பொறுப் பற்றவர்கள், கெட்டவர்கள் சொல்லுவார்கள். நகருக்குப்போன போதும்கூட அவன் அதிகமாகக் குடிப்பது

கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். அவன் எவ்வளவு நல்லவனாகவும், இரக்கமுள்ளவனவாகவும், அன்புள்ளவனாகவும் இருந்தான் நாங்கள் இருவரும் எத்தனையோ சந்தோஷமாகவே இருந்தோம். ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டது கிடையாது. கிடையவே கிடையாது.

உன் கணவரைப்பற்றி நீ இப்படி இப்போது சொல்வது நியாயமே என்றார் கடவுள். அதோ அந்தத் தேவதையுடன் நீ இப்போது போகவேண்டும். சுவர்க்கத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு எங்கிருக்கவேண்டும், என்ன செய்யவேண்டும் என்று நீயாகத் தீர்மானித்துக்கொள். அவரவர்களுக்கு இஷ்டமானபடி சுவர்க்கத்திலே இருக்கலாம் என்பதுதான் இங்குள்ள முக்கிய விசேஷம். அதன்படி நீயும் உன்னிஷ்டப்படி இருக்கலாம் என்றார் கடவுள்.

காரி தனக்குள் எண்ணினாள் : நான் எதற்கும் பிரயோசனப் படமாட்டேன். பாவி நான் என்று. ஆனால் அவளை அங்கு அழைத்து வந்த தேவதை அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு மலைச் சரிவிலே இறங்கிற்று. எதிர்ச் சரிவிலே இறங்கிற்றுவந்த வழியே திரும்பவில்லை என்று கவனித்தாள் காரி. சிறு ஏரிகளை அழகான நந்தவனங்களையும் கடந்து சென்றார்கள். சுவர்க்க ஒளியிலே இந்த ஏரிகள் கூட ரோஜா வர்ணமாக இருக்கின்றனவே என்று எண்ணினாள் காரி. வெண்மையான அன்னங்கள் அந்த ஏரிகளிலே அழகாக மிதந்துகொண்டிருந்தன. அவைதான் எத்தனை அழகாக பாடின? காரியிடம் அவளுடன் வந்த தேவதை சொல்லிற்று; அந்த அன்னங்களும் ஒரு காலத்தில் மனிதர்களாக இருந்தவைதான் என்றும்,, பாட ஆசைப்பட்டும் பாட்டுக் கற்றுத் தேர்ச்சி பெறப் பணம் இல்லாமல் இசை ஆசை நிறைவேறாமலே இறந்தவைதான் என்றும், அவற்றின் ஆசை சுவர்க்கத்திலாவது நிறைவேறட்டும் என்று கடவுள் அவற்றைப் பாடும் அன்னங்களாக மாற்றிவிட்டார் என்றும் சொல்லிற்று தேவதை. எவ்விதத் தேர்ச்சியும் பயிற்சியும் இல்லாமல் அவை தம்மிஷ்டப்படி பாடிக்கொண்டிருந்தன இங்கே. ஏரிகரைகளில் ஆழமில்லாத இடங்களிலெல்லாம் அல்லிமலர்கள் மலர்ந்து சூரியனை நோக்கி தலைசாய்த்து அழகாக மெல்லிய காற்றிலே ஆடிக்கொண்டிருந்தன. அந்த அல்லிகள் எல்லாம் பூலோகத்தில் பெண்களாக இருந்தவை என்றது அத்தேவதை: கவிதையில் நாட்டமுடைய பெண் களாக இருந்த அவர்களைக் கடவுள் இங்கு சுவர்க்கத்தில் சூரியனையே தொழும் அல்லிகளாகவே, மலர்களாகவே மாற்றிவிட்டார் என்றது தேவதை. அதோ அழகாகப் பறந்து கொண்டிருந்த வண்ணத்துப்பூச்சிகள் எல்லாம், கடவுளின் சிந்தனைகள். அவை பல தடவைகள் பறந்துவந்து அந்த அல்லிப் புஷ்பங்களைத் தொட்டு அவற்றின் கவிதையையும் அவற்றையும் ஆசிர்வதித்தன.

காரி அல்லியாக இருக்க விரும்பினாளோ அல்லது அன்னமாக இருக்க விரும்பினாளா என்று கேட்டது தேவதை.

ஐயையோ இரண்டுமே வேண்டாம் என்றாள் அவள். ஏனென்றால் அவளுக்கு மறுபடியும் பீட்டரைப் பற்றிய நினைவு வந்து விட்டது. என்றாவது ஒருநாள் அவனும் இங்கு சுவர்க்கத்துக்கு வந்தானென்றால் அவனால் அவளை அடையாளம் கண்டுகொள்ள முடியாது போய்விடுமே என்று எண்ணினாள் அவள். அந்த அல்லிப்பூவோ, அன்னமோதான் தன் மனைவி என்று அவனுக்கு எப்படித் தெரியவரும்?

மேலே அவளை அழைத்துச் சென்றது தேவதை. அங்கும் பல பெரிய ஏரிகள் இருந்தன. அவற்றில் உல்லாஸப் படகுகளிலே, படாடோபமான ஆடைகள் அணிந்து ஜோடி ஜோடியாக பலரும் போய்வந்துகொண்டிருந்தனர். அவர்கள் பலவிதமான இசைக் கருவிகளில் பாடல்கள் வாசித்துக்கொண்டிருந்தனர். ஒரு பெரிய பூந்தோட்டத்திலே பூக்களடர்ந்த மரஞ்செடி கொடிகளுக்கிடையில் கூட்டம் கூட்டமாக வாலிபர்களும் யுவதிகளும் அன்புக் கண்களுடன் ஒருவரை ஒருவர் பார்த்து ஆனந்தித்துக்கொண்டு விளை யாடிக் கொண்டிருந்தனர். பூலோகத்தில் பல காரணங்களால் பிரிக்கப்பட்ட காதலர்கள் சுவர்க்கத்திலே ஒன்று சேர்ந்து கூடிச் சுகித்து ஆனந்தித்துக் கொண்டிருந்தனர். பூலோகத்திலே அழகில்லாத குரூபிகளாக இருந்து அதனால் காதலன் ஒருவனை அடையமாட்டாமல் தவித்த பெண்கள் எல்லோரும் இங்கு அழகிகளாகத் தங்கள் கருத்தொருமித்த காதலருடன் விளையாடிக்கொண்டிருந்தார் கள் என்று சொல்லிற்று தேவதை. நாள் பூராவும் அந்தக் குதியும், விளையாட்டும், நாட்டியமும் நடக்கும் என்றது தேவதை.

அந்தப் படகுகளிலாவது, அல்லது தோட்டத்திலாவது அவள் தன் காலத்தைக் கழிக்க விரும்பினாளா என்று கேட்டது அத்தேவதை. நாட்டியமாடிக் கொண்டே வயது கூடாத யுவதியாக அவள் வாழலாம் என்றது. காரி அதையும் விரும்ப வில்லை. ஆஸென் பண்ணையில் வைக்கோல் போரை பீட்டர் ஒருவனால் சமாளித்து முடிக்க முடியாதே என்று காரிக்கு நினைவு வரவே, இதுவும் தனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.

தேவதை அவளை வேறு ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றது. அங்கு பலர் அமர்க்களமாகப் பேசிக்கொண்டே சம்பிரமமாக விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். தலையிலே ஆணும் பெண்ணும் ரோஜாப்பூக்களை மாலை யாகவும் தனி மலராகவும் அணிந்துகொண்டிருந்தார்கள். பட்டும் பொன் சரிகையும் வெல்வெட்டாலான

ஆடைகளும் அணிந்திருந்தார்கள். அடிக்கடி குடித்து ஆனந்தமாகப் பெரும் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பலரும் பூலோகத்தில் ஏழைகளாக இருந்தவர்கள் என்றும், இங்கு சுவர்க்கத்தில் அவர்கள் இஷ்டப்படி வயிறார உண்டு களித்துக் கொண்டிருந்தார்கள் என்றும் தேவதை காரியிடம் சொல்லிற்று. வேறு ஒரு தோட்டத்திலே அழகிகள் தங்கள் காதலர்களுடன் தனித்தனியாக, பிறர் கண்ணில் படாதபடி, தனியாக ஜோடி போட்டுக் கொண்டு நடந்தார்கள். அது அவர்கள் விருப்பம், வேறு எதையும் அவர்கள் காணவோ, யார் கண்ணிலும் படவோ விரும்பவில்லை என்றது தேவதை. புல் தரைகளிலே காலம் பூராவையும் காதல் என்கிற நினைவு தவிர வேறு கவலைகளே இல்லாமல் கழித்திருந் தார்கள் அவர்கள்.

வேறு ஒரு இடத்தில் ஒரு கூட்டம் நடந்துகொண்டிருந்தது. சிக்கலான பிரச்சனைகள் பலவற்றை ஆண்களும் பெண் களுமாகப் பலர் கூடிப் பிரமாதமாக விவாதித்துப் பிரசங்கங்கள் செய்து கொண்டிருந்தார்கள். தீர்மானங்கள் பலவற்றை நிறை வேற்றினார்கள், பல கமிட்டிகள் போட்டார்கள். இதையே தான் அந்த ஜனங்கள் பூமியில் விரும்பினார்கள் என்றும், பல எலெக்ஷன்களில் அவர்கள் தோற்று வருந்தினார்கள் என்றும், இங்கு தேர்தலில் ஜெயித்து அவர்கள் நாள் பூராவும் கூட்டங்கள் போட்டும் தீர்மானங்கள் நிறை வேற்றியும் ஆனந்தித்தார்கள் என்றும் தேவதை காரியிடம் சொல்லிற்று. சிறு சிறு சூரியன்கள் போல அவர்கள் முகங்கள் ஆனந்தத்தால் மலர்ந்திருந்தன.

காரி தலையை ஆட்டினாள். அவளுக்கு இந்த மாதிரியான விஷயங்கள் என்றுமே புரிந்ததில்லை என்றாள்.

கடைசியாக அத்தேவதை ஒரு பெரிய தோட்டத்தைக் காட்டியது: அங்கே பல தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டிருந்தனர். வாழ்க்கையிலே இவர்கள் தங்கள் குழந்தைகளை இழந்து வருந்தியவர்கள் என்றும், இங்கு காலம் பூராவையும் குழந்தை களுடன் கழிப்பதையே அவர்கள் விரும்பி எல்லையற்ற இன்பமாக ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லிற்று தேவதை. கனவுக் குழந்தைகள் போல அழகாக இருந்தன அக்குழந்தைகள். அவற்றிற்குப் பாலூட்டிச் சீராட்டிக் கொஞ்சிச் சிங்காரித்து அழகுபடுத்திப் பார்ப்பதிலே ஈடு பட்டிருந்தார்கள் அத் தாய்மார்கள் எல்லோரும். சுவர்க்கத்தில் கூட இத்தனை இன்பம் இருக்க முடியும் என்று அந்த ஸ்திரீகள் நினைத்ததில்லை என்று சொல்லும்படியாக இருந்தது.

பூலோகத்திலே தன் குழந்தைகள் தாயற்றவர்களாக கவனிப் பாரற்று இருந்தன என்று எண்ணிப் பார்க்கும்போது காரி வேறு யாருடைய குழந்தைகளையோ எடுத்துச் சீராட்டிப் பொழுது போக்க விரும்பவில்லை.

தேவதை வேறு ஒன்றும் தோன்றாமல் காரியை மீண்டும் கடவுள் முன் அழைத்துச் சென்றது. எதுவும் காரிக்குப் பிடிக்கவில்லை, என்ன பண்ணுவது என்று சொல்லியது தேவதை.

என்ன? என்று கூவினார் கடவுள். சுவர்க்கம் முழுவதிலும் உனக்குத் திருப்திதரக் கூடியது ஒன்றும் இல்லையா? என்ன இது?

மண்டியிட்டாள் காரி. திடுதிடுப்பென்று அழவே தொடங்கிவிட்டாள். எல்லாமே திருப்தியும் ஆனந்தமும் தருவதாகத்தான் இருக்கிறது. நான்தான் இதற்கெல்லாம் தகுதியற்றவளாக இருக்கிறேன், பாவி நான். ஆனால்...... ஆனால்.....

ஆனால் என்ன? பயப்படாமல், தயங்காமல் சொல்லு என்றார் கடவுள். அவரவர் சிரத்தையுடன் ஆசைப்படுவது அவரவருக்குச் சுவர்க்கத்தில் நிச்சயமாகக் கிடைக்கும்.

இந்த வார்த்தைகள் காரிக்குத் தைரியமூட்டின, அவள் சொன்னாள்: அது உண்மையானால், நான் திரும்பவும் பூலோகத்துக்குப் போகவே விரும்புகிறேன். எப்படி என் கணவர் பீட்டர் தன் பண்ணைக் காரியங்களை யெல்லாம் தனியாகச் சமாளிப்பாரோ அதுதான் எனக்குப் பெரும் பாரமாக இருக்கிறது.

சுற்றி நின்ற தேவதைகள் எல்லாம் திடுக்கிட்டுப் பயத்துடன் கடவுளின் முகத்தைப் பார்த்தன. சுவர்க்க போகம் வேண்டாம், பூலோகத்துக்கே போகிறேன் என்கிறாளே இந்த ஸ்திரீ என்று அவளைப் பார்த்தன .சுவர்க்கம் நீங்க, பூலோகம் அப்படி உயர்ந்ததாகிவிட்டதா? அடாடா? ஆனால் கடவுள் ஒரு புன்சிரிப்புச் சிரித்தார். உன் கணவனையும் இங்கு உடனேயே அழைத்துவரச் சொல்லி விடட்டுமா?

எனது தாழ்மையான வணக்கம் நன்றி என்றாள் காரி. அவரையும் அழைத்து வந்துவிட்டால், என் பிள்ளைகள் கிறிஸ்டியனும் ஸைமனும் அநாதைகளாகி விடுவார்களே அப்பாவும் அம்மாவும் இல்லாமல் அவர்கள் எப்படி என்ன செய்வார்கள்?

ஆமாம். அவர்கள் இருவரும் பூலோகத்தில் இன்னும் சில நாள் இருந்து என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே என் சித்தமும் என்றார் கடவுள். அப்படியானால் என்ன செய்யலாம், சொல்லு? நீயே சொல்லு.

பயந்த குரலில், நான் திரும்பவும் ஆஸென் போய்விட முடியாதா? என்று கேட்டாள் காரி.

அப்படி நீ விரும்பினால் உன்னை அனுமதித்தேயாக வேண்டும். எனக்கு வேறு வழியில்லை என்றார் கடவுள். ஆனால் உனது உடலை இப்போது புதைத்துவிட்டார்கள். நீ திரும்பிப் போனாலும் யார் கண்ணிலும் படமுடியாது. எதுவும் நீ செய்யவும் முடியாது.

பீட்டர் எங்கு சென்றாலும் நானும் அவருடன் செல்வேன். அப்படி நீங்கள் அனுமதித்தால்தான் இங்கு சுவர்க்கத்தில் உள்ள தேவதைகளை விட நான் சந்தோஷமாக இருப்பேன்.

அப்படியானால் நான் உன்னை அனுமதித்தேயாக வேண்டும் என்றார் கடவுள் நல்லதனமாக, திருப்தி யுடனேயே. காரியின் தலையில் தடவிக் கொடுத்தார். மீண்டும் அவளைப் பூலோகத்துக்கு அழைத்துச் செல்ல அத்தேவதைக்கு உத்தரவிட்டார்.

மேக மண்டலங்களைத் தாண்டி, ஆஸென்பண்ணை கண்ணில் படும் தூரத்தில் வந்தபோதே, காரிக்குச் சந்தோஷம் எல்லை கடந்து விட்டது. குடிசை, மாட்டுக் கொட்டில், வேலிகள் எல்லாவற்றையும் தூரத்திலிருந்தே அவள் அடையாளங் கண்டுகொண்டு விட்டாள். புகைபோக்கியி லிருந்து புகை வானத்தை நோக்கிக் கிளம்பிக்கொண்டிருந்தது. அவளுக்கு இங்கு வழி சரியாகத் தெரியுமாதலால், நீ போ என்று சொல்லிவிட்டுத் தேவதை அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது.

காரி அருகில் வந்ததும், காலைப் பொழுது என்று கண்டாள். வயல்களிலே புல்மேல், பனித்துளி படர்ந்திருந்தது. ஜனங்கள் தோள் மேலே கலப்பைகளைச் சார்த்திக்கொண்டு இடுப்பில் அரிவாளுடன் போய்க்கொண்டிருந்தார்கள். சிவப்புப் பசுவைக் கறந்து விட்டுக் கட்டுவதற்கு இழுத்து வந்தான் பீட்டர். அவனேதான் அன்று பால் கறந்திருந்தான். அவனுக்குப் பழக்கமில்லாத வேலை அதுபாவம் எங்கும் தெளித்துக் கொட்டியிருந்த பால்

பீட்டர் தன்னைக் கண்டுகொள்ளவில்லை என்று காரி கண்டாள். ஆனால் அவள் அவனைப் பின் தொடர்ந்து சமையலறைக்குச் சென்றாள். கணப்புக் கட்டைமேல் உட்கார்ந்து கொண்டு அவன் பாலை வடிகட்டுவதைக் கவனித்தாள். அதுவும் அவன் பழகாத வேலைதான். அஜாக் கிரதையாகவே செய்தான் அதை செய்ய வேண்டியமாதிரிச் செய்யவில்லை. பாலைத் தரையெல்லாம் சிந்தினான் வழக்கப்படி, பாத்திரம் எதுவும் சுத்தமாக இல்லை

, இப்படி செய்தால் பால் சீக்கிரமே புளித்துவிடும் என்று அந்த முட்டாளுக்குத் தெரியாதோ?

பிறகு அவன் படுக்கையறைக்குள் பையன்களை எழுப்பச் சென்றான். அவனுடன், அவனும் அறியாமலே, யார் கண்ணிலும் படாமல் காரியும் சென்றாள். பையன்களுக்கு உடைகள் அணிவிக்கும்போது அவர்களில் சிறுவனான ஸைமன், அம்மா வந்துவிட்டாளா, எப்போது வருவாள்? என்று கேட்டான். எப்போது பார்த்தாலும் ஏதாவது கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கக்கூடாது என்று கோபமாகப் பதில் அளித் தான் தகப்பன் அம்மா எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்துவிடுவாள் என்றான். காரி அவர்கள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்; கை நீட்டி விரலால் அவர்கள் கன்னங்களில் லேசாகத் தட்டினாள் ; ஆனால் அவர்கள் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. கிறிஸ்டியன் மட்டும் அவள் நின்றுகொண்டிருந்த பக்கம் அடிக்கடி திரும்பிப் பார்த்தான். ஆனால் அவள்தான் யார் கண்ணிலும் பட முடியாதே

அந்தச் சமயம் முதல் ஆஸென் பண்ணையில் காரிக்குப் புது மாதிரியான வாழ்வு தொடங்கிற்று. பையன்கள் காட்டுக்கு விறகு வெட்டிவரப் போகும்போது அவர்களைக் காப்பாற்ற அவர்கள் கண்ணில் படாமலே அவர்களுடன் அவளும் போய் வருவாள். பீட்டர் வைக்கோல் சுமையைத் தூக்கி வரும்போது, அந்தச் சுமையைக் கனமில்லாததாகச் செய்ய அவள் முயன்றாள். இரவுகளில் அவர்களில் யாரையும் எவ்விதமான பயமுறுத்தும் கெட்ட கனவும் அணுகாமல் பார்த்துக் கொண்டாள். ஞாயிறன்று காலையில் பீட்டர் எழுந்ததும் மாதா கோயிலுக்குப் போவது அவனுக்கு மறந்து விடாமல் நினைவூட்ட முயன்றாள் அவள். பசுக்களுக்கு வியாதி எதுவும் வந்துவிடாமல் பார்த்துக்கொள்வதற்காக அவள் தினம் ஒரு தரம் மாட்டுக் கொட்டிலுக்குப் போய் வந்தாள். இலையுதிர் காலத்திலே பனிக்குளிர் கரையும் நாளிலே அப்பனியால் பீட்டரின் விளையும் பயிர் வாடமல் தடுத்துக் காப்பாற்ற முயன்றாள்.

மாரிக் கால முடிவில் ஒரு நாள் பீட்டர் நகருக்குப் போய் வருவது என்று தீர்மானித்தான். காரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை . அவள் அவனுடன் போவதா? பையன்களுடன் வீட்டிலேயே தங்கி விட்டாள். அவர்கள் சமைக்கும்போதும், மாட்டுக் கொட்டகையில் வேலை செய்யும்போதும் அவர்களுடன் இருந்து எதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு உணர்வுறுத்த முயன்றாள்.

பீட்டர் வீடு திரும்பிய போது குடித்துவிட்டு வந்திருந்தான். அவளை அடித்தது மாதிரிப் பையன்களையும் போட்டு அடித்து விட்டான். ஆனால்

மறுநாள் அதுபற்றி மிகவும் வருந்தினான் மனக் கஷ்டப்பட்டான். நல்ல வேலையாக அவன் மனசாட்சி இன்னும் முழுவதும் அழிந்துவிடா திருந்தது.

ஒருநாள் அந்த வீட்டிற்குள் கையில் ஒரு மூட்டையுடன் ஒரு அந்நிய ஸ்திரீ வந்து சேர்ந்தாள். அவள் அதைத் தன் சொந்த வீடு போலவே பாவிக்கத் தொடங்கிவிட்டாள். சமையலறையிலும் மாட்டுக் கொட்டகையிலும் வேலை களை வலிய மேற் கொண்டாள். இன்னுஞ் சில நாட்களில் பீட்டரின் மனத்தில் மறுவிவாகம் பற்றிய சிந்தனை தலையெடுத்துவிட்டது என்று கண்டாள் காரி. பாவம் கிழட்டு வயதில் மறுபடியும் கலியாணம் பண்ணிக்கொள்ள ஆசை வந்துவிட்டது. பாவம் அவளைக் கட்டிக்கொண்டு மன்றாடிக் கொண்டிருக்கப் போகிறாயா? என்று எண்ணினாள் காரி. அந்நிய ஸ்திரீ வந்தவள், தன் துணிமணிகளையும் ஆடை களையும் உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு காரி பேசாதிருக்க வேண்டியதாக இருந்தது. பின்னர் வஸந்த காலத்தில் கலியாணத்திற்கான ஏற்பாடுகள் நடந்தன. அண்டை அசலார் குறிப்பிட்ட ஒருநாள் வந்து வெகுமதிகள் வழங்கி, கலியாண ஜோடியை வாழ்த்தி விருந்துண்டுவிட்டு, மது அருந்திச் சந்தோஷம் தெரிவித்துவிட்டு சென்றனர்.

பையன்களோ வெட்கப்பட்டவர்களாக, அடக்கமாக யாருடனும் அதிகமாகக் கலந்து பேசாமல் தங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு ஒதுங்கி நின்றனர். அவர்களுக்காவது தங்கள் தாயாரைப் பற்றி நினைவிருந்ததே அது விஷேசம் தானே? காரியும் யாருடைய கண்ணிலும் படாதவாறு மதாலயத்துக்குப் போய்க் கல்யாணச் சடங்குகளை தூரத்தி லிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். பீட்டருக்கும் வேறு ஒரு ஸ்திரீக்கும் திருமணமாவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இது மிகவும் மோசம் என்று எண்ணினாள் காரி. பீட்டருடைய தலைத்துண்டைக்கூட அவளால் சரியாக முடிந்துவிட முடியவில்லை . அலட்சியமாகக் கருத்தில்லாமல் முடிந்திருக்கிறாள். நான் தான் எவ்வளவு கருத்துடன் செய்வேன் அதை?

பீட்டர் விஷயத்தில் எல்லாம் அதற்குப் பிறகு ஏறுமாறக நடந்தன. அவனும் அவன் புது மனைவியும் அடிக்கடி சண்டையிட்டு கொண்டார்கள். மாற்றந்தாய் பையன் களையும் கொடுமைப் படுத்தினாள். பாதிநாள் இரவு அவர்கள் இருவரும் அழுதுகொண்டே தான் தூங்கினார்கள்.

இது எல்லாவற்றையும் கடவுளும் பார்த்துக்கொண்டேயிருந்தார். அவர் தன் தூதர்களில் ஒருவனை அனுப்பி காரி இப்பொழுதாவது சுவர்க்கத்துக்கு வர விரும்பினாளா என்று கேட்டார்.

மாட்டேன் என்றாள் காரி, தீர்மானமாக. அங்கேயும் என்னால் ஒருநாள் கூடச் சந்தோஷமாக நிம்மதியாக இருக்க முடியாது. என் கணவர் என்ன ஆனாரோ என்று ஒரே கவலையாக இருக்கும். இப்படியே எத்தனை நாள் என்ன நடக்கிறதோ, அதையும் பீட்டருக்கு அருகில் இருந்தே கவனித்துக் கொள்ளுகிறேன் என்றாள் காரி. அங்கேயே பூலோகத்தில் ஆஸென் பண்ணையிலே, யார் கண்ணிலும் படாமல் தங்கிவிட்டாள். புது மனைவி வந்த நாட்களுக்குப் பிறகு பீட்டருக்கு அடிக்கடி தன் காதலியை பற்றி நினைவு வரத்தொடங்கியது. தன் பிள்ளைகளுடன் அடிக்கடி தன்னைப் பற்றிப் பேசுவதைக் கேட்டு அவள் சிந்தித்தாள்.

வருஷங்கள் பல சென்றன. பையன்கள் பெரியவர்களாகி மதாலயத்திலே தனியாக, தங்களுக்குரிய ஸ்தானங்களில் அமர்ந்தனர். பொருளீட்டினார்கள். சௌக்கியமாகவே வாழ்ந்தார்கள். ஒருவன் ஒரு குடியானவனின் பெண்ணைக் கலியாணங் கட்டினான். பண்ணையும் தோட்டமும் வீடும் பெண்ணுடன் அவனுக்குக் கிடைத்தன. மற்றவன் பணமுள்ள பெண்ணொருத்தியைக் கலியாணம் செய்து கொண்டு, அவள் கொணர்ந்த பணத்துக்குப் பல படகுகளும் மீன் வலைகளும் வாங்கிப் பெரிய அளவில் மீன் பிடித்து வியாபாரம் செய்தான்.

அவர்களுடைய பெரிய படுக்கையில் ஒருநாள் பீட்டர் உடம்பு சரியாக இல்லை என்று படுத்து விட்டான். படுக்கை ஓரத்திலே காரியும் உட்கார்ந்திருந்தது முதலில் அவனுக்குத் தெரியவில்லை. கடைசியில்தான் அவன் நிமிர்ந்து பார்த்து அவளை அறிந்து கொண்டான்.

ஓ நீயா? காரியேதான? என்றான் அவன்.

ஆமாம், கடவுள் புண்யத்தால் இது நானேதான். மறுபடியும் கூடிய சீக்கிரமே நாமிருவரும் சேர்ந்து வசிக்க தொடங்கலாம். அதுவும் நல்லதுதான் என்றாள் காரி.

வேறு ஒரு ஸ்தீரியை நான் கல்யாணம் செய்து கொண்டேன் என்று உனக்கு அதிகக் கோபமாகத்தான் இருக்கும் இல்லையா? என்றான் பீட்டர். அவன் குரலிலே துயரம் தேங்கியிருந்தது.

தன் நெற்றியைத் துடைத்துக்கொண்டு காரி, நான் உன்னை மன்னித்து விடுகிற மாதிரிக் கடவுளும் உன்னை மன்னித்து விடுவாராக என்றாள்.

அறைக்குள் வந்து போன அவனது இரண்டாவது மனைவி, என்னவோ பிதற்றிக் கொண்டிருக்கிறாயே என்று அவனை விரட்டினாள். மதகுருவுக்கு ஆளனுப்புகிறேன் என்றாள்.

கடைசியில் பீட்டருக்கு விடுதலை கிடைத்துவிட்டது. இருவருமே காரியும் பீட்டரும் சேர்ந்தே தேவதை வழிகாட்ட, சுவர்க்கத்துக்குப் போனார்கள். கடவுள் முன் போய் நின்றார்கள்.

இருவருக்கும், முன் போல நல்வரவு கூறினார் கடவுள். எப்படி சுவர்க்கத்தில் தங்கள் காலத்தைக் கழிக்க விரும்பினார் களோ அப்படிக் கழிக்கலாம் என்று சொல்லித் தேவதையுடன் சுவர்க்கத்தைச் சுற்றிப் பார்த்துவர அனுப்பினார்.

சுவர்க்கத்தில் அவர்கள் பார்க்க வேண்டிய அதிசயங்களை யெல்லாம் கடவுளின் தூதன் அவர்கள் இருவருக்கும் காட்டினான். அவர்கள் மறுபடியும் கடவுளின் முன் போனபோது, என்ன பீட்டர் ஆஸென், நீ தீர்மானம் செய்து விட்டாயா? நீயும் உன் மனைவியும் எப்படி, எங்கே தங்க விரும்புகிறீர்கள்? என்று கேட்டார்.

தனக்கு எது இஷ்டமானாலும் அது கிடைக்கும் என்று பீட்டருக்குத் தெரியவே, சற்றுத் தயக்கத்துடனேயே அவன் சொன்னான்; ஒரு சிறு நிலம், தந்து சுவர்க்கத்தில் எங்கு வசிக்க சொன்னாலும் பண்ணைக் குடியானவனாக, நான் என் மனைவியுடன் வசிக்கத் தயார் கடவுளே என்றான். இந்த ஆனந்தத்துக்கு நாங்கள் தகுதியற்றவர்கள்; எனினும், உங்கள் கிருபை...

இதைக் கேட்ட கடவுள் உரக்கச் சிரித்தார். பக்கத்திலிருந்த தேவதையிடம் சொன்னார் அவர்களை அந்தப் பெரிய மைதானத்துக்கு அழைத்துப் போய் தேவையான நிலத்தைக் கொடு ஒரு குடிசை நிர்மாணித்துக் கொள்ளப் போதுமான மரமும் ஆண்களும் கொடு என்று உத்தரவிட்டார். சுவர்க்கத்தில் வேறு பகுதிக்கு அவர்களை அழைத்துச்சென்று நிலத்தைக் காட்டிற்று அத்தேவதை, நேர்த்தியான நிலம். அதைக்காட்டி எத்தனை வேண்டும் என்று கேட்டது தேவதை.

காரியும் பீட்டரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பீட்டர் சொன்னான். பூலோகத்திலே எங்களுக்கு மூன்று பசுக்கள் இருந்தன. இங்கு இரண்டே போதும் என்றான்.

இரண்டு பசுக்களையும், அவற்றிற்குத் தேவையான நிலத்தையும் அவர்களுக்குத் தந்தது தேவதை. தேவையான போது தேவையான

நிலத்தைத் தருவதாகச் சொல்லிற்று தேவதை.இவ்வளவு சுகமாக என்றும் பூலோகத்தில் தாங்கள் இருந்ததில்லை என்று எண்ணினார்கள் காரியும் பீட்டரும்.

இருவரும் உடனேயே பண்ணை வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டார்கள். புதுசாகக் கலியாணமாகிக் குடித்தனம் போட்டவர்கள் போல வேலை தொடங்கினார்கள். நிலத் திருத்தி உழு பயிர் செய்யப் பதன் செய்தார்கள். நெற்றி வியர்வை விழ நிலத்தில் பாடுபட்டார்கள். ஒருவரை ஒருவர் அடிக்கடி பார்த்துச் சிரித்து கொண்டார்கள். ஆஸெனில் இருந்தது போலவே ஒரு சிறு குடிசையைத் தாங்களே நிர்மாணித்துக் கொண்டார்கள். மாலையிலே வேலை செய்யும் தன் கணவனுக்கு மனைவி உணவு எடுத்துப் போவாள். சுவர்க்கத்திலே தங்களைப்போலேவே எவரும் இவ்வளவு சந்தோஷமாக இல்லை என்பதே அவர்கள் இருவருடைய அபிப்ராயம். அவ்வளவு சந்தோஷமாகச் சேர்த்து உழைத்து வாழ்ந்தார்கள் அவர்கள்.

முற்றும்